பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 191 வைகாசி 25ஆம் நாள் சனிக்கிழமை 08 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dip/HND in
Business Management
Leading to BBA Hons
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# தெரிவுக்குழுவை கலைக்கும்வரை அமைச்சரவைக் கூட்டம் இல்லை

- பணிஇடைநிறுத்தப்பட்டவர்களின் வாக்குமூலங்கள் எதற்கு?
- பதவியிலிருப்போர் வாக்குமூலம் வழங்க அனுமதியேன்
- பிணைமுறி மோசடி விவகாரத்தில் பலரை சிறையிலடைப்பேன்

**நேற்று இரவு திடீரென கூட்டப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் சீறினார் மைத்திரிபால**

கொழும்பு, ஜூன் 8

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைகளை உடனடியாக நிறுத்தவேண்டும். அதுவரையில் அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்தப்படாது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று 'வெள்ளிக்கிழமை' இரவு 'ஏழரை' மணிக்கு கூட்டிய சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். சபாநாயகருக்கு எதிராகவும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்த அரச தலைவர் மைத்திரிபால, கூட்டத்திலிருந்து இடைநடுவில் வெளியேறியுள்ளதாகக் கூறப்படுகின்றது. 19

## நாடாளுமன்ற தெரிவுக்குழு விசாரணைக்கு முன்னிலையாகாதவர்களை தண்டிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஒருவரை அழைத்து அவர் சாட்சியமளிக்க முன்னிலையாகா விட்டால் அவரைத் தண்டிக்க முடியும் என்று தெரிவுக்குழு உறுப்பினரும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் நிறைவேற்றுத்துறை எங்கு தவறிழைத்தது என்பது தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு விசாரணை முன்பாக, பாது 07

விமல், எஸ்.பிக்கு எதிராக

## பொலிஸ் தலைமையகத்தில் ரிசாத் முறைப்பாடு!

கொழும்பு, ஜூன் 8

மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, எஸ்.பி.திசாநாயக்க ஆகியோருக்கு எதிராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன் 04

## எமது பிரச்சினையை ஐ.நாவிடம் சொல்வோம்

*ரிசாத் சூளுரை*

கொழும்பு, ஜூன் 8

எமது மக்களின் பிரச்சினையை, எமது சமூகம் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் என்பன குறித்து ஐக்கிய நாடுகள் சபையிடம் சொல்லவுள்ளோம். இலங்கையில் உள்ள ஐ.நா. பிரதிநிதியை இதற்காக விரைவில் சந்திக்கவுள்ளோம். அதேபோல் இஸ்லாமிய பன்னாட்டுக் கூட்டமைப்பின் கவனத்துக்கும் கொண்டுவர 04

## உலகில் நாமே பெரும்பான்மை இலகுவாக அடக்கி விடமுடியாது

*கொக்கரிக்கிறார் ஹிஸ்புல்லா*



கொழும்பு, ஜூன் 8

நாங்கள் இந்த நாட்டில் மட்டும்தான் சிறுபான்மை. உலகளவில் நாம் பெரும்பான்மையினர். எம்மை இலகுவாக அடக்கி ஒடுக்கி விட முடியும் என்று யாரும் நினைத்து விடக் கூடாது. இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் ஆளு 07

## அமைச்சர்களின் பதவி விலகல்களால் முஸ்லிம்கள் மீதான சந்தேகம் அதிகரிப்பு

*சபையில் கூறியது மகிந்த அணி*

கொழும்பு, ஜூன் 8

வெளிநாட்டு அழுத்தத்தாலேயே முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர். இது தொடர்பாக புலனாய்வுத்துறை தேடிப்பார்க்க வேண்டும். இவர்களின் பதவி விலகலின் மூலம் சாதாரண முஸ்லிம்களையும் பயங்கரவாதிகளாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். 07

## இந்தியாவின் பாதுகாப்புக்கு வடகிழக்கு இணைவு அவசியம்

*மோடிக்கு சம்பந்தனை இடித்துரைக்க கோருகின்றார் சுரேஸ் பிரேமசந்திரன்*

யாழ்ப்பாணம், ஜூன் 8

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகள் முஸ்லிம் அடிப்படைவாதிகளின் தளமாக இருக்கக் கூடாது. அவ்வாறான நிலைமை உருவானால் அது இலங்கைக்கு மட்டுமல்ல நட்பு நாடான இந்தி 19

## மூங்கிலாறு விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜூன் 8

முல்லைத்தீவு பரந்தன் வீதியில் மூங்கிலாற்றுப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் உந்துருளி 19



## நவீன தொடர்பாடல் உபகரணங்களுடன் சீனக் குடிமகன் கைது

17 ஆயிரம் சிம்கள் மீட்பு 19

## ஜிகாத் தீவிரவாதத்தை அழிக்க இந்தியா உதவும்!

*தரன்ஜித் சிங் சந்து தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 8

ஜிகாத் தீவிரவாதம் பிராந்திய சமாதானத்துக்கும் உலக சமாதானத்துக்கும் ஆபத்தானது. அதனை தனிமைப்படுத்தி அழிக்கவேண்டும் என்று இலங்கைக் 19

யாழ். சுகாதார

## பதில் பணிப்பாளராக சத்தியமூர்த்தி தொடர்வார்

*கொழும்பு சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியது*

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக, யாழ்ப்பாணப் போதனா 04

நவாலியில் நேற்றிரவு

## மாணவன் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 8

நவாலியில் வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல், மாணவனை வெட்டிக் காயப்படுத்தி 19

# பௌத்தத்துக்குரிய முக்கியத்துவம் ஏனைய மதங்களுக்கும் வழங்கவும்

## இலங்கைக்கு விடிவு கிடைக்க இதுவே வழி என்கிறார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, ஜூன் 8

பௌத்த மதத்துக்கு வழங்கப்படும் இடம், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதங்களுக்கும் வழங்கப்பட்டால் மட்டுமே இலங்கைக்கு விடிவு நாளாக அமையும் என்று அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய பாதுகாப்பு மற்றும் இலங்கையின் உள்விவகாரத்தில் வெளிநாடுகளின் தலையீடு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலில் இந்திய வம்சாவளியினர், இரண்டாவது தமிழர்கள், மூன்றாவது முஸ்லிம்கள் என்று இனவெறித்தாக்குதல்கள் தொடர்ந்ததால் இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் இல்லாது போயுள்ளது.

நாட்டில் மீண்டும் சமாதானம் ஏற்படவேண்டுமானால் முதலில் மொழிகளுக்கு உரிய இடம் கொடுக்கப்பட வேண்டும். தமிழ் மொழியும் சிங்கள மொழியும் ஒன்றாகப் பேணப்பட வேண்டும். அதேபோன்று சமயங்களுக்கான இடம் கொடுக்கப்பட வேண்டும். பௌத்த மதத்துக்குரிய இடம், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதங்களுக்கும் கொடுக்கப்பட்டால் மட்டுமே இந்த நாட்டில் அமைதி திரும்பும். அந்த நாள்தான் இலங்கைக்கு விடிவு நாளாக அமையும் - என்றார். (ஒ.5)

## கட்டாய விடுப்புக்கு எதிரானமனு 24இல் பரிசீலிக்க மன்று முடிவு

கொழும்பு, ஜூன் 8

தனக்கு வழங்கப்பட்டுள்ள கட்டாய விடுமுறையை நிறுத்தி மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு கோரி பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் 24 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, பிரசன்ன ஜயவர்தன மற்றும் டு.வு.டீ. தெஹிதெனிய ஆகியோர் முன்னிலையில் நேற்று இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுவின் சில பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் கிடைக்கவில்லை என்று சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் இந்திகா தேவமுனி மன்றுக்கு அறிவித்தார்.

இந்த விடயத்தை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம், அனைத்து பிரதிவாதிகளுக்கும் மீண்டும் பதிவுத் தபாலில் அறிவித்தலை அனுப்புமாறு மனுதாரர்களுக்கு உத்தரவிட்டது.

அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் 12 ஆம் திகதியின் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கான கட்டளையை பிறப்பிக்குமாறும் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது தரப்பினரின் கோரிக்கை அத்தியாவசியமானதொன்று என்பதால் அது தொடர்பான மனுவை விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என மனுதாரரான பூஜித் ஜயசுந்தர சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி விரான் கொரயா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம் அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் 24 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்டது. (ஒ.5)

## 15 ஆண்டுகளில் நாடு பாலைவனமாக மாறும்

### மைத்திரி எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 8

சுற்றுச்சூழலை பாதுகாக்காது விடின் எதிர்வரும் 15 - 20 ஆண்டுகளில் நாடு பாலைவனமாக மாறுவதை தடுக்க முடியாது. சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய அக்கறையோடு மனிதர்கள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் உயிர்வாழ்வதற்கான உரிமையை பாதுகாக்கவும் நாடு பாலைவனமாக மாறுவதை தடுக்கவும் அனைவரும் தத்தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்தார்.

கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட துனுமடலாவ பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்திலுள்ள பைன் மரங்களை அகற்றி அதற்கு பதிலாக அங்கு உள்நாட்டு வன வளர்ப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே அரச தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

தூய்மையான பசுமை நகரைக் கட்டியெழுப்பி, உயிர்ப்பல்வகைமையை பாதுகாக்கும் துரு பிரஜாவ எனும் பெயரில் இந்தச் செயற்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதனை ஆரம்பித்து வைக்கும் முகமாக அரச தலைவர் அங்கு இலுப்பை மரக்கன்றொன்றை நடுகை செய்தார்.

நிகழ்வில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அரச தலைவர், 28 சதவீதமாகக் காணப்படும் நாட்டின் வனப் பரம்பல் வருடாந்தம் 1.5 சதவீதமாக குறைவடைந்து வருகின்றது. தொடர்ச்சியாக இவ்வாறு வனப்பரம்பல்வீழ்ச்சியடையுமாயின் 15 - 20 ஆண்டுகளுக்குள் நாடு பாலை வனமாக மாறுவதைத் தவிர்க்கமுடியாது. எதிர்கால சந்ததியினரின் நன்மைக்காக நாட்டின் வன வளங்களைப் பாதுகாப்பதற்கு அனைவரும் நிபந்தனைகளின்றி ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ஒ.5)

விபத்துக்களால்

## 10 வருடங்களில் 27,161பேர் சாவு

கொழும்பு, ஜூன் 8

கடந்த பத்து ஆண்டுகளில் 27ஆயிரத்து 161பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். 30 ஆண்டுகாலப் போரில் உயிரிழந்தவர்களுக்கு நிகரானதாகும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாரதிகளின் கவனயீனத்தால் கடந்த பத்து ஆண்டுகளில் 27 ஆயிரத்து 161பேர் உயிரிழந்திருக்கின்றனர். இந்த உயிரிழப்பானது கடந்தகாலப் போரின்போது உயிரிழந்தவர்களின் தொகைக்கு நிகரானது என்றே தெரிவிக்கப்படுகின்றது.

போதையுடன் வாகனங்களை ஓட்டுவதால் சாரதிகளைவிட பாதசாரிகளே அதிகம் விபத்துக்களில் உயிரிழந்திருக்கின்றனர். இதனை அடிப்படையாகக்கொண்டே போக்குவரத்து சட்டத்தை மீறுவோருக்கான தண்டப்பணத்தை 25ஆயிரம் ரூபாவரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நான் இந்த அமைச்சுக்கு பொறுப்பாக இருக்கும்போதே இந்த சட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டேன். தற்போது அதனை நிறைவேற்றி இருப்பதையிட்டு போக்குவரத்து அமைச்சருக்கு நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

சாரதிகள் அலைபேசியை பயன்படுத்திக்கொண்டு வாகனங்களை ஓட்டுகின்றனர். அதனை கருத்திற்கொண்டே சட்டத்தில் அலைபேசி பாவனை தண்டனைக்குரிய குற்றமாக தெரிவித்திருப்பது காலத்துக்கு தேவையான சட்டமாகவே காண்கின்றேன். 2017இல் தொடருந்துப் பாதைகளில் செல்பி எடுக்கச்சென்றதில் 24 இளைஞர்கள் உயிரிழந்திருக்கின்றனர். தொடருந்து குறுக்கு வீதிகளில் வாகனங்கள் தொடருந்து மோதியதில் 86 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. தொடருந்து பாதுகாப்பு கடவைகளில் சமிக்ஞைகளை பொருட்படுத்தாமல் செயற்பட்டதால் 439 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. தொடருந்துப் பாதைக்கு குறுக்காக சென்றமையால் 196 விபத்துக்களும் தொடருந்துப் பாதையில் பயணிப்பதன் மூலம் 231 விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன. சாரதிகள் மாத்திரமல்ல பாதசாரிகளும் கவனயீனமற்று செல்கின்றதாலே இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. வீதி விபத்துக்கு தண்டனையை அதிகரிப்பது மாத்திரமன்றி விபத்துக்களை குறைப்பது தொடர்பாக வெளிநாடுகளுடன் இணைந்து ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சாரதிகளுக்கு புள்ளி வழங்கும் முறை ஒன்றை ஏற்படுத்தி விபத்துக்கள் இடம்பெறும் பட்சத்தில் புள்ளிகளை குறைத்து, இறுதியில் அவரது சாரதி அனுமதி பத்திரத்தை நீக்கும் வேலைத்திட்டத்தை நான் ஆரம்பித்திருந்தேன். இந்த முறை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இருந்து வருகின்றது. இதற்கு பாதுகாப்பு துறையின் ஒத்துழைப்பும் தேவையாகும்- என்றார். (ஒ.5.31)

### மைத்திரியின் தீர்மானத்தால்

## சவப்பெட்டியைக்கூட கொள்வனவு செய்ய முடியாத நிலமை ஏற்படும்

### கூறுகிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, ஜூன் 8

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் யோசனைக்கு அமைவாக தச்சுதொழில் நிலையங்கள் மற்றும் மர ஆலைகளை மூடினால் சவப்பெட்டியைக் கூட கொள்வனவு செய்ய முடியாத நிலமை ஏற்படும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

காடழிப்பை தடுப்பதற்காக இலங்கையிலுள்ள மர ஆலைகளை மூடும் யோசனையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்வைத்துள்ளார். இது தொடர்பில் நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் இந்த யோசனையை மீள்பரிசீலனை செய்யவேண்டும். இதனை நடைமுறைப்படுத்தினால் பல ஆயிரக்கணக்கானோர் தொழில் வாய்ப்புக்களை இழக்க நேரிடும்.

மரம் வெட்டுவதற்காக் வளர்ப்புத் திட்டம் ஏற்படுத்த வேண்டும். மரக்குற்றிகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய முடியும் - என்றார். (ஒ.5)

# இந்திய கிரிக்கெட் அணிக்காக ஜி.வி.பிரகாஷ் உருவாக்கிய சிறப்பு பாடல்



ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் 5க்கும் மேற்பட்ட படங்கள் வெளியீட்டுக்கு காத்திருக்கின்றன. மேலும் 5 படங்களில் நடித்துக்கொண்டு இருக்கிறார். இவை தவிர சூர்யா நடிப்பில் 'சூரரைப்போற்று', தனுஷ் நடிப்பில் 'அசுரன்' ஆகிய படங்களுக்கு இசையமைத்தும் வருகிறார்.
இந்தப் பணிகளுக்கு இடையே சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.
சினிமா மற்றும் சமூக பணிகளுக்கு இடையே உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டுள்ள இந்திய அணியின் வெற்றிக்காக ஒரு பாடலை உருவாக்கி இருக்கிறார்.
இந்த பாடல் நாளை இந்தியாவின் முதல் போட்டி யின் போது வெளியாக இருக்கிறது.

## சந்தேகம்

பொன்மொழிகள்

சந்தேகத்தைப் போல் விரைவாக வளரும் விச விருட்சம் வேறெதுவுமில்லை.

**காண்டேகர்.**

விசாரணைக்குக் கதவுகள் மூடப்பட்டால் சந்தேகம் சன்னல் வழியாக வரும்.

**பெஞ்சமின் ஜோவெட்.**

சந்தேகம் எனும் புண்ணை விவாதங்களினாலும், விளக்கங்களினாலும் குணப்படுத்த முடியாது.

**மகாத்மா காந்தி.**

நமது சந்தேகங்கள் பகைவர்கள். முயற்சி செய்யப் பயப்படுவதினால் நிச்சயம் வெற்றி பெறுவதில் கூட தோல்வி அடைகிறோம்.

**சேக்ஸ்பியர்.**

சந்தேகமே கண்டுபிடிப்புகளின் தந்தை.

**கலிலியோ.**

சந்தேகத்தின் தாய் அறியாமை.

**வில்லியம் ஆஎ. ஆல்ஜெர்.**

எமக்குக் குறைவாகத் தெரிந்திருக்கும் போது அதிகமாகச் சந்தேகப் படுகிறோம்.

**ஹென்றி லீவர் ஷடி.**

எங்கு சந்தேகம் இருக்கிறதோ, அங்கு உண்மையும் உள்ளது. உண்மையின் நிழல் அது.

**கேமலியல் பெயில்வி.**

உங்களது தவறில்லாமலிருக்கலாம்; ஆனால், சந்தேகத்துக்குரியது.

**ரிச்சர்ட் வாட்லி**



## பெண்ணே!!

கூட்டு எதிர்க்கட்சியைப் போல் காலம் சதி செய்ய,

சம்பந்தரின் தீர்வைப் போல் ஏமாற்றி,

முஸ்லிம் அமைச்சர்களைப் போல் ஒரேயடியாகச் சென்று விட்டாய்...

ஞானசாரரைப் போல் உன்னை மிரட்ட மாட்டேன்..

சுமனரத்ன தேரரைப் போல் உயிரைப் பணயம் வைக்க மாட்டேன்..







## twitter



செந்திலின்_கிறுக்கல்கள் @Annaiinpillai

சமூக ஆர்வலருக்கும் சமூகத்துக்கும் என்றுமே ஒத்து போகாது!



நாராயணன் ராமசுப்பு

கால்களுக்கு எவ்வளவு வலு வென்பதை பாதைகளைவிட பசியே தீர்மானிக்கிறது.

## சிந்தனை....!

- பிறருடைய குற்றத்தை எளிதில் காண முடிகிறது.
- ஆனால், தன்னுடைய குற்றத்தைக் காண்பது கடினமாக இருக்கிறது.
- பிறருடைய குற்றங்களை உமியைத் தூற்றுவது போன்று தூற்றுகிறவர், மிருகங்களின் தோலைக் கொண்டு தன்னை மறைத்துக் கொள்ளும் வேட்டைக்காரனைப் போலத் தன் சொந்தக் குற்றத்தை மறைத்துக் கொள்கிறார்.
- எப்போதும் பிறருடைய குற்றத்தையே தேடிக் கொண்டிருப்பவர்கள் எளிதில் கோபத்தின் வசம் ஆட்படுகிறார்கள்.
- தங்களுடைய குற்றங்களை அழிக்க முடியாத அளவுக்கு வளர விட்டு விடுகிறார்கள். புத்த பகவன்




நாலு நாள் லீவு எப்படி போச்சுனே தெரியல. நாளைக்கு வேலைக்கு போகனும்.

இன்னும் ஆறு மாசம்,23 நாள்களில் இந்த வருசம் முடிஞ்சுடும்

சம்பந்தன் ஐயா 2010-தீபாவளிக்கு தீர்வு கொடுப்பேன்னு வாக்குக் கொடுத்தேன். இப்போ 2019 தீபாவளியும் வரப்போகுது..


நைட் படுத்தேன் முழிச்சி பாத்தா டைம் 12 30 ...








# போட்டிச்சண்டை



ஒரு சிறிய குட்டையொன்றில் தண்ணீர் குடிப்பதற்குச் சிங்கமும் பன்றியும் வந்து நின்றன. குட்டையில் இருந்த தண்ணீர் இரண்டுக்கும் போதுமானதாக இல்லை. எவர் முதலில் குடித்தாலும் மற்றவருக்குப் போதிய தண்ணீர் தாகம் தீர்க்கக் கிடைக்காது. இதை உணர்ந்த சிங்கமும் பன்றியும் யார் முதலில் தண்ணீர் குடிப்பது என்று யோசித்தன. சிங்கம் தண்ணீர் குடிக்கத் தொடங்கியது. பன்றியும் குடித்தது. பன்றி குடிப்பதைப் பார்த்த சிங்கம் தான் குடிப்பதை நிறுத்தி விட்டு பன்றியுடன் சண்டை போடத் தொடங்கியது. பன்றியும் விடவில்லை. மும்முரமாகச் சண்டை போட்டன.

சண்டை உக்கிரம் அடைந்த நிலையில் பசியுடன் இரை தேடி வந்த கழுகு ஒன்று குட்டையின் அருகில் நின்ற ஆலமரத்தில் வந்து அமர்ந்தது. மரத்தின் உச்சிக் கொப்பில் அமர்ந்து சிங்கத்தையும் பன்றியையும் பார்த்தது. இரண்டும் சண்டை போட்டு ஒன்றை ஒன்று கொன்ற பின் அவற்றின் இறைச்சியைத் தான் உண்ணலாம் என எதிர்பார்த்து காத்திருந்தது.

சண்டையைச் சகித்துக் கொண்டிருந்த கழுகு இப்போது சண்டையிட்டு களைத்துப் போன பன்றியும் சிங்கமும் தரையில் படுத்து சற்றுவேளை இளைப்பாறத் தொடங்கின. அப்பொழுது தற்செயலாக ஆலமரப் பக்கம் மேலே அண்ணாந்து பார்த்த சிங்கம் அங்கே உட்கார்ந்திருந்த கழுகைக் கண்டது. கழுகு மரத்தின் உச்சியில் இருப்பதை ஜடையால் பன்றிக்கும் காட்டியது. இரண்டுக்கும் இப்போது கழுகு அமைதியாகத் தங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதன் நோக்கம் புரிந்தது. அப்போது சிங்கம் "அதோ கழுகு அமைதியாக எங்களையே பார்த்துக் கொண்டிருந்தது. எமது இறப்பு கழுகுக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது. இதனது தீயதான சிந்தனையையும் மகிழ்ச்சியையும் நாம் எமது ஒற்றுமையால் உடைத்தெறிய வேண்டும். நாம் சண்டையிட்டு அதற்கு இரையாவதை விட சமாதானமாகி நண்பர்களாகி இருக்கும் நீரைப் பகிர்ந்து அருந்தி உயிர்வாழ்வோம் வா என்று பன்றியை அழைத்தது.

இப்போது இரண்டும் எழுந்தன. மீண்டும் சண்டை ஆரம்பமாகப் போகிறது என எண்ணிய கழுகு தனது நீண்ட சிறகை அடித்து ஆர்ப்பரித்தது. ஆனால் கழுகு நினைத்தது நடக்கவில்லை. குட்டையில் இறங்கிய சிங்கமும் பன்றியும் நீரைப் பங்கு போட்டு அருந்தின. தனது தீய நோக்கம் நிறைவேறாமல் போகவே கழுகு அவ்விடம் விட்டு பறந்து போனது. எமக்குள் ஏற்படும் பிரச்சினைகளை நாமே சமாதானமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் அது எமது எதிரிக்கு சாதகமான வாய்ப்பாகி விடும். எமக்கும் அழிவுதான்.



## எனது பொழுதுபோக்கு

- நாம் எமது ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வகையில் செலவிடுவதைப் பொழுதுபோக்கு என்போம்.
- நானும் எனது பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களைப் பயனுள்ள வழியில் செலவிடுகிறேன்.
- நான் ஒரு வீட்டுத்தோட்டம் வைத்திருக்கிறேன். அங்கே என் ஓய்வு நேரத்தைச் செலவிடுவேன்.
- தோட்ட நிலத்தைக் கொத்திப் பண்படுத்தியுள்ளேன்.
- நாற்று மேடைகள் அமைத்து விதைகளைத் தூவியுள்ளேன்.
- வித்துக்கள் முளைத்து வளர்ந்துள்ளன.
- பாத்திகளை அமைத்து முளைத்து வந்த சிறிய செடிகளை அவற்றுள் நட்டுள்ளேன்.
- காலையும் மாலையும் அவற்றுக்கு நீர் ஊற்றுவேன்.
- இப்போது கத்திரி, வெண்டி, மிளகாய் வகைகள் நிறையக் காய்த்துள்ளன.
- சத்துள்ள கீரை வகைகள் பசுமையாக வளர்ந்துள்ளன.
- நான் இவற்றுக்கு இயற்கைப் பசளைகளான இலை, குலை, மாட்டெரு, ஆட்டெரு என்பவற்றை இட்டு வருகிறேன்.
- குழியை வெட்டி அதனுள் இவற்றை இட்டு மூடி கிளறி நீர் ஊற்றி நல்ல பசளை தயாரிப்பேன்.
- எனது இந்த பொழுது போக்கில் என் தம்பி, அக்கா ஆகியோரும் பங்களிப்புச் செய்வர்.
- இந்தப் பொழுது போக்கால் எமது வீட்டுச் சமையலுக்கான காய்கறிகள் கிடைப்பதோடு சிலவற்றை அப்பா சந்தைக்கும் எடுத்துச் சென்று பயன்பெறுவார்.
- ஓய்வு நேரங்களில் புத்தகங்களை வாசிப்பதாலும் நிறைய வாழ்க்கைக்குத் தேவையான தகவல்களை அறியலாம்.
- என் பொழுது பகலில் வீட்டுத்தோட்டத்திலும் இரவில் நூல்களை வாசிப்பதிலும் கழிகிறது.

## எமது...

வுள்ளோம் என்று முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முறைப்பாட்டைப் பதிவு செய்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது அமைச்சின் கீழ் இருந்த சதொச நிறுவனத்தின் வாகனங்கள் ஸஹ்ரானின் நாசகார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன எனவும், அவரது தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு நான் உதவி செய்தேன் எனவும் விமல் வீரவன்ச முழுப் பொய்யைக் கூறியதுடன் கிளிப்பிள்ளை போன்று திரும்பத் திரும்ப அதே பொய்யைப் பரப்புகின்றார். விமலுக்கு முதுகெலும்பு இருந்தால் இதனைச் சாட்சியங்களுடன் நிரூபிக்குமாறு சவால் விடுக்கின்றேன்.

அதேபோன்று கடந்த 'ஒக்ரோபர் 26 அரசியல்சூழ்ச்சியின்போது 52 நாள்கள் ஆட்சியில் இருந்த மகிந்த அரசுக்கு எனது உதவியைக் கேட்டு, அது சாத்தியப்படாததால் விரக்தி அடைந்த எஸ். பி. திஸாநாயக்கவும் ஊடகங்களில் வந்து தினம் தினம் எனக்கு எதிராகப் பொய்க் குற்றச் சாட்டுக்களைக் கக்குகின்றார். இவ்விருவரும் மீண்டும் அதிகாரத்துக்கு வரும் நப்பாசையிலலேயே இந்தப் பொய்யான கருத்துக்களைக் கூறி வருகின்றனர். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளுடன் சம்பந்தப்பட்ட கடும்போக்கு தீவிரவாதிகளை உசுப்பேற்றியவர்கள் இவர்களே.

நாட்டில் மீண்டும் ஓர் இனக்கலவரம் ஏற்படக்கூடாது என்ற உண்மையான எண்ணத்துடன் முஸ்லிம் அமைச்சர்கள் தமது பதவிகளைத் தூக்கியெறிந்து, போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் மீதான சுயாதீன விசாரணைக்கு வழிவகுத்துள்ளனர் என்பதை அனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டும்' என்றார்.

(ஓ.5.22)

## பதில்...

மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி பணியாற்றுவார் என்று கொழும்பு சுகாதார அமைச்சு கடிதம் மூலமாக மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குப் பணிப்பாளர் வெற்றிடம் ஏற்பட்டிருந்தது. அதற்குச் சத்தியமூர்த்தியை கொழும்பு சுகாதார அமைச்சு நியமித்திருந்தது. அதற்கு வடக்கில் அரசியல் தரப்பினர் எதிர்ப்பு வெளியிட்டனர். யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை கொழும்பு அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் அதன் பணிப்பாளர் ஊடாகச் செயற்படுத்தப்படுகிறது. அவ்வாறிருக்க அவர் மாகாணத்துக்குரிய நிர்வாகக் கட்டமைப்பில் செயற்படுவது சரியல்ல, அதை ஏற்றுக் கொள்ள முடியாது. இது மாகாண அரசுக்குரிய அதிகாரங்களையும் கொழும்பு அரசுக்கு தாரைவார்ப்பதாக அமைந்துவிடும் என்று அரசியல் தரப்பினரின் வாதமாக இருந்தது. சத்தியமூர்த்தி முழுமையாக கொழும்பு அரசின் கீழ் இருக்க வேண்டும். அல்லது முழுமையாக மாகாணத்தின் கீழ் செயற்படவேண்டும் என்றும் கருத்து முன்வைக்கப்பட்டது. அவ்வாறிருந்தும் சத்தியமூர்த்தி யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குச் சென்று பணிப்பாளர் பணிகளைத் தொடங்கியிருந்தார். அங்கும் சர்ச்சை இடம்பெறவே செய்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 7 சுகாதார சேவை மற்றும் மருத்துவமனைகளில் மூத்த மருத்துவ நிர்வாகப் பதிவாளர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன. தகுதி வாய்ந்த 4 பேரே வடபகுதியில் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் சத்தியமூர்த்தி உள்ளிட்ட சிலரை அழைத்து அவரது அலுவலகத்தில் கூட்டம் ஒன்றை அண்மையில் நடத்தியிருந்தார். அதில் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக தொடர வேண்டியதில்லை. போதனா மருத்துவமனை நிர்வாக விடயங்களை முழுமையாக கவனியுங்கள் என்று சத்தியமூர்த்திக்குக் கூறியிருந்தார். அதற்குப் பதிலளித்த சத்தியமூர்த்தி, கொழும்பு சுகாதார அமைச்சின் பணிப்பில்தான் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் பணியைத் தொடங்கினேன். அங்கு பணியாற்றத் தேவையில்லை என்று கடிதம் தந்தால் விலகுகிறேன் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் அது பற்றிய கடிதம் 'வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஆளுநர் அலுவலகத்தால் அனுப்பப்பட்டது. ஏற்கனவே கொழும்பு சுகாதார அமைச்சின் கடிதமும் பின்னர் ஆளுநரின் கடிதமும் வந்ததால் இவை பற்றி மாகாண சுகாதாரத் திணைக்களத்தினர் கொழும்பு சுகாதார அமைச்சிடம் ஆலோசனை கோரியிருந்தனர். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே கொழும்பு சுகாதார அமைச்சு நேற்றுக் கடிதம் மூலமாக அறிவித்துள்ளது. அதில்,

தமது நியமனம் சரியானதென்றும் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக மருத்துவர் சத்தியமூர்த்தி தொடர்வார் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அரசமைப்புக்கு அமைவாகவும் மருத்துவர்களுக்கான சேவைப்பிரமாணக் குறிப்பின் படியும் அண்மையில் வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட சுகாதார நியதிச் சட்டத்தின் அடிப்படையிலும் மருத்துவர்களுக்கான. நியமனம் கொழும்பு அரசுக்கு உரியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-214)


## பொலிஸ்...

னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் முறைப்பாடு ஒன்றைப் பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுப் பதிவு செய்தார்.

'தீவிரவாத இயக்கத்துடனும் ஸஹ்ரான் ஹாசீமுடனும் என்னைத் தொடர்புபடுத்தி மீண்டும் மீண்டும் பொய்ப் பரப்புரைகளை கட்டவிழ்த்து வரும் இவ்விரு அரசியல்வாதிகளும் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் அப்பட்டமான பொய். இவை தொடர்பிலேயே முறைப்பாட்டைப் பதிவு செய்தேன்' என்று ரிசாத் எம்.பி. தெரிவித்தார்.

(ஓ.5.22)

# வைகாசி மாத ராசிபலன்



(மே 15 முதல் ஜீன் 15 வரை)



**விருச்சிக ராசி அன்பர்களே!**

இந்த மாதம் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டிய மாதம். அதிசாரமாக குரு 2ல் இருக்கும்போது மாதம் பிறப்பதாலும், பின்னர் ஜன்ம குருவாக அமர்ந்தாலும் அவருடைய பார்வைகள் சுப பலம் பெற்றிருப்பதாலும், பெரும்பாலான கிரகங்கள் சாதகமாக இல்லாத நிலையிலும், தொடங்கிய காரியங்கள் வெற்றிகரமாக முடியும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாக இருந்தாலும் முடிவில் சாதகமாகும். தாய்வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த சுபச்செய்தி இந்த மாதம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டாலும், உடனே நீங்கிவிடும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் பிரச்சினைகளைத் தவிர்த்துவிடுவீர்கள். சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் கூடிவரும்.

பணியாளர்களுக்கு மகிழ்ச்சியான மாதம். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். சக ஊழியர்கள் உதவிக்கரமாக இருப்பர்.

தொழிலதிபர்கள், வியாபாரிகள் மாதப் பிற்பகுதியில் சிறப்பான பலன்களைக் காணலாம். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

கலைஞர்களுக்கு சக கலைஞர்களால் இருந்த தொல்லைகள் நீங்கி, புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பொது நிகழ்ச்சிகளில் கௌரவிக்கப்படுவீர்கள்.

மாணவர்களுக்கு மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்படும். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படவும்.

பெண்கள் குடும்பத்தாரிடம் நன்மதிப்பைப் பெறுவர். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனுகூலமாக இருப்பர். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மகிழ்ச்சியான மாதம்.



**தனுசுராசி அன்பர்களே!**

சுக்கிரன், சூரியன் ஆகியோரால் நன்மைகள் ஏற்படும். புதன் ஓரளவு நன்மை செய்வார். எடுத்த காரியம் வெற்றிகரமாக முடியும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். பகைவர்களின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பொருளாதார வளம் கூடும். மாத முற்பகுதியில் கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் இருந்தாலும், மாதப் பிற்பகுதியில் சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையுடன் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். திருமண முயற்சிகளில் இருந்து வந்த தடைகள் நீங்கி, நல்ல வரன் அமையும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். புதிய வாகனம் வாங்கலாம். நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

பணியாளர்கள் சிறப்பான வளர்ச்சி காணலாம். சம்பள உயர்வுக்குத் தடையில்லை. வேலையின் காரணமாக குடும்பத்தைவிட்டுப் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேருவர். பதவி உயர்வு உண்டு. எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும்.

கலைஞர்களுக்கு முயற்சிகளில் இருந்த தடையும், மனதில் ஏற்பட்ட சோர்வும் மறையும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வசதி வாய்ப்புகள் பெருகும்.

மாணவர்கள் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதோடு போட்டிகளிலும் வெற்றிவாகை சூடும் வல்லமை கிடைக்கும்.

பெண்களுக்கு குடும்பத்தோடு புனித தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும்.



**மகரராசி அன்பர்களே!**

சுக்கிரன், செவ்வாய், ராகு, குரு ஆகியோர் சாதகமாக உள்ளனர். பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத் தேவைகள் பூர்த்தி ஆகும். பொன் பொருள் சேரும். உறவினர்களுடன் சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். கணவன் - மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உறவினர்களுடன் வீண் விரோதம் வரலாம். அவர்களிடமிருந்து ஒதுங்கி இருப்பது அவசியம். சிலருக்குத் தடைப்பட்ட திருமணம் கூடிவரும். சகோதர வகையில் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கி, அவர்களுடன் சுமுகமான உறவு ஏற்படும். வழக்குகளில் வழக்கறிஞர்களின் ஆலோசனை கேட்டுச் செயல்படுவது அவசியம். சிலருக்கு எதிர்பாராத பயணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்களால் சில ஆதாயங்கள் ஏற்படக்கூடும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக பணியாளர்களிடம் போதுமான ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. அதிகாரிகளை அணுகும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பலன் கிடைப்பதற்குக் கூடுதலாக உழைக்க வேண்டிவரும். முக்கிய முடிவுகளை எடுப்பதில் நிதானம் அவசியம். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். போட்டியாளர்களால் தொல்லைகள் ஏற்படக்கூடும்.

கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். மாத முடிவில் முயற்சிகளில் தடையும், மனதில் சோர்வும் ஏற்படும்.

மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காணலாம். ஆசிரியர்களிடம் நற்பெயர் கிடைக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி ஏற்படும்.

பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். குடும்பத்தோடு புனித தலங்களுக்குச் சென்று வருவீர்கள். தடைப்பட்டு வந்த சுபநிகழ்ச்சிகள் கைகூடும். அலுவலகத்தில் உற்சாகமாகச் செயல்படுவீர்கள்.

(தொடரும்)

# சாலைகளில் இவற்றையெல்லாம் மிதித்து நடந்தால் உங்கள் வாழ்வில் துரதிர்ஷ்டமும், பாவமும் உண்டாக்குமாம்!

மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது எமது கைகளில் மட்டுமில்லை எம்முடைய சுற்றுப்புறத்தைச் சார்ந்தும் இருக்கிறது. விஷ்ணு புராணத்தில் கூறியுள்ளபடி செழிப்பான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எம்மை சுற்றியுள்ள தீய சக்திகளிடம் இருந்து விலகி இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எந்தெந்த பொருள்களிடம் இருந்து விலகி இருக்க வேண்டும் என்றும் விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

சாலைகளில் செல்வதை யாராலும் தவிர்க்க முடியாது. இந்த சூழ்நிலையில் சாலையில் இருக்கும் சில பொருள்களை கடந்து செல்வதும், தாண்டி செல்வதும் நமது வாழ்வில் துரதிர்ஷ்டத்தையும், துன்பத்தையும் உண்டாக்கும்.

இந்த பதிவில் சாலையில் நடக்கும் போது எந்தெந்த பொருள்களிடம் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று பார்க்கலாம்.

**தேங்கிய நீர்**

நாம் அனைவருமே நம் வாழ்க்கையில் ஒரு தடவையாவது சாலையில் நீர் தேங்கியிருப்பதை தாண்டி சென்றிருப்போம். அந்த நீர் மழையால் தேங்கியதாக இருக்காது. இந்த நீர் வடிகாலிலோ அல்லது வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட அசுத்தமான நீராக இருக்கும். இந்த நீரைத் தாண்டி செல்வது உங்கள் வாழ்க்கையில் எதிர்மறையான விளைவுகளை உண்டாக்கும். இந்த நீரின் மீது ஒருபோதும் காலை வைக்காதீர்கள்.

**இறந்த விலங்குகள்**

மிருகங்களோ அல்லது பறவைகளோ சாலையில் இறந்து கிடப்பதை நாம் அடிக்கடி பார்த்திருப்போம். அதனை யாரும் அப்புறப்படுத்தவோ அல்லது சுத்தம் செய்யவோ மாட்டார்கள்.

பெரும்பாலானோர் இவற்றை சுற்றி செல்வார்கள் சிலரோ எதையும் பற்றி கவலைப் படாமல் தாண்டியே செல்வார்கள். வேதங்களின் படி இறந்த உடல்களை தாண்டி செல்வது உங்கள் வாழ்க்கையில் பெரிய துன்பங்களை ஏற்படுத்தும். எனவே ஒரு போதும் இறந்த உடல்களை தாண்டியோ, மிதித்தோ செல்லாதீர்கள்.

**முடி**



சாலைகளில் மட்டுமின்றி வீடுகளிலும் நாம் முடி கீழே கிடப்பதை அடிக்கடி பார்க்க வாய்ப்புள்ளது.

அதனை தாண்டியோ அல்லது மிதித்தோ செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறது. இது உங்கள் உடலுக்குள் எதிர்மறை சக்திகளை கொண்டுவரும். முடியை பார்த்தால் உடனடியாக அதனை சுத்தம் செய்து விடுவது நல்லது.


**சாம்பல்**

புராணங்களில் கூறியுள்ளபடி யாகம் நடத்தி முடிந்த பிறகு அதிலிருந்து வரும் சாம்பலை ஓடும் நீரில் விட்டுவிட வேண்டும். இதன் அர்த்தம் என்னவெனில் அனைத்து அசுத்தங்களும் தீயால் அழிக்கப்பட்டு அதனை ஓடும் நீரில் விடுவது உங்கள் வாழ்க்கையில் இருக்கும் எதிர்மறைசக்திகளை விரட்டுவதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால் இப்போதெல்லாம் இந்த யாகம் மற்றும் பூஜை பொருள்களை சாலையில் எறிந்து விடுகின்றனர். இதனால் மிதிக்க நேர்ந்தால் அது உங்கள் வாழ்வில் பாவங்களை அதிகரிக்கும்.

**புனித நூல்**

நாம் சாலையில் பல சீரற்ற பொருள்கள் கிடப்பதை நாம் பார்த்திருப்போம். அவற்றில் பலவற்றை நாம் கண்டுகொள்ளாமல் மிதித்துக் கொண்டு செல்வோம். ஆனால் ஒருவேளை அதில் சாமிக்கயிறு அல்லது வேறு புனித நூல்கள் கிடந்தால் அவற்றை தாண்டி செல்லக்கூடாது. சாலையில் கிடக்கும் புனித நூல்களை காலால் மிதிப்பது பாவமாகும்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 . 02 . 1970

மறைவு 10 . 05 . 2019

## ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஞானசீலன்

(பிரபல தொழில் அதிபர் - Maruthi Vedio Vision, Maruthi Redimix, Maruthi Apartments)

**திதி: சஷ்டி**

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
மாமா - ரஞ்சன்

**விற்பனைக்கு உண்டு**

நல்லின லப்ரடோர் நாய்க்குட்டிகள் (35 நாள்கள்) விற்பனைக்குண்டு.

076 696 5112

**கார் விற்பனைக்கு**

Toyota Corolla 16 - XXXX
நல்ல நிலையிலுள்ள கார் விற்பனைக்குண்டு

077 303 9606

**ஐங்கரன் பாம்**
பிறவுண்வீதி, கலட்டிச்சந்தி

புறொயிலர் உயிருடன் 270/= } (5 kg மேல்)
சுத்தம் செய்யப்பட்டது 400/= } (5 kg மேல்)


தொலைபேசி இலக்கம் : 077 905 0165

**வீடு விற்பனைக்கு**

அரியாலை குகன் றோட்டில் இரண்டு பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு.

075 044 0207, 021 222 9065

# மரண அறிவித்தல்



பிறப்பு 06 . 06 . 1962

இறப்பு 07 . 06 . 2019

## பத்மநாதன் சிறிரங்கநாதன்


யாழ். மண்டைதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா உக்குளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் சிறிரங்கநாதன் நேற்று (07.06.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் பிரபாகரன், திருநிறைச்செல்வி, சுதாகரன், கருணாகரன், அருட்செல்வி, கலைச்செல்வி, மயூரதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா உக்குளாங்குளம் இல்லத்தில் நாளை (09.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உக்குளாங்குளம், வவுனியா** **தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 05 . 1935

மறைவு 05 . 06 . 2019

## முத்தையா கமலநாதன்

**(முன்னாள் தலைவர் - தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்)**

கச்சாய் வீதி,. கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மரக்காரம்பளை வ்வுனியாவை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா கமலநாதன் கடந்த (05.06.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா பொன்னம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற குணபூசனியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக்கணவரும் கௌதமி (முன்னாள் ஆசிரியை-டிறிபேர்க் கல்லூரி , பிரான்ஸ்) அவர்களின் அன்புத்தந்தையும் ஷாம் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2019) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் மரக்காரம்பளை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மரக்காரம்பளை,
வவுனியா.**

**தகவல்: ஷாம் கௌதமி
(மகள் - 077 066 2147)**

**தொடர்புகளிற்கு : த.இராமநாதன்
(சகோதரன் - பயனியர் மில் கொடிகாமம்)
077 704 6796**

# மரண அறிவித்தல்



## திருமதி பரமேஸ்வரி குணரட்ணராஜா

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி குணரட்ணராஜா 04.06.2019 அன்று காலமானார்..

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-நவமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குணரட்ணராஜாவின் அன்பு மனைவியும், சுகுணா, மேகலா, குகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயகுமார், விபுலன், தக்ஷாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திகன், சுருதி, கோகுலன், லதுஷான், தாகித்தியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ராஜலக்ஷிமி, சரஸ்வதி, காசிப்பிள்ளை, யோகேஸ்வரி, மகேஸ்வரி மற்றும் கணேசநாதன், யோகநாதன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2019) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**தொ.பே: 0777 286 824**

## ஜாதக மென்பொருள் (Software) விற்பனைக்கு (வாக்கிய பஞ்சாங்கம்)

ICS நிறுவனத்தாரின் மிகவும் துல்லியமான முறையில் சுத்த வாக்கிய பஞ்சாங்கத்தில் கணிக்கப்பட்ட வாக்கிய பஞ்சாங்க ASTROLOGY Software விற்பனைக்கு. ஜாதகக்கணிப்பு, திருமண பொருத்தம், சுபமுகூர்த்தம், நியுமாலஜி, குழந்தை பெயர். 7,12,24,55,115 பக்கங்கள் விரும்பியFormat Print வசதிகளுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
0777891945 (கமலநாதன்)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**ரேகா சூரியராஜ்**

பிறப்பு
09. 02. 1985

இறப்பு
09. 06. 2016

திதி: 08.06.2019

அற்புதப் பிறவியாய்
அவனியில் வந்துதித்தாய்
அன்பாலே மகிழ்வூட்டி
அரவணைத்து எமை நிறைத்தாய்

காலனின் சதியிலே
கானலாய் மறைந்துவிட்டாய்
ஆண்டுகள் ஓடினாலும்
அழியாது உன் நினைவுடன்

தாய், மகள், சகோதரர்கள்.

## 19ஆம் வருட நினைவலைகள்...



**சின்னத்துரை கனகசபை**
(ஓய்வுநிலை இராணுவ அதிகாரி)



**சிதம்பரப்பிள்ளை விசாலாட்சி**
(பெரியமாவடி)

திதி:- 08.06.2019

வானத்து நட்சத்திரமாகி எம்மை என்றும்
வழிகாட்டும் எம் இதய தெய்வங்களே...
உம் நினைவு என்றும் மாறாது எம் மனங்களில்....

ஈஸ்வரி இல்லம்,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



**திருமதி வனிதாமணி கோபாலநாதன்**

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வனிதாமணி கோபாலநாதன் 06.06.2019 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-செல்வமணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், கோபாலநாதனின் (S.L.T) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் கானமூர்த்தி (லண்டன்), ஜெயச்சந்திரன், ராஜேந்திரா (ஜேர்மனி), விஜயஸ்ரீ (லண்டன்), ஜெயஸ்ரீ (பிரான்ஸ்), கலாவதி (லண்டன்), காலஞ்சென்ற மதிமோகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கிருஷ்ணரூபன் (லண்டன்), சிவப்பிரியா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்வர்ணா, ஜெயகணேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரினி, ஒடேன், லக்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜெகநாதன், தியாக நாதன், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, கனகேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, ராஜேஸ்வரி, ரஞ்சனா, ரஞ்சி, ஜெயந்தி, சித்திரா, தவயோகம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற் றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41A, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ந.கோபாலநாதன்

தொ.பே: 0770318660, 021 2220610, 0776257954, 0778910342

## நாடாளுமன்ற...

காப்பு அதிகாரிகளை சாட்சியமளிக்க அனுமதிக்க மாட்டேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழு சாட்சியமளிக்க ஒருவரை அழைத்து அவர் முன்னிலையாகாமல் விட்டால் என்ன நடக்கும் என்பது தொடர்பில் தெரிவுக்குழு உறுப்பினர் சுமந்திரனிடம் வினவிய போதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது நிறைவேற்றுத்துறை எங்கு தவறிழைத்தது என்பது தொடர்பில் ஆராய்வதற்கு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுத் துறையின் தலைவராக, அரச தலைவர் இருக்கின்றார். நிறைவேற்றுத் துறையின் தவறு தொடர்பில் விசாரணை நடத்தும்போது, நாம் எப்படி விசாரணை நடத்தவேண்டும் என்று நிறைவேற்றுத் துறை எமக்கு கட்டளை பிறப்பிக்க முடியாது. நாம் தெரிவுக்குழு முன்னிலையில், நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் விடயங்களை பகிரங்கமாகச் சொல்ல அனுமதிப்பதில்லை. சாட்சி கூறும் விடயம் தேசிய பாதுகாப்புக்கு பங்கமானதா இல்லையா என்பதை தெரிவுக் குழுதான் தீர்மானிக்கும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒருவரை அழைத்து அவர் வரவில்லை என்றால், நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறியதற்காக அவரைத் தண்டிக்க முடியும் என்றார்.

(ஒ.5)

## உலகில்...

நர் ஹிஸ்புல்லா எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஒட்டு மொத்த முஸ்லிம் அமைச்சர்களும் பதவி விலகியமை பெரிதல்ல. ஆனால் ரவூப் ஹக்கீம், கபீர் காசிம் ஆகியோர் பதவி விலகியமையே பெரிய விடயம். அவர்கள் எமது சமூகமன்றி சிங்கள மக்களின் வாக்குகளையும் பெற்றே வெற்றியீட்டியவர்கள்.

அவர்கள் எங்களுக்காகவும் ஒட்டு மொத்த முஸ்லிம் மக்களுக்காகவும் பதவி விலகினார்கள். எங்களுடைய ஒற்றுமை என்பது சாதாரண விடயமல்ல. நான் அரச தலைவர் மைத்திரிக்கு 2 வார கால அவகாசம் கொடுத்துள்ளேன். என் மீதான குற்றச்சாட்டுக்களை உடனடியாக விசாரணை செய்து நிரூபிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளேன்- என்றார்.

(ஒ.5)

## பெயர்மாற்றம்

சுழிபுரம் மேற்கில் வசிக்கும் **சற்குணமலர்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **சந்திரமலர்** எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(CS/25881) (11.17)
**சந்திரமலர்**

## வாடகைக்கு வீடு தேவை

புதுக்குடியிருப்பு நகரை அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் தேவை.

077 410 5294

## வேலையாள்கள் தேவை

1. வெல்டிங் வேலை அனுபவம் உள்ளவர்கள்
2. அலுமினிய பிற்றிங் வேலை அனுபவம் உள்ளவர்கள்
3. பிளமிங் வேலை அனுபவம் உள்ளவர்கள். கொமட் (Commode) பொருத்துதல், வோஸ் பேசின் (Wash Basin) பொருத்துதல் போன்ற அனைத்து வேலைகளிலும் அனுபவமுள்ளவர்.

தொடர்புகளுக்கு: 075 918 3940
(திங்கள் முதல் - சனி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மட்டும் தொடர்புகொள்ளவும்).

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட
**புறொயிலர், கல்பேட், பேரன்ஸ் கோழி**
சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**நந்தினி பாம்** இராசபாதை வீதி,
கல்வியங்காடு.
077 968 3028

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

**கலாநிதி தில்லையம்பலவாணர் விமலன் (Ph.D)**
(B.A (Geo), M.A (Sociology), MA (Public.Admini) LL.B (Hons))
(அகில இலங்கை சமாதான நீதவான், அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்)



காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வடக்கு மாகாணப் பணிப்பாளராகக் கடமையாற்றும் தில்லையம்பலவாணர் விமலன் அவர்கள் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் இந்தியா சத்ரபதி மகாரஜ் பல்கலைக்கழகத்தில் சமூகசேவைத் துறையில் ( Social Work ) கலாநிதிப் பட்டம் பெறுவதனையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :-
சக உத்தியோகத்தர்கள்,
காணி சீர்திருத்த ஆணைக்குழு,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**திருமதி சரஸ்வதி பாலசிங்கம்**

பிறப்பு 09.09.1943 — இறப்பு 07.06.2019

நவாலி வடக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பாலசிங்கம் நேற்று (07.06.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அருமை புதல்வியும் காலஞ்சென்றவர்களான முத்தையா - சுந்தரம் தம்பதிகளின் ஆசை மருமகளும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம், குமரவேலு, மற்றும் பரிமளம், கமலம், யோகம்மா, தனலட்சுமி, கணேசமூர்த்தி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா , இராஜசிங்கம் மற்றும் தர்மலிங்கம், மாணிக்கம், தெய்வேந்திரம் ஆகியோரின் மைத்துனியும் ஈஸ்வரி, பேரின்பம் ஜெயஈஸ்வரி (தபால்திணைக்களம், யாழ்ப்பாணம்), பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் அருள்கண்ணன், வினோதினி (ஆசிரியை, சுதுமலை சிம்மயபாரதி), சிவகுமார் (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), ராகினி ஆகியோரின் மாமியாரும் அனுஷியா, நிரோஜன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், Northern Central Hospital), நிஷாந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), யதீஸ்கரன் (LOLC உத்தியோகத்தர்), அபிநயா, சஞ்சை, சாளினி, சாயினி, லிஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலவர்வீதி, நவாலிவடக்கு,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
077 465 9570, 077 900 4505

## அமைச்சர்களின்...

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேசியப் பாதுகாப்பு மற்றும் இலங்கையின் உள்விவகாரத்தில் வெளிநாடுகளின் தலையீடு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை தீர்மானத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பின்னர் எவரும் முஸ்லிம் சமூகத்தின் மீது குற்றஞ்சாட்டவில்லை. முஸ்லிம் சமூகத்தை விரோதிகளாகப் பார்க்கவில்லை. ஆனால் தாக்குதல்களுடன் தொடர்புபட்ட பயங்கரவாதிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுங்கள் என்ற கோரிக்கையே வலுப்பெற்றது.

ஆனால் இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படுவதாக ஊடகங்கள் மூலம் நாம் அறிந்து கொண்டோம். முஸ்லிம் அரசியல்வாதிகள் பயங்கரவாதிகளைபாதுகாக்கின்றனர். அவர்களை பலப்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்தன. முஸ்லிம் சமூகம் தொடர்பில் சந்தேகம், வைராக்கியம் ஏற்பட்டது. முஸ்லிம் வர்த்தக நிலையங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்ற மன நிலைக்கு மக்கள் வந்தனர் என்றார்.

(ஒ.5)

# கையேந்தி நிற்கவேண்டியதுதான் சிறுபான்மையினர் தலைவிதியா?

சேரலாதன்

பௌத்த, சிங்கள இனவாதிகளின் எழுச்சி காரணமாக நாட்டில் அரசியல் குழப்ப நிலையொன்று தோன்றியுள்ளது. இந்த நாட்டைப் பொறுத்த வரையில் பௌத்த, சிங்கள தேசிய வாதம் அனைத்து விடயங்களுக்கும் மேலாக கோலோச்சிக் கொண்டிருக்கின்றது. இதை மீறி எவருமே எதையும் சாதித்து விட முடியாது. தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறமுடியாது இன்னல்களை எதிர்கொள்வதற்கும் இதுவே தடைக்கல்லாக எழுந்து நிற்கின்றது.

ஆரம்பத்தில் அகிம்சை வழியில் போராடிய தமிழர்கள் தமது நோக்கம் நிறைவேறாத நிலையில் ஆயுதங்களைத் தூக்கிப் போராடினார்கள். ஆனால் உரிமைக்கான அந்தப் போராட்டம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு நாடுகள் பலவற்றின் உதவியுடன் மௌனிக்கப்பட்டு விட்டது. இனிமேல் தமிழர்கள் தமது உரிமைகள் தொடர்பாகக் குரல் எழுப்பக் கூடிய சாத்தியம் கிடைக்காது என்பதை உறுதியாகக் கூற முடியும்.

சிறுபான்மை இனங்கள் என எடுத்துக் கொண்டால் இலங்கையில் பூர்வீகக் குடிகளான தமிழர்கள், இந்திய வம்சாவழித் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோரை முதன்மையாகக் குறிப்பிட முடியும். இவர்களுள் பூர்வீகத் தமிழர்கள் அந்நியரின் ஆட்சியில் சகல விதத்திலும் முன்னிலை பெற்றுத் திகழ்ந்தனர். இதனால் பெரும்பான்மையினத்தவர்களின் வெறுப்புக்கும் ஆளானார்கள். நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததும் தமிழர்களைப் பழிவாங்கும் படலம் ஆரம்பமானது.

இந்த நாட்டில் இடையில் வந்து புகுந்து கொண்ட பௌத்த மதம் பெரும்பான்மையின மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. பௌத்த தேரர்கள் நாட்டின் சகல விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றனர். அரசியலையும் அரசியல்வாதிகளையும் கட்டுப்படுத்துகின்ற வல்லமையையும் அவர்கள் கொண்டிருப்பதால் ஆட்சியாளர்களால் அவர்களை மீறி எதையுமே செய்ய முடியாத அவல நிலை யொன்று இங்கு உருவாகிவிட்டது.

**நிறைவேறாமல் போனது பண்டா - செல்வா ஒப்பந்தம்**

பண்டாரநாயக்கவின் காலத்தில் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கை உருவாகியிருந்தது. பண்டாரநாயக்க கூட்டாச்சியை ஏற்படுத்துவதற்கு இணங்கியதுடன் தந்தை செல்வநாயகத்துடன் ஒப்பந்தமொன்றையும் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் அன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்திருக்கும். ஆனால் சிங்கள இனவாதிகளும் தமிழர்கள் மீது வெறுப்பைக் கொண்டிருந்த பௌத்த தேரர்களும் அந்த ஒப்பந்தம் நிறைவேறுவதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். ஒரு சிங்கள பௌத்த வாதியான பண்டாரநாயக்க எதிர்ப்புகளுக்குப் பயந்து ஒப்பந்தத்தைக் கிழித்து வீசினார். இனப் பிரச்சினையும் தொடரவே செய்தது. பின்னர் டட்லி சேனநாயக்கவுடனும் தந்தை செல்வா இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் பொருட்டு ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டார். அதுவும் எதிர்ப்புக்கள் காரணமாக இடை நடுவில் கைவிடப்பட்டது. சிறுபான்மை மக்களுக்கு எதையுமே கொடுத்துவிடக் கூடாது என்பதில் சிங்கள பௌத்த இனவாதிகள் கண்ணும் கருத்துமாகவுள்ளனர். கொடிய போர் ஒன்று இடம்பெற்று நாடு பேரழிவுகளைக் கண்டதன் பின்னர் கூட அவர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படவில்லை.

**முஸ்லிம்களைக் கண்டு சிங்களவர்கள் அச்சம்**

முஸ்லிம் மக்களின் இனப்பெருக்க விகிதாசாரம் தம்மை விட அதிகமாக இருப்பதைக் கண்டு சிங்களவர்கள் மத்தியில் அச்ச நிலையொன்று தோன்றியது. இது இவ்வாறு தொடர்ந்தால் காலப்போக்கில் முஸ்லிம்களின் சனத்தொகை தம்மைவிட அதிகமாகிவிடுமெனவும் அவர்கள் எண்ணினார்கள். இதன் காரணமாக முஸ்லிம்கள் மீது அவர்களுக்கு வெறுப்புணர்வு தோன்றியது. பௌத்த தேரர்கள் சிலர் இந்த வெறுப்புணர்வைத் தூண்டி விடுவதில் குறியாக இருந்தனர்.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அவ்வப்போது இடம்பெற்றுவந்தன. பள்ளிவாசல்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள் என்பன தாக்குதல்களுக்கு உள்ளாகின. முஸ்லிம் மக்களும் தாக்கப்பட்டனர். இறுதியாக முஸ்லிம் பயங்கரவாதிகளின் தற்கொலைத் தாக்குதல்கள் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்கள் மீதும் வெறுப்பை ஏற்படுத்திவிட்டது. அவர்கள் அனைவருமே வேண்டத் தகாதவர்களாகப் பார்க்கப்பட்டனர். பயங்கரவாதிகளுடன் தொடர்புகளைப் பேணி வந்தனர் என மேல் மாகாண ஆளுநர் அசாத்சாலி, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா, அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இவர்களை உடனடியாகப் பதவி விலக்குமாறுகோரி அத்துரலிய ரத்ன தேரர் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். சிங்கள பௌத்த இனவாதமும் தேசிய வாதமும் தேரருக்கு ஆதரவாகக் கிளர்ந்தெழுந்தது. இதன் பிரதி பலிப்பையே நாம் தற்போது காண்கின்றோம்.

**அடுத்தது மலையகத்தினரா?**

முதலில் தமிழர்கள் பின்னர் முஸ்லிம்கள் அடுத்த படியாக மலையகத் தமிழர்கள் என இனவாதத்தின் கொடிய கரங்கள் நீண்டு செல்லப்போகின்றது. சிறுபான்மையினர் தமது உரிமைகள் தொடர்பாக இனி மேல் மூச்சுவிடக்கூடாது என்பதே சிங்கள பௌத்த தேசிய வாதிகளின் எதிர்பார்ப்பாகும். இதை எவராவது மீறி நடந்தால் அதன் விளைவுகள் மோசமானதாகவே மாறிவிடும். புதிய அரசமைப்பின் உருவாக்கம் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள், இந்து ஆலயங்களை பௌத்த தலங்களாக மாற்றுகின்ற முயற்சிகள் தொடர்பாக இனிமேல் கதைத்துக் கொண்டிருப்பதில் பயனொன்றும் கிடைக்காது. மனமிரங்கித் தருவதைஏற்பதைத்தவிர வேறுவழியொன்றும்சிறுபான்மையினருக்கு இல்லை என்பதுதான் யதார்த்தமாகும்.

---

# ‘நாட்டுக்காக ஒன்றிணைவோம்’

## முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்கான செயற்றிட்டம்

நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் வறுமையால்பெரிதும்பாதிக்கப்பட்டமாவட்டமாகவே முல்லைத்தீவு மாவட்டம் பல தசாப்தங்களாக இருந்து வருகின்றது. நீண்டகாலப் போர், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டமை, அடிப்படை வசதிகளில் முன்னேற்றமின்மை, தலைநகரிலிருந்து தொலைவில் அமைந்துள்ளமை மற்றும் அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படுகின்றமை போன்ற காரணங்களால் போதிய வெளிமுதலீடுகளை பெற்றுக்கொள்ள முடியாதமையே இதற்குக் காரணமாகும்.

இந்த மாவட்டத்தில் தேசிய ரீதியிலான அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது கட்டாயத் தேவையாக இருந்தபோதிலும் 2009ஆம் ஆண்டு போர் நிறைவின் பின்னர் ஏற்பட்ட அமைதியான சூழ்நிலையிலும் அதனைத்தொடர்ந்து 2015ஆம்ஆண்டுஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னரும் கூட முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட தேசிய அளவிலான துரித அபிவிருத்திசெயற்திட்டங்கள்முன்னெடுக்கப்படாதநிலையே காணப்பட்டது.

இந்த நிலையை மாற்றியமைத்து இப்பிரதேச மக்களுக்கும் அபிவிருத்தியின்பயன்களைப்பெற்றுக்கொடுத்துஅவர்களது வாழ்வாதாரவசதிகளையும்அடிப்படைவசதிகளையும்மேம்படுத்தவேண்டும் என்ற நோக்கிலேயே அரச தலைவர் செயலகத்தால்மாவட்டரீதியில்முன்னெடுக்கப்பட்டுவரும்மக்கள் குறை தீர்க்கும் அபிவிருத்தி திட்டமாகிய ‘நாட்டுக்காக ஒன்றிணைவோம்’ செயற்திட்டம் கடந்த 3ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்படுகின்றது.

அரச தலைவர் செயலகத்தின் பிரதான சமூக நலன் திட்டங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும்அனைத்துதேசியசெயற்திட்டங்களின்பயன்களையும்முல்லைத்தீவுமாவட்டமக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில் பல முன்னணி அமைச்சுக்களும் அரச திணைக்களங்களும் இந்தச் செயற்திட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளன.

முல்லைத்தீவுமாவட்டம் குடிநீர்பிரச்சினை மற்றும் சிறுநீரக நோய்த்தாக்கம்ஆகியவற்றிற்குமுகம்கொடுக்கும்ஒருமாவட்டமாகஇருப்பதனால்சுத்திகரிக்கப்பட்டசுத்தமானகுடிநீரைப் பெற்றுக்கொடுக்கும்நோக்கில்குளங்கள்மறுசீரமைக்கப்பட்டு தூய குடிநீரையும் நீர்ப்பாசனத்துக்கான நீரையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதோடு, சிறுநீரகநோய்த்தடுப்புஅரசதலைவர் செயலணியால் தேவை இனங்காணப்பட்ட பகுதிகளில் பெரிய நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் நிர்மாணிக்கப்படுவதுடன் உள்ளக நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களும் வழங்கப்படுகின்றன. மேலும்மல்லாவிமருத்துவமனையில்நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறுநீரக நோய் சிகிச்சைப் பிரிவையும் அரச தலைவர் இம்மாதம் 8ஆம் திகதி திறந்துவைக்கவுள்ளார்.


ரவி ரத்னவேல்
அரச தலைவர் ஊடகப் பிரிவு

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை முன்னெடுக்கமுயலும்போது அதற்கு தேவைப்படுகின்றஅரச அத்தாட்சிகள் உள்ளிட்ட அத்தியாவசிய ஆவணங்களாகிய பிறப்பு, இறப்பு சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்புகளும் அரச நிறுவனங்களின் கூட்டிணைப்பில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நடமாடும் அரசசேவைகளின் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும்தமதுசொந்தநிலத்திற்கானஉரிமையை இழந்திருப்போருக்கு அதனை சட்டரீதியில் நிரூபிப்பதற்குத் தேவையான காணிகளுக்கான அரச உறுதிப்பத்திரங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போரால்பாதிக்கப்பட்டவர்கள்தேவை அடிப்படையில்இனங்காணப்பட்டு அவர்கள் தமது ஜீவனோபாயத்தையும் இயல்பு வாழ்க்கையையும்முன்னெடுத்துச்செல்வதற்கானபொருள் மற்றும் நிதி உதவிகளும் வாழ்வாதாரக் கொடுப்பனவுகளும் பெற்றுக்கொடுக்கப்படுவதுடன், கோழி வளர்ப்பு, பால் உற்பத்தி, நன்னீர்மீன்வளர்ப்புஎனபல்வேறு துறைகளில் சுயதொழில் வாய்ப்புகளை விருத்தி செய்வதற்கான உதவிகளும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உள்ளிட்ட தொழிற்துறைகள் பற்றிய விழிப்புணர்வும் இதன்போது பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

வீதிப் புனரமைப்பு, பாலங்கள், வீதியோர கழிவு நீர் அகற்றும் வாய்க்கால்கள் நிர்மாணிப்பு உள்ளிட்ட செயற்திட்டங்களும் வசதி குறைந்த பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள், முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வுகூடம், ஆசிரியர் தங்குமிட விடுதி, தொழிநுட்பக்கூடம் ஆகியனவும் இவ்வாரத்தில் திறந்துவைக்கப்படுகின்றன. அத்துடன் போதைப்பொருள் உள்ளிட்ட சமூக விரோத செயற்பாடுகளிலிருந்து தம்மையும் தான் சார்ந்த சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளையில் ஒரு அறிவுபூர்வமான குடிமகனாக செயற்படுவதற்கு தேவையான அறிவையும் ஆற்றலையும் பெற்றுக்கொடுப்பதற்கான பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்பாடசாலைமற்றும்கிராமியமட்டங்களில்செயற்படுத்தப்படுகின்றன.

ஜனநாயக கட்டமைப்பைக் கொண்ட ஒரு நாடு என்ற வகையில் அரசு, சமூகம் மற்றும் நாடு என்பவற்றிலிருந்து எமக்கு என்ன கிடைக்கின்றது என தமது உரிமைகளைப் பற்றி மாத்திரம் சிந்திக்கும் மனநிலையை மாற்றி தம்மால் சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஆற்றவேண்டிய பொறுப்பை உணர்த்தும் வகையில்மக்களின்பங்கேற்புடனேயே இந்த ஒருவார கால வேலைத்திட்டங்களும்முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். பலதசாப்தங்களாகதமதுகுறைநிவர்த்திக்காக பலரையும்நாடிச்சென்றமக்களைதேடிவந்துகுறைத்தீர்க்கும் இந்த வாய்ப்பை தமக்கு சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டியது அந்தமாவட்டமக்களின்பொறுப்பாகும்.

# கழிவுத் தண்ணீரில் பயிர் செய்யவில்லை வாய்க்காலை உடைத்தே பயிர்ச் செய்கை

## *கண்டாவளை விவசாயிகள் கூறுகின்றனர்*
## *திணைக்கள அதிகாரியும் உறுதிப்படுத்துகிறார்*

*கிளிநொச்சி, ஜூன் 8*

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட விசுவமடு மேற்கு மற்றும் நெத்தலியாற்றுப் பகுதி விவசாயிகள் மேற்கொள்ளும் வயல் நிலங்களுக்குச் செல்லும் தண்ணீர் கழிவுதண்ணீர் என்பது தவறு. கண்டாவளைக்குச் செல்லும் முதன்மை வாய்க்காலை அத்துமீறி உடைத்தே தண்ணீரைத் திசை திருப்புகின்றனர் என்று கண்டாவளை விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (இங்கு கழிவு தண்ணீர் என்பது வயல்களுக்குச் சென்று வெளியேறும் தண்ணீரைக் குறிக்கின்றது.)

நெத்தலியாறுப் பகுதிக்குத் தண்ணீர் வழங்கும் ஆற்றை கண்டாவளை விவசாயிகள் 3 வாரங்களுக்கு முன்னர் கனரக இயந்திரம் கொண்டு அடைத்து விட்டனர். அதனால் நெற்பயிர்கள் எரிந்து சாகும்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று நெத்தலியாற்று விவசாயிகள் தகவல் வெளியிட்டனர். அந்தத் தகவல் பொய்.

கல்மடுக் குளத்தின் முதன்மை வாய்க்கால் நெத்தலியாறு ஊடாகவே கண்டாவளைக்குச் செல்கின்றது. வாய்க்காலை உடைத்து விசுவமடு விவசாயிகள் திருட்டுத் தனமாகவே தண்ணீரைச் சுரண்டுகின்றனர். அதன் மூலமாகவே நெத்தலிஆற்றுப் பகுதியில் 120 ஏக்கர் நெற்செய்கைக்குத் தண்ணீர் எடுக்கப்படுகின்றது. அது கழிவுத் தண்ணீர் அல்ல.

அந்த அணையை பெரும் பணச்செலவில் இயந்திரங்கள் மூலம் சீர் செய்தோம். நெத்தலியாறு விவசாயிகள் பக்கம் நியாயம் இருப்பின் எவராவது தலையிட்டு நீதியை பெற்றுக்கொடுக்கட்டும் பார்ப்போம்?

அது அநீதியான விடயம் என்பதனாலேயே அனைவரும் கைவிட்ட நிலையில் தற்போது மீண்டும் அடாத்தாக முதன்மை வாய்க்கால் உடைக்கப்பட்டு சட்ட விரோதமாக தண்ணீர் பெறப்பட்டுள்ளது. இந்த விடயத்தை கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் பரணீதரனின் கவனத்துக்கும் கொண்டு சென்றோம். என்று கண்டாவளை விவசாயிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பரணீதரனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

"உண்மையில் நெத்தலியாற்றுப் பகுதியின் கழிவு தண்ணீரில் விசுவமடு விவசாயிகள் நெல் விதைப்பதாகக் கூறுவது தவறான விடயம். ஏனெனில் சட்டபூர்வமாக கண்டவளையில் விதைக்கும் விவசாயிகளின் வயல் நிலத்துக்கு தண்ணீர் செல்லும் பாதையில் பல கிலோ மீற்றர் தூரத்துக்கு முன்பாக வாய்க்கால் உடைக்கப்பட்டே தண்ணீர் திருப்பப்படுகின்றது. அதனால் அவை சட்டவிரோதமான விதைப்பு என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. இதனை நான் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு மீண்டும் உறுதிசெய்தேன். அதனால் உடனடியாக அந்த வாய்க்காலை அடைக்குமாறே அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் கல்மடுக் குளத்தின் கீழ் ஆயிரத்து 640 ஏக்கர் அனுமதிக்கப்பட்டபோதும் 260 ஏக்கர் அத்துமீறிய விதைப் பாகவும் 60 ஏக்கர் வயல் மேலதிக விதைப்பாகவும் காணப்படுகின்றது.

இதன் மூலம் கல்மடுக் குளத்தின் கீழ் ஆயிரத்து 960 ஏக்கர் நிலம் விதைக்கப்பட்டுவிட்டது.

இதேநேரம் கல்மடுக் குளத்தில் இருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வயல்வரை தண்ணீர் பாச்சப்படுகின்றது. இந்த வாய்க்கால்கள் எவையுமே போரின் பின்னர் சீரமைக்கப்படவில்லை. அதாவது சிமெந்தினால் அமைக்கப்படவில்லை. இதனால் வறட்சியின்போது அதிக தண்ணீர் சேதமாக அமையும். அதனால் விவசாயிகளுக்கு இறுதிச் சந்தர்ப்பத்தில் தண்ணீர் இன்மை பெரும் பிரச்சினையாக அமையும். அவ்வாறு நிலமை ஏற்படின் விசுவமடுவிவசாயிகளுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யும் நிலமை ஏற்படும். வரும் திங்கட்கிழமை மாவட்டச் செயலரைச் சந்தித்துஇது ஆராயப்படவுள்ளது. அதன்போது அந்த வயற் செய்கைகளை அழிக்கும் நிலைமையும் ஏற்படலாம்.

இவை அனைத்தையும் தாண்டி, விசுவமடு விவசாயிகள் தொடர்ந்தும் அத்துமீறுவதனால் கண்டாவளை விவசாயிகள் தாம் தொடர்ந்தும் பாதிப்பை எதிர்கொள்வதனைத் தடுக்க புதியதோர் திட்டமாக நெத்தலியாற்றுப் பகுதியின் ஊடாகச் செல்லும் நீர் வாய்க்காலுக்குப் பதிலாக மாற்றுப்பாதை அமைக்கக் கோருகின்றனர். தேவையேற்படின் அடுத்த ஆண்டு சிறுபோகம் ஆரம்பித்து ஒரு மாத காலத்துக்குள் அதை நடைமுறைப்படுத்த முடியும். எனினும் பரிசீலிக்கத் தொடங்கவில்லை"- என்றார். (து-105)

# இலங்கை முஸ்லிம்களுக்கு உதவ ஓ.ஐ.சி கவனம் செலுத்துகிறது

## *பைசல் காசிம் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 8

உலக முஸ்லிம் நாடுகளின் அமைப்பான இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான ஒன்றியம் [ஓ.ஐ.சி] இலங்கை முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் அக்கறை செலுத்தி, உதவுவதற்குக் களத்தில் குதித்துள்ளது. அதற்காக இலங்கை முஸ்லிம்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளனர். இந்தப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே நாம் எமது அமைச்சுப் பதவிகளைத் துறந்தோம்.

அத்தோடு நின்றுவிடாமல் நாம் முஸ்லிம் நாடுகளின் உதவிகளையும் நாடினோம். எல்லாவற்றையும் பொறுமையாகப் பார்த்துக்கொண்டிருந்த முஸ்லிம் நாடுகள் இப்போது களத்தில் குதித்துள்ளன. குறிப்பாக, உலக முஸ்லிம் நாடுகளின் அமைப்பான இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான ஒன்றியம் [ஓ.ஐ.சி] இலங்கை முஸ்லிம்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடியுள்ளது.

அதனடிப்படையில் உடனடியாக இலங்கை முஸ்லிம்களின் பாதுகாப்பை உடன் உறுதி செய்யுமாறு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன முஸ்லிம் நாடுகளின் இந்த நடவடிக்கை இலங்கை முஸ்லிம்களுக்கு பெரும் ஆறுதலாக உள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளும் தலையீடுகளும் தொடர வேண்டும். இலங்கையின் அபிவிருத்திக்காக உதவிகளை அள்ளி வழங்கும் முஸ்லிம் நாடுகள் எமது பிரச்சினைகள் தொடர்பில் தலையிடுவதற்கான முழுமையான உரிமைகளைக் கொண்டுள்ளன என்பதை மறுக்க முடியாது- என்றுள்ளது. (த)



# விவசாயிகளுக்கு பயன்தரும் மாங்கன்றுகள் கையளிப்பு

முல்லைத்தீவு.ஜூன் 8

முல்லைத்தீவு முள்ளியவளை கமநலசேவை திணைக்களத்தில் ஒரு தொகுதி விவசாயிகளுக்கு பயன்தரும் மாங்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டன.

நாட்டுக்கான ஒன்றிணைவோம் வேலைத்திட்டத்தின் நான்காம் நாள் நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது இந்த கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டன.

மா மரச் செய்கையை ஊக்கிவிக்கும் நோக்கில் அரச தலைவரின் தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் ரிகோம். ஈ.ஜே.சி மாங்கன்றுகள் 12 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

விவசாய போதனாசிரியர் எஸ்.கரிகாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அரச தலைவர் செயலகத்தின் உதவிச்செயலர் பிரசாத் செனரத், அரச தலைவரின் தேசிய உணவு உற்பத்தித்திட்டத்தின் வடக்கு-கிழக்கு இணைப்பாளர் செகமன்ன சிங்கி, முல்லைத்தீவு மாவட்ட விவசாய பணிப்பாளர் இ.கோகுலராசன், பாடவிதான அலுவலகர் எஸ்.தயாளசீலன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கான மாங்கன்றுகளை வழங்கிவைத்தனர்.

செறிவான பயிர்செய்கை எனும் திட்டத்தில் 50 வீத மனிய அடிப்படையில் ஒவ்வொரு விவசாயிக்கும் 110 கன்றுகள் வீதம் 12 விவசாயிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன. (ஜ-ரி3)

## உளஆற்றுப்படுத்தலுக்காக

# கட்டுவப்பிட்டி பங்கு மக்கள் மன்னாருக்கு நேற்று வருகை

மன்னார், ஜூன் 8



தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி ஆலயப் பங்கு மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை மாலை மன்னார் மாவட்டத்துக்கு வருகை தந்தனர்.

ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் பல இடங்களில் ஐ.எஸ். அமைப்பால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. 259பேர் உயிரிழந்தனர். 450 பேருக்கு மேல் காயமடைந்தனர். நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி தேவாலயத்திலும் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்த ஆலயத்தின் பங்குக்குரிய மக்கள் உடல் மற்றும் உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

பாதிப்புக்களிலிருந்து அவர்களை ஆற்றுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மன்னார் மறை மாவட்ட திருத்தலங்களை தரிசிப்பதற்காக இரண்டு நாள் பயணமாக அவர்கள் மன்னாருக்கு நேற்று மாலை வருகைதந்தனர்.

கொழும்பு மறைமாவட்ட விசுவாசத்தைப் பரப்பும் அமைப்பின் பொறுப்பாளர் அருட் தந்தை பிரசாத் கர்ஸண் அடிகளாரின் வழிநடத்துதலில், மன்னார் மறைமாவட்டத்தின் மடுத் திருத்தலம், மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம், மன்னார் தோட்டவெளி மறை சாட்சிகளின் இராக்கினி ஆலயம் போன்ற தலங்களுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டதுடன் அந்தப் பகுதி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது நிலையினருடனும் உரையாடல்களில் ஈடுபட்டனர். (ஒ.5,56)

# சிறுவர் நாடக திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 8

சிறுவர் நாடகத் திருவிழா இன்று சனிக்கிழமை பி.ப. 4 மணியளவில் மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பூராயம் அமைப்பினரின் 'ஊர் கூடி மகிழும் நாடகக் கொண்டாட்டம்' என்ற தலைப்பில் சிறுவர் நாடகத் திருவிழா நடைபெறவுள்ளது. பூராயம் செயல் அமைப்பினரின் சிறுவர்களை மகிழ்விக்கும் கோமாளிகள் அரங்க ஆற்றுகையும், ஆரோகணா அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் க.சீலனின் எழுத்துருவில் அயூரனுடைய நெறியாள்கையில் உருவான பல்வேறு மேடைகள் கண்டு அனேகரின் வரவேற்பைப் பெற்ற 'வண்டிப் பயணம்' சிறுவர் நாடகமும், செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில் க.சீலனின் எழுத்துரு, நெறியாள்கையில் உருவான 'எண்ணித் துணிவோம்' சிந்துநடைக் கூத்துருவ நாடகமும் ஆற்றுகை செய்யப்படவுள்ளது. (ஒ.5)



தேசிய சுற்றாடல் தினத்தையொட்டி தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தினர் கடந்த 31ஆம் திகதி பிரதேச கடற்கரைப் பகுதியில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர். கடல்சார் வளங்களைப் பாதுகாத்தலும் பிளாஸ்ரிக் கழிவகற்றலும் செயற்றிட்டத்தின் கீழ் பிரதேசசெயலர் ச.சிவசிறி தலைமையில் செயலக அலுவலர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (த-9)

# பசுமைப் புரட்சி செய்வதற்கு அதிக மரங்களை நடுங்கள்

## மாவட்டச் செயலர் கோரிக்கை



கொடிகாமம், ஜூன் 8

வருடாந்தம் தசம் 1(.1) வீதத்தால் வெப்பநிலை அதிகரித்துச் செல்வதாகக் கூறுகின்றனர். 10 வருடங்களில் ஒரு பாகை செல்சியஸ்சால் வெப்பநிலை உயரும். ஆகவே பசுமைப்புரட்சி செய்யும் நோக்கில் சகலரும் அதிகளவான மரங்களை நடவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி தென்மராட்சி எழுதுமட்டுவாழ் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் ஒட்டுவெளிக் கிராமப் பகுதியில் ஏ-9 வீதியில் வடக்கு மாகாண ஆளுநரின் மரநடுகை நிகழ்வு நடைபெற்றது. கடந்த புதன்கிழமை நடந்த இந்த நிகழ்வில் 250 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேசசெயலர் தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

பல அபிவிருத்திகளின் காரணமாகச் சுற்றாடல் மோசமான அளவிலே பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. கூடுதலான தொழிற்சாலைகள் மற்றும் அபிவிருத்திகள் காரணமாக மரங்கள் தறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் காபனீரொட்சைட்டுவாயு அதிகளவில் உற்பத்தியாகிறது. ஏ-9 வீதியில் வவுனியாவில் இருந்து இரு பக்கமும் இந்த வருடம் தொடர்ச்சியாக மரங்களை நடவேண்டும் என்பது நோக்கம். ஏ-9 வீதியில் நடுவதற்கு இன்று (கடந்த புதன்கிழமை) எழுதுமட்டுவாழ் பகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது. மரங்கள் நடுவதென்பது மிகவும் சுலபமான காரியம். ஆனால் மரங்களை எவ்வாறு தக்கவைக்கப் போகிறோம். அதனை எவ்வாறு உய்ய வைக்கப் போகிறோம் என்பதுதான் மிக முக்கிய விடயம்.

**பிறந்தநாளில் மரக்கன்று நடுங்கள்**

ஒவ்வொருவரும் தமது பிறந்த நாளில் ஒரு மரத்தை நடுவதாக இருந்தால் ஒருவர் ஒரு மரம் நட்டாலே ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட 6 லட்சத்து 20 ஆயிரம் மரங்களை நடமுடியும். அவ்வாறு நட்டால் கூடுதலான மரங்களை நடலாம். எல்லோரும் இணைந்து இந்தச் செயற்பாட்டைச் செய்வதன் மூலம் எமது வருங்கால சந்ததியைப் பாதுகாக்க முடியும். சூழலைப் பசுமையாக வைத்திருக்க கூடுலான மரங்களை நட வேண்டும். மாகாண விவசாயத் திணைக்களம் ஒழுங்கமைப்புக்களைச் செய்து கொண்டுஇருக்கிறது. தேசிய சுற்றாடல் தினமான இந்த ஒரு கிழமையில் தான் மரங்கள் நட வேண்டும் என்பதல்ல. தொடர்ந்து செய்யலாம். விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு வாரம் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுகிறது - என்றார்.

**கட்டளைத் தளபதி உரை**

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராட்சி உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

கடந்த ஒன்றரை ஆண்டுக்குட்பட்ட காலப்பகுதியில் நாம் தென்னைவள அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து 37 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகளை யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் நட்டுள்ளோம். அந்தத் தென்னங்கன்றுகள் அனைத்தும் தென்னைவள அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்டோம். அதனை நட்டதுடன் நின்று விடாது எமது இராணுவ அதிகாரிகள் பராமரித்து வருகின்றனர்.

பனைவள அபிவிருத்தித்திணைக்களத்துடன் இணைந்து 20 ஆயிரம் பனம் விதைகளை நட்டு இந்தப் பகுதியின் அபிவிருத்திகாக நாம் பனைவளத்தையும், வனவள அபிவிருத்தித்திணைக்களத்துடன் இணைந்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்களை நட்டு வனவளத்தையு ம், கரையோர மூலவள திணைக்களத்துடன் இணைந்து கரையோரங்களுக்குப் பொருத்தமான தென்னை, பனை மரங்களையும் நட்டுப்பராமரித்துவருகின்றோம். குறைந்த வருமானமுடைய குடும்பம் ஒன்றுக்கு 5 தென்னங்கன்றுகள் வீதம் 15 ஆயிரம் கன்றுகள் வழங்கியுள்ளோம்.

கரையோர மரங்களை வளர்த்தால் 5 வருடங்களில் பயன்பெற முடியும். பயன்பெறுவதன் மூலம் நாட்டின் பல அபிவிருத்திகளையும் அவர்களின் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும்.

நாம் எதிர்வரும் காலத்தில் இங்கு வந்து வாக்கு கேட்பதற்காக அனைத்தையும் செய்யவில்லை. உணர்வுபூர்வமாகத் தான் இவற்றைச் செய்கிறோம்.

எமது சுற்றாடலை நாம் பாதுகாத்தால், வளப்படுத்தினால் அந்தச் சுற்றாடல் எம்மைப் பாதுகாக்கும். இறைவனின் ஆசீர்வாதமும் எமக்கு கிடைக்கும் - என்றார். (த-159)



# ஈஸ்ரர் தாக்குதலில் இறந்தோருக்கு 41 ஆம் நாள் அஞ்சலி ஞாயிறன்று!

யாழ்ப்பாணம், ஜூன் 8

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்கான 41ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை நேசகம் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

அருட்திரு அழகுராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு அருட்சகோ. பாலசுப்பிரமணியத்தின் செபத்துடன் ஆரம்பமாகியது. பல் சமயத்தவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-422)

# பட்டப்பகலில் வீடு உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 8

பட்டப்பகலில் வீட்டில் யாரும் இல்லாதவேளை வீட்டை உடைத்து உட்புகுந்த திருடர்கள் 5 பவுண் தங்க நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் பெருமாள்கோவிலுக்கு முன்பாகவுள்ள வீட்டில் நேற்றுமுன்தினம் பகல் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் கணவன் - மனைவி பணியின் நிமிர்த்தம் அலுவலகத்துக்குச் சென்றுள்ளனர். பிள்ளைகளும் பாடசாலைக்கு சென்றிருந்தனர்.

இந்தச் சமயம் வீட்டின் ஜன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் சல்லடையிட்டுத் தேடுதல் மேற்கொண்டு வீட்டில் இருந்த 5 பவுண் தங்க நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் வீட்டின் உரிமையாளர் காலை 8.30 மணிக்கு வெளியில் சென்ற நிலையில் 11.15 மணிக்கு வீடு திரும்பிய நிலையில் இவ்வாறு களவு இடம்பெற்றமை தெரியவந்துள்ளது.

குறித்த களவு தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஜ-105)



காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் கடந்த 5ஆம் திகதி மாலை இடம் பெற்ற ஆசிரியர் க.தம்பையாவின் 5 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் காலணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ம)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்துப் படிவம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்துப் படிவம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 485 குடும்பங்களுக்கே உரித்துப் படிவங்கள் வழங்கப்பட்டன. தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி வி.கௌசிகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கு.சர்வானந்தன், ஐக்கிய தேசியக் கட்சியின் இணைச் செயலாளர் லோகேஸ்வ்ரன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் இ.அன்ரனி மற்றும் அமைச்சின் இணைப்பாளர்கள் அரசியல் பிரமுகர்கள், தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்கள் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அலுவலர்கள், சமுர்த்தி பயனாளிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் 300 பயனாளிகளுக்குக் கடந்த 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து தலைமை அமைச்சர் விக்கிரமசிங்கவால் சமுர்த்தி உரித்துப்படிவம் வழங்கப்பட்டது.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆயிரத்து 389 பேருக்கும், கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 2 ஆயிரத்து 110 பேருக்கும், தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 4 ஆயிரத்து 195 பேருக்கும், கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆயிரத்து 840 பேருக்கும், உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 2 ஆயிரத்து 450 பேருக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 2 ஆயிரத்து 110 பேருக்கும், சங்கானைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆயிரத்து 191 பேருக்கும், காரைநகர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 326 பயனாளிகளுக்கு இதுவரை சமுர்த்தி உரித்துப் படிவம் வழங்கப்பட்டுள்ளன. (ஜ-9,7)



# அரசொல்லை வீதி சீரமைப்பு

அளவெட்டி, ஜூன் 8

அளவெட்டி வடக்கு அரசொல்லை வீதி நீண்டகாலத்தின் பின்னர் சீரமைக்கப்பட்டுள்ளது.

ஊர் மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வீதி சீரமைக்கப்பட்டது. (ஜ-63)

# வடக்குக்கு ஒதுக்கிய நிதியில் இதுவரை வந்தது 25 சதவீதமே

## மாகாணத் திறைசேரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கு மாகாணத்துக்கு 2019ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 25 வீதம் தற்போது கிடைத்துள்ளது என்று மாகாண திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களுக்கு ஒவ்வொரு வருடமும் நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் புதிய ஆண்டுக்கான திட்டங்களை வகுத்து அதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு மாகாணப் பிரதி முதன்மை செயலர் ஊடாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். திட்டங்களுக்கு ஏற்ப அரசு நிதியை ஒதுக்கீடு செய்யும். இந்த நிதி வருட ஆரம்பத்தில் மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். பாதீடு தாமதமாகவே நிறைவேற்றப்பட்டதன் காரணமாக முதல் காலாண்டு கடந்த நிலையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் நான்கில் ஒருவீதம் தற்போது கிடைத்துள்ளது. மிகுதி நிதி படிப்படியாக விடுவிக்கப்படும். வடக்கு மாகாணத்துக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியாக 3 ஆயிரத்து 169 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சு அமைச்சுக்கு ஆயிரத்து 118 மில்லியன், விவசாய அமைச்சுக்கு 489 மில்லியன், கல்வி அமைச்சுக்கு 573 மில்லியன், சுகாதார அமைச்சுக்கு 620 மில்லியன், மகளிர் விவகார அமைச்சுக்கு 84 மில்லியன், சிறப்புத் தேவையுடைய கிராம அபிவிருத்திக்கு 300 மில்லியன் ரூபா, ஏனைய இணைச் செலவுகள் 85 மில்லியன் உட்பட 3 ஆயிரத்து 169 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## மின்வசதியற்ற குடும்பங்களுக்கு மின் வசதி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மின்சார வசதி இல்லாத குடும்பங்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ள மானிப்பாய்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் துரித கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 64 குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா வீதம் 19 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்கினார்.

உடுவில் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிரதேச செயலர் ஜெயகாந்த் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன், வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

உடுவில் பிரதேச சபை பிரிவில் 120 குடும்பங்கள் இதுவரை மின்சார வசதியின்றி வாழ்ந்து வருகின்றார்கள். அனைவருக்கும் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற அரச திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 64 குடும்பங்களுக்கு மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. (ம-115)



## முஸ்லிம் பேரவையையும் கனடாத் தூதர் சந்தித்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 8

இலங்கைக்கான கனடா தூதர் டேவிட் மக்னொனுக்கும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முஸ்லிம் பேரவையின் நிர்வாகச் செயலர் என்.எம். அப்துல் லாஹ்வுக்கும் இடையில் சந்திப்பு பலாலி வீதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்றது.

பயங்கரவாதத் தாக்குதலால் யாழ்ப்பாணத்தில் அரச பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளுக்கு யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியிருந்தது. யாழ்ப்பாணத்திலே சொற்பமாக வாழ்கின்ற முஸ்லிம்கள் தமிழ் சகோதரர்களுடன் ஒன்றிணைந்து வாழத்தான் விரும்புகின்றனர். எம்மைப் பிரிப்பதற்கு பல்வேறு தரப்பினரும் முயற்சித்து வருகின்றனர். ஒருபோதும் அவ்வாறான நடவடிக்கைகள் வெற்றியளிக்கப் போவதில்லை என்று தூதருக்குக் கூறினேன் என்று அப்துல் லாஹ் தெரிவித்தார்.

கனடா தூதர் வடக்கில் பல தரப்பினரையும் சந்தித்துள்ளார். (த-105)

## உள்ளூராட்சிச் சபைகளால் அறவிடப்பட்ட வரி உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு விடுவிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கு மாகாணத்தில் கடந்த காலத்தில் உள்ளூராட்சி சபைகளால் அறவிடப்பட்ட முத்திரை வரி கொழும்பு திறைசேரியில் இருந்து மீண்டும் உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளது என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2015ஆம் ஆண்டு காலப் பகுதியில் உள்ளூராட்சிச் சபைகளுக்குக் கிடைக்க வேண்டிய முத்திரை வரிகள் கொழும்பு திறைசேரிக்கு அனுப்பும் நிலை காணப்பட்டது. அந்த நிதி சபைகளின் அபிவிருத்தி நிதியாகக் காணப்படும். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நேரடியாக வழங்கப்படுவதில்லை. இவ்வாறு முத்திரை வரி நிதி 134 மில்லியன் ரூபா வடக்கு மாகாணத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியாக அது ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஊடாக இந்த நிதி உள்ளூராட்சிச் சபைகளின் வேலைத் திட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளது. குறித்த சபைக்குட்பட்ட பகுதியில் கிடைத்த முத்திரை வரிக்கு ஏற்பட்ட அபிவிருத்தித்திட்ட முன்மொழிவுகளை அனுப்பி வைக்குமாறு உள்ளூராட்சித் திணைக்களம் உள்ளூராட்சிச் சபைத் தலைவர்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது. (ம-7)

## ஆலயத்தை வட்டமிட்ட கருடன் ஆச்சரியத்தில் அடியார்கள்!

சாவகச்சேரி, ஜூன் 8

ஆலயத்தில் குடமுழுக்கு நடைபெற்ற வேளையில் கருடன் ஒன்று வந்து வட்டமிட்டு அடியார்களை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரிப் பெருங்குளம் அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஆலய குடமுழுக்கின்போது முதன்மைக் குருக்கள் உட்பட குருமார் கலசங்களுக்கு கும்பத் தண்ணீர் ஊற்றுவதற்கு ஆயத்தமான வேளையில் கருடன் ஒன்று கோவிலைச் சுற்றி வலம் வந்து அங்கு நின்ற அடியார்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

குடமுழுக்கு வேளையில் கருடன் ஆலயத்தைச் சுற்றுவது நல்ல சகுணம் என்று ஆலய முதன்மைக் குரு தெரிவித்தார். (ஐ-9)

## வைகாசிப் பொங்கல் உற்சவம்

மானிப்பாய் வடக்கு அருள்மிகு பெரியதம்பிரான் ஆலய வைகாசிப் பெரும் பொங்கல் உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சாடியடி ஆலயத்தில் பூசை ஆரம்பமாகி பண்டம் எடுக்கும் நிகழ்வு, வள்ந்துப் பானை வீதி வலம் வருதல் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை பெரும் பொங்கல் நடைபெற்று தொடர்ந்து சப்த கன்னிமார்களை அழைக்கும் நிகழ்வு, ஊஞ்சல் பாட்டு என்பன நடைபெறும்.

எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு எட்டாம் மடைப் பொங்கல் நிகழ்வு இடம்பெறும் என்று ஆலயப் பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஐ)

## மாட்டுக் கன்று திருட்டு; மேலும் ஒருவர் கைது

கொடிகாமம், ஜூன் 8

மாட்டுக் கன்றைத் திருடினர் என்ற குற்றச்சாட்டில் மேலும் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

தாவளை, இயற்றாலை பகுதியில் கடந்த 30 ஆம் திகதி ஒரு வயது நிரம்பிய மாட்டுக்கன்று காணாமல் போயிருந்தது.

இது தொடர்பில் மாட்டின் உரிமையாளர் மாடு திருடப்பட்டமை தொடர்பில் அயல் வீட்டு பெண்ணின் மீது சந்தேகம் உள்ளதாகத் தெரிவித்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து 18 வயதுடைய அயல் வீட்டுப் பெண்ணை பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 2ஆம் திகதி முற்படுத்தினர். இதன்போது சந்தேகநபரான பெண்ணை பிணையில் செல்ல பதில் நீதிவான் அனுமதியளித்தார். இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் அப்பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரையும் சந்தேகத்தில் கடந்த 5ஆம் திகதி பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ-159)

## நம்பிக்கை இல்லம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத்துக்கு முன்பாக 'நம்பிக்கை இல்லம்' ஒன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி ப.ஜோ.ஜெபரெட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார்.

மது மற்றும் போதைப் பொருள் பாவனையால் மனஅழுத்தம், மனச் சோர்வு, மறதி, அங்கலாய்ப்பு, வீட்டு வன்முறை போன்ற பாதிப்புக்களில் இருந்து மக்களை விடுவிக்கும் வகையில் இந்த நம்பிக்கை இல்லத்தின் செயற்பாடுகள் அமையும் என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

### கொடிகாமம்


## செபமாலை கோவில் வீதி சீரமைப்புப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம் செபமாலை மாதா கோவில் வீதியை சீரமைக்கும் பணிகள் சம்பிரதாய பூர்வமாக அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

செபமாலைமாதா ஆலயத்துக்குச்செல்கின்ற வீதியை சீரமைத்துத் தருமாறு ஆலய நிர்வாகத்தினர் உட்பட்ட பங்கு மக்களும் அந்த வீதியைப் பயன்படுத்துகின்ற பொதுமக்களும் முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோரிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு அமையவே குறித்த வீதியை சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தநிகழ்வில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா. கிஷோர், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-159)



# ப.நோ.கூ. சங்கக் கிளைகளை வினைத் திறனாக்கத் திட்டம்

## மாகாண கூட்டுறவுத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கு மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளின் செயற்பாட்டை வினைத்திறனாக்குவதற்குச் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாண கூட்டுறவுத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பல கிளை விற்பனை நிலையங்கள் மூடப்பட்ட நிலையிலும் மற்றும் கிளைகள் இயங்க முடியாது நட்டத்திலும் செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறான கிளை நிலையங்களை சம்பந்தப்பட்ட கிளைக்குழுக்களின் ஆதரவுடன் முழு வலுவான வினைத் திறன்மிக்க கிளை நிலையங்களாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாகச் சங்கங்கள் செயற்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றிகரமாக செயற்பட வேண்டும் என்றால் அதன் கிளைகள் சிறப்பாக இயங்க வேண்டும். கிளைக்குழு குறித்த கிளை நிலையத்தை நடத்தவதற்குத் தேவையான முதலீட்டுத் தொகையைத் தீர்மானித்து. ஒவ்வொரு கிளை அங்கத்தவர்களும் அதற்கான பங்களிப்பை மேற் கொள்ள வேண்டும்.

அதேபோன்று கணக்குகளைப் பேணுதல் மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்யும் விடயங்களில் முகாமையாளர்கள் தமது மேற்பார்வை நடவடிக்கையைச் சரியாக மேற்கொள்ள வேண்டும்.

கிளை நிலைய முகாமையாளரே கணக்கு வைப்புக்களை பேண வேண்டும். விற்பனைக்கான பொருள்கொள்வனவின் போது அத்தியாவசிய பொருள்களைத் தலைமைச் சங்கத்தின் மொத்த நிலைய விற்கும் விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

கிளையின் மாதாந்த தேறிய இலாபத்தில் ஐந்தில் ஒரு பங்கை கிளை நிலைய இலாப ஒதுக்கமாக தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். கிளைக்குழு மாதாந்தம் குறைந்தது ஒரு கிளைக்குழுக் கூட்டத்தையாவது நடத்தி கிளையின் செயற்பாடு தொடர்பாகக் கண்காணித்தல் வேண்டும்.

இவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் வடக்கு மாகாணத்தில் சிறப்பாக செயற்பட முடியும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ம-717)

பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள்







சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணம் நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் பாராம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றன. விளையாட்டு நிகழ்வில் சிறுவர்கள், பெரியோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)




## மாணவர்களுக்கு ஈருருளிகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 8

சிறுவர் வறுமை உதவி நிறுவனத்தால் புத்தூர் சோமாஸ்கந்த வித்தியாலய மாணவர்கள் மூவருக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன.

கொக்குவில் சம்பியன் வீதியில் உள்ள கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தில் வைத்து நிறுவனத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளரால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-222)

## மனவளக் கலை அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 8

வயாவிளான் மத்திய கல்லூரியில் மாணவர், ஆசிரியர்களுக்கான மனவளக்கலை யோகா பற்றிய அறிமுக நிகழ்வு நேற்றுக் காலை இடம் பெற்றது.

கல்லூரி அதிபர் வே.த.ஜயந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளரும் இந்நாள் மனவளக்கலை துணைப் பேராசிரியருமான திருமதி அ.வேதநாயகம் (வயவன்) கலந்து கொண்டார். (ம-160)



## இறுதிக் கிரியைகள் நடைபெறும்போது சடலத்தைத் தூக்கிச் சென்ற பொலிஸ்!

சாவகச்சேரி, ஜூன் 8

விபத்தால் 4 மாதங்களாகப் படுக்கை நோயாளியாகி சிகிச்சை பெற்றுவந்தவர் நேற்று முன்தினம் வீட்டில் இறந்தார். நீதிமன்றில் வழக்கு உள்ளதால் பொலிஸாருக்குத் தெரியாமல் சடலத்தை அடக்கம் செய்ய முற்பட்டவேளையிலேயே பொலிஸார் சடலத்தைக் கைப்பற்றி சாவகச்சேரி மருத்துவமனைச் சவச்சாலையில் சேர்த்தனர்.

நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நாவலடி ஒழுங்கையைச் சேர்ந்த பெரியான் நாகேந்திரம் (வயது -67) ஈருருளியில் பயணித்த வேளையில் கைதடியில் கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி உந்துருளியால் மோதுண்டு விபத்துக்குள்ளானார். கடந்த நான்கு மாதங்களாக போதனா மருத்துவமனை மற்றும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை ஆகியவற்றில் படுக்கை நோயாளியாகச் சிகிச்சை பெற்று வந்தார். கோமா நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்தார்.

அன்று மாலை தகனஞ் செய்வதற்கான இறுதிக்கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பிற்பகல் 2.45 அளவில் வீட்டுக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டு மருத்துவமனைச் சவச்சாலையில் சேர்த்தனர் என உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

அவர் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றில் நிலுவையிலுள்ளது. முதியவரின் சாவு தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்படாமல் இறுதிக்கிரியைகள் நடைபெற்றன எனவும் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டு மேலதிக பரிசோதனைகளுக்காக மருத்துவமனை சவச்சாலையில் வைத்துள்ளனர் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முதியவரின் சாவு தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மூலமாக விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். நேற்று சாவு விசாரணை நடைபெற்றது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு திடீர் சாவு விசாரணை அதிகாரி சாவகச்சேரிப் பொலிஸாருக்குப் பணித்தார். (கு-9,159)

## கைதடி முதியோர் இல்லத்துக்கு பிளாஸ்ரிக் கதிரைகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 8

கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின்போது திருவிழா உபயகாரர்களால் ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் அறக்கொடையாக உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவது வழக்கம்.

இம்முறை கைதடி அரச முதியோர் இல்லத்தின் கலாசார மண்டபத்துக்குத் தேவையான பிளாஸ்ரிக் கதிரைகளை 12ஆம் திருவிழா உபயகாரர்களால் வழங்கி வைக்கப்பட்டன. இல்ல அத்தியட்சகர் வ.செல்வத்திடம் குறித்த பிளாஸ்ரிக் கதிரைகள் உத்தியோகபூர்வமாக 12ஆம் திருவிழாவின் போது வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-159,17)




## மணியம்தோட்டத்தில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 8

யாழ்ப்பாணம் மணியம்தோட்டம் பகுதியில் காணி துப்புரவு செய்யும்போது, கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர்கள் நேற்றுக் காலை காணியைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்ட போதே கைக்குண்டு ஒன்று இருப்பதைக் கண்டுள்ளனர்.

உடனடியாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். அந்த தகவலின் பிரகாரம் சிறப்பு அதிரடிப் படையினர், சம்பவ இடத்துக்குச் சென்று கைக்குண்டை மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட கைக்குண்டை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையை சிறப்பு அதிரடிப் படையினர் முன்னெடுத்து வருவதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-106)

# சிறு தானியங்கள் உலர்த்த தறப்பாளை பெற்றுத்தருக

## விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன் 8

சிறு தானியங்களை உலர வைப்பதற்குத் தறப்பாள்களைப் பெற்றுத் தருவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: பயறு ,உளுந்து ,குரக்கன் போன்ற பல்வேறு சிறு தானியங்கள் யாழ்ப்பாணத்தில் பயிரிடப்பட்டு வருகின்றன.ஆனால் அவற்றை உலர வைப்பதற்கு நிரந்தர தளங்கள் இல்லை.தானியங்கள் அறுவடை செய்யப்பட்டு அவற்றை உலர விடுவதற்கு சாக்குகள் மற்றும் துணிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றின் பரப்பு குறைவாக காணப்படுவதால் அதிக தானியங்களை உலர வைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

ஒரே தானியத்தை சிறு சிறு பிரிவுகளில் உலர வைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.மழை வந்தால் ஒரு சாக்கில் உலர வைத்த தானியங்களை எடுத்து வைக்கப்பதற்குள் ஏனைய தானியங்கள் நனைந்து விடும்.பெரிய தரப்பாள் போன்ற படங்கு கிடைத்தால் ஒரே தடவையில் அதிக தானியங்களைஉலர வைக்கமுடியும்.ஆகவே தறப்பாளைப் பெற்று கொடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் மாவட்ட விவசாயப் பிரிவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது .

விவசாயிகள் சிறு தானியங்களை உலர வைப்பதற்கு தறப்பாள் வேண்டும் என்ற கோரிக்கையை மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் முன்வைத்தனர்.

அதற்கு அமைவாக இந்தக் கோரிக்கையை பிரதேச செயலகம் ஊடாக எமக்கு அனுப்பிவைக்குமாறு கோரியிருந்தோம்.

நிதி மூலங்களை ஆராய்ந்து தறப்பாளை பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)



அரச அலுவலகர்களுக்கான

## காப்புறுதித்திட்டம் தொடர்பான செயலமர்வு முல்லைத்தீவில்!

முல்லைத்தீவு. ஜூன் 8

அரச அலுவலர்களுக்கான காப்புறுதித் திட்டம் தொடர்பான செயலமர்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக அரச அலுவலர்களுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் அக்ரஹார காப்புறுதி தொடர்பான கருத்தமர்வு காப்புறுதி நிதியத்தின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. (ம-ரி3)



## முள்ளிவாய்க்கால் கிழக்கில் புதிய வீடு கையளிக்கப்பட்டது

முல்லைத்தீவு. ஜூன் 8

முள்ளிவாய்க்கால் கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்ட வீடு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் உமாமகள் மணிவண்ணன் நாடா வெட்டி வீட்டைத் திறந்துவைத்து பயனாளிகளிடம் கையளித்தார்.

அரசதலைவரின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' வேலைத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசியகொள்கைகள் மற்றம் பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் நிதியில் இது அமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அரசதலைவர் செயலக அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், மாவட்டச்செயலக அதிகாரிகள், கிராம அலுவலர் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர். (த-ரி3)



## ஈருருளி கையளிப்பு


வவுனியா,ஜூன் 8

போரால் பாதிக்கப்பட்ட நைனாமடுவில் வசிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு நேற்றுமுன்தினம் ஈருருளி ஒன்று வழங்கப்பட்டது.

நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் செல்வி ப. கேஜுசியா என்பவருக்கே ஈருருளி வழங்கப்பட்டது.

கனடா வன்னிச் சங்கத்தினுடாக கனடாவில் வசிக்கும் செல்லையா கலாநாதனின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த உதவி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

★ ★ ★



முல்லைத்தீவு.ஜூன் 8

முல்லைத்தீவு தண்ணீருற்று சைவ பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் து.பிரதீபனுக்கு ஈருருளி ஒன்று நேற்று வழங்கப்பட்டது.

சிவம் அறக்கட்டளை அமைப்பின் ஊடாக லண்டனில் வசித்து வரும் துரைராச சிங்கம் சிறிகரனின் 40 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு இந்த உதவி வழங்கப்பட்டது. (ஐ-222)

## 4 நாள் வேலைத்திட்டம் 229 மில்லியன் செலவு

### 55 ஆயிரம் பேர் நன்மையடைந்தனர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறும் நாட்டுக்காக ஒன்றிணைவோம் தேசிய வேலைத் திட்டத்துக்கு இதுவரை சுமார் 229 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயல்ர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரையிலான நான்கு தினங்களில் சுமார் 941 வேலைத் திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்தவேலைத் திட்டங்கள் ஊடாக 54 ஆயிரத்து 685 பேர் நன்மை அடைந்துள்ளனர். வேலைத் திட்டத்தின் நான்காவது நாளான நேற்று முன்தினம் 262 வேலைத்திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

இதற்காக சுமார் 137 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 14 ஆயிரத்துக்கும் அதிகமானோர் நன்மையடைந்துள்ளனர் என்றும் மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.

அரசதலைவரின் பணிப்பின் பேரில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளின் இறுதிநாள் இன்று. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன இன்று முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொள்கின்றார்.

(த-ரி3)

## பால் எடுக்கும் பாத்திரங்கள் பயனாளிகளுக்கு கையளிப்பு

முல்லைத்தீவு. ஜூன் 8

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச அலுவலகத்தில் தெரிவுசெய்யப்பட்ட கால்நடைப் பண்ணையாளர்களுக்கு பால் எடுக்கும் பாத்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

அவர்களை ஊக்கிவிக்கும் நோக்கில் தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் இவை வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசதலைவரின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' வேலைத்திட்டத்தின் கீழ் நான்காம்நாள் நிகழ்வாக இது நடைபெற்றது.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில்

நிகழ்வில் அரசதலைவர் செயலக பிரதிப்பணிப்பாளர் சந்திரத்தின பல்லேகம, மாவட்டச் செயலக அதிகாரிகள் மற்றும் கால்நடை சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். (த-ரி3)





## அடிக்கல் நடுகை

முல்லைத்தீவு.ஜூன் 8

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் கிராம பனிச்சையடி சிறி முருகன் ஆலய மூலஸ்தான கருவறை மற்றும் விநாயகருக்கான கருவறை ஆகியவற்றுக்கு அடிக்கல் நடுகை செய்யப்பட்டது. இந்த நிகழ்வானது நேற்று முன்தினம் காலை 7 மணி தொடக்கம் 8 மணிக்கும் இடையில் உள்ள சுப மூகூர்த்த வேளையில் ஆலய முதன்மைக் குரு தலைமையில் இடம்பெற்றது. (ஐ-222)

## 600 குறைகேள் மனுக்கள் மக்களால் ஒப்படைப்பு

முல்லைத்தீவில், ஜூன் 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம்வரை 600 குறைகேள் மனுக்கள் அரசதலைவர் செயலக அதிகாரிகளிடம் மக்களால் கையளிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசதலைவரின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் 'அரசதலைவரிடம் சொல்லுங்கள்' என்ற வேலைத்திட்டம் மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலகங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மக்களின் குறைகளில் அதிகளவிலான குறைகேள் மனுக்கள் வெலிஓயா, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பகுதிகளில் இருந்து கையளிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசதலைவர் இன்று முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி3)


# ஆராதி நகர், சஞ்சீவி நகர் மக்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம் ,ஜூன் 8
கிளிநொச்சி தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்கில் அமைக்கப்பட்ட, ஆராதி நகர், சஞ்சீவி நகர் மாதிரி கிராம வீட்டு திட்டங்கள் நேற்றுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாச மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் வீட்டுத் திட்டத்தைப் பயனாளிகளிடம் கையளித்தனர். தேசிய வீடமைப்பு அதிகார சபையின் "செமட்ட செவன" வேலைதிட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகிறன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள தம்பகாமம் வண்ணாங்கேணி வடக்கு பகுதியில் குறித்த திட்டத்தின் கீழ் இரு மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட்டு 32 பயனாளிகளுக்கான காணி உரிமங்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டன. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 பேருக்கு மூக்கு கண்ணாடிகளும், 50 பேருக்கு தொழில் உபகரணங்களும், 350 பேருக்கு 50 ஆயிரம், 1 லட்சம், 2 லட்சம் ரூபா பெறுமதியான கடன் திட்டத்தின் கீழான காசோலைகளும் கையளிக்கப்பட்டன. ரூபா 7.5 லட்சம் பெறுமதியான வீட்டு திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 150 பேருக்கு முதல்கட்ட காசோலைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் , கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர், பிரதேச செயலர், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (எ-7)



## பாடசாலை மாணவர்களுக்கு பசும் பால் வழங்கி வைப்பு!

வவுனியா, ஜூன் 8
வவுனியா இராசேந்திரன்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 172 மாணவர்களுக்கு பசும் பால் வழங்கும் திட்டம் நேற்றுக் காலை பாடசாலையின் அதிபர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய 28ஆவது ஆண்டு குடமுழுக்கை முன்னிட்டு இராசேந்திரன் குளம் அ.த.க பாடசாலையில் கல்வி கற்கும் 172 மாணவர்களின் போசாக்கை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (ம)

## கிறிஸ்தவ ஆலயம் அமைக்க அடிக்கல்



மன்னார், ஜூன் 8
மன்னார் பேசாலை வெற்றிமாங்குடியிருப்பு 50 வீட்டுத் திட்டம் முதன்மைவீதி வடக்கு கடற்கரையை அண்டி பகுதியில் 'அடைக்கல அன்னை சிற்றாலயம்' அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடுகை செய்யப்பட்டது.
தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் 50 இலட்சம் ரூபா மற்றும் பேசாலை கட்டுமான தொழிலாளர்கள் சங்கம், மீனவர்களின் ஒத்துழைப்புடன் குறித்த சிற்றாலயம் அமைக்கப்படவுள்ளது.
பேசாலை பங்குத்தந்தை தேவராஜா கொடுத்தோர் அடிகள் தலைமையிலான அடிக்கல் நடும் நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.பிரிமுஸ் சிராய்வா, மன்னார் பிரதேச சபை உறுப்பினர்களான கொன்சல் குளாஸ், திருமதி கிறிஸ்டி சின்னராணி குரூஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
மீனவர்களின் நலன் கருதி குறித்த பகுதியில் இது அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)




## பால் உற்பத்தி சந்தைப்படுத்தல் நிலையம் செம்மலையில் திறப்பு

முல்லைத்தீவு செம்மலையில் பால் உற்பத்திப் பொருள்கள் சந்தைப்படுத்தல் நிலையம் நேற்று சீரமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.
2 லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்பட்ட கட்டடத்தை அரச தலைவரின் நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத்திட்டத்தின் கீழ் திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், அரச தலைவர் செயலக அதிகாரிகள், கரைதுறைப்பற்று பிரதேச செயலர்,புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சுதாரசன் உள்ளிட்ட கிராம மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். குறித்த நிலையத்தில் மரக்கன்றுகளும் நட்டுவைக்கப்பட்டன. (ஐ-ரி3)



ஆழியவளை முன்பள்ளி மாணவர்களின் மாதிரிச் சந்தை நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. (ம-70)



## பிரம்ம குமாரிகள் நிலைய தியானமண்டபம் திறப்பு

மன்னார், ஜூன் 8
வவுனியா குகன் நகரில் பிரம்ம குமாரிகள் தியானமண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் நேற்றுமுன்தினம் இதைத் திறந்து வைத்தார்.
நிகழ்வில் பிரம்ம குமாரிகள் அமைப்பின் அகில இலங்கை பொறுப்பாளர் கணேஸ் உள்ளிட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர். (213)



அரசதலைவரின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' நிகழ்ச்சித் திட்டத்தின் நான்காம் நாளான நேற்று முன்தினம் முல்லைத்தீவு நகர்பகுதியில் முதன்மை வீதிகளின் இரு மருங்குகளிலும் 152 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நடைபெற்றது.
மாவட்டச் செயலர், மாவட்ட இடர் முகாமைத்துவ அதிகாரிகள், காணிப்பயன்பாட்டு அதிகாரிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், முல்லைத்தீவு மகா வித்தியாலய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் 59 ஆவது படைப்பிரிவினர் கலந்து கொண்டனர்.

# தரக்குறைவாகப் பேசியதால் பிரதி அதிபர் மயங்கினாரா?

## வவுனியாவில் அதிபர் மீது குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 8
வவுனியாவில் பாடசாலை ஒன்றின் அதிபர் அங்கு பிரதி அதிபராகவுள்ள பெண்ணைத் தரக்குறைவாகப் பேசியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அதனால் மன ரீதியாக பாதிக்கப்பட்டு மயக்கமுற்ற அவர் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதேவேளை, இந்தச் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் குறித்த பாடசாலை அதிபர் மீது சிலர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.
இவை பற்றிக் குறித்த பாடசாலை அதிபரிடம் கேட்டபோது, "உப அதிபராகக் கடமையாற்றுபவர்களில் ஒரு பெண் சில பணிகளைச் சீராகச் செய்ய மாட்டார். அவரை மாற்றம் செய்ய வேண்டியிருந்தது. இரண்டாம் ஆண்டில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் இடமாற்றத்தில் சென்றுவிட்டார். அதனால் குறித்த உப அதிபரை அந்த வகுப்பில் கற்பிற்குமாறு தெரிவித்தேன்" என்றார்.
பாதிக்கப்பட்டதாகக் கூறும் பிரதி அதிபர் தெரிவிக்கும்போது, "எனக்கு அதிபரால் பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதனால் மன ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளேன். தகாத வார்த்தைகளால் பேசி என்னை வெளியேறுமாறும் உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார். அது பற்றி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளேன். அதிபர் இழைக்கும் அநீதிகள் குறித்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முற்கூட்டியே முறையிட்டிருந்தேன்" என்று தெரிவித்தார்.
வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுரேந்திரன் அன்னமலரிடம் கேட்டபோது, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளார்கள். சம்பவம் தொடர்பாக அதிபரிடம் அறிக்கை கோரியிருந்தேன். இதுவரையில் வழங்கப்படவில்லை. பிரதி அதிபர் முறையிட்டுள்ளது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன."
- என்றார். (த)

# சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு இனி விடுவதில்லை

## சபையின் சிறப்பு அமர்வில் தீர்மானம்

சாவகச்சேரி, ஜூன் 8

**சா**வகச்சேரி பொதுச் சந்தையைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக கடந்த எட்டு மாதங்களாக காணப்பட்ட பிரச்சினை, சந்தை வியாபாரிகளின் போராட்டத்தை அடுத்து முடிவுக்கு வந்துள்ளது.

சந்தையைக் குத்தகைக்கு விடுவதில்லை என்று நகர சபைத் தவிசாளர், உப தவிசாளர் உட்பட பத்துப் பேர் வாக்களித்ததால் குத்தகைப் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

**தொடக்க நிலை**

சாவகச்சேரி கிராமச் சங்கம் இருந்த காலத்தில் 1934 ஆம் ஆண்டு அந்தக் காலத்து கிராமச் சங்கத் தலைவர் வ.அருணாசலம் தலைமையிலான உறுப்பினர்கள் சந்தையில் வரி அறவிடும் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்தனர். அதற்கு முன்னர் பண்டமாற்று அடிப்படையில் பொருள்கள் விற்கப்பட்டு வந்தன. சந்தையில் வரி முறை நடைமுறைப்படுத்தப்பட்டதை எதிர்த்து ஒரு சிலர் பண்டமாற்றுச் சந்தையை மீசாலைக்கு மாற்றியிருந்தனர். வரி அறவிடும் முறையை மக்கள் ஆதரித்ததால் அவர்களின் திட்டம் செயலிழந்திருந்தது.

**முன்பிருந்தவர்களும் குத்தகைக்கு விடவில்லை**

சாவகச்சேரி கிராமச் சங்கம் பட்டண சபை மற்றும் நகரசபையாகத் தரம் உயர்வதற்குச் சந்தை வருமானம் ஒரு காரணமாகத் திகழ்ந்தது. சாவகச்சேரி கிராமச் சங்கம் பட்டண சபையாகவும் நகர சபையாகவும் தரம் உயர்த்தப்பட்ட நிலையிலும் சந்தையைக் குத்தகைக்கு விட ஆட்சியிலிருந்தவர்கள் விடவில்லை. செயலர், சிறப்பு ஆணையாளர் போன்றோரின் கட்டுப்பாட்டிலிருந்த காலத்திலும் விரும்பவில்லை. சந்தையில் வரி வசூலிப்பாளர்களாக 18 பேர் நிரந்தர கடமையிலும் 7 பேர் அமைய கடமையிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இவர்களுடன் வருமான மேற்பார்வையாளர்கள் இருவரும் சந்தை மேற்பார்வையாளரும் கடமையாற்றினர்.

**புறக்கணித்திருந்தனர்**

2011 ஆம் ஆண்டு சபை 40 லட்சம் ரூபாவுக்குத் தனியார் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. குத்தகைக்கு எடுத்தவர்களின் அடாவடித்தனங்கள் பற்றி பலதடவைகள் சிறப்பு ஆணையாளருக்கு சந்தை வியாபாரிகள் பொதுமக்கள் போன்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டும் பயன்கிடைக்காமல் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் வேறு சந்தைகளுக்குச் செல்லும் நிலையை உருவாக்கியது.

**சபை ஆரம்பித்தது**

அந்த வருடம் சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு ஆட்சிக்கு வந்த கட்சி அடுத்த வருடம் (2012) சந்தையை குத்தகைக்கு விட 50 லட்சம் ரூபா தொகை வரையறை செய்து கேள்வி கோரியது. சந்தையைக் குத்தகைக்கு எடுக்க எவரும் முன்வராததால் சபை நடத்துவது என உறுப்பினர்களால் முடிவு செய்யப்பட்டது. 2012 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையால் ஆளணிகள் உருவாக்கப்பட்டபோது சந்தையில் காணப்பட்ட 18 வரிவசூலிப்பாளர் பதவிகளும் வெறிதாக்கப்பட்டன. தொடர் நடவடிக்கைகள் சபையால் மேற்கொள்ளப்படாததால் அந்தப் பதவிகள் இன்னமும் நிரப்பப்படவில்லை. இதனால் வருமானப் பரிசோதகர் தலைமையில் சபையின் சிற்றூழியர்கள் சந்தையில் கடமையாற்றினர். சந்தையில் வருமானம் போதாது என சந்தையை 50 லட்சம் ரூபாவுக்கு குத்தகைக்கு எடுக்க எவரும் முன்வரவில்லை.

**மிக அதிக லாபம்**

அதனால் சபை ஊழியர்களின் முயற்சியால் அப்போதைய தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை மற்றும் உறுப்பினர்களின் நேரடிக் கண்காணிப்பில் 2012 ஆம் ஆண்டு சந்தையின் மொத்த வருமானமாக ஒரு கோடி 12 லட்சம் ரூபா வருமானமாகப் பெறப்பட்டது.

அதன் பின்னர் வருடாந்தம் சந்தையின் வருமானம் ஒரு கோடி ரூபாவைத் தாண்டி இயங்கியது.

இந்த நிலையில் தற்போதைய ஆட்சியாளர்கள் சபையைப் பொறுப்பேற்றதும் சந்தையைக் குத்தகைக்கு விடவேண்டும் என்றும் அங்கு பணியாற்றும் சபை ஊழியர்கள் அலுவலகத்துக்கு அழைக்கப்படல் வேண்டுமென்றும் சபை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர். அதனையடுத்து சந்தையில் வரி வசூலிக்கும் பணி வருமானப் பரிசோதகரின் மேற்பார்வையில் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த வேளையிலும் சந்தை வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படவில்லை.

**முன்னணியினர் தொடக்கினர்**

இந்த நிலையிலேயே கடந்த வருட சபை அமர்வு ஒன்றில் சந்தையைக் குத்தகைக்கு விடவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும் ஆளும் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் விடாப்பிடியாக நின்றனர்.

தவிசாளர் சந்தையைக் குத்தகைக்கு விடாமல் காலந்தாழ்த்தி வந்துள்ளார்.

கடந்த மே மாத அமர்வில் சந்தையைக் குத்தகைக்கு விட வேண்டுமென்று முன்னணி உறுப்பினர்கள் விடாப்பிடியாக நின்றனர். தவிசாளர் மற்றும் பெண் உறுப்பினர் ஒருவர் பல தடவைகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசிய முன்னணியினர் விடாப்பிடியாக நின்றனர். சாவகச்சேரி நகரில் சாராயக் கடை நடத்தி வருபவரான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் குட்டி எனப்படும் சுப்பிரமணியம் நிதிகேசன் இதில் மும்முரமாக இருந்தார்.

உபதவிசாளர் தொடக்கம் ஏனைய உறுப்பினர்கள் வாளாதிருந்ததால் சந்தையை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் குத்தகைக்கு விடுவதென்றும் குத்தகையின் ஆரம்பக் கேள்வித் தொகையாக 50 லட்சம் ரூபா எனவும் தீர்மானிக்கப்பட்டு கேள்வி அறிவித்தலும் கோரப்பட்டது.

**ஒன்றுதிரண்டு எதிர்த்தனர் சந்தை வியாபாரிகள்**

இந்த நிலையில் சந்தை வியாபாரிகள் சந்தையைக் குத்தகைக்கு விடவேண்டாமென்று கோரி கடந்த வாரம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரும் ஆதரவு வழங்கியிருந்தனர். வியாபாரிகளின் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் கலந்து கொள்ளக்கூடாது என்று சபை உறுப்பினர் ஒருவர் வர்த்தகர்களுக்கு அலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

எனினும் வியாபாரிகளின் போராட்டத்துக்கு வர்த்தக சங்கத்தினர், உற்பத்தியாளர்கள், நுகர்வோர் ஆதரவு வழங்கியிருந்தனர். கடந்த வாரம் கவனவீர்ப்பு இடம்பெற்றது. சந்தை முழு நாளும் வெறிச்சோடியது.

போராட்டத்துக்கு முதல்நாள் வியாபாரிகளை எச்சரிக்கும் வகையில் சபையின் உறுப்பினர் ஒருவரால் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் அனைத்து தரப்பினரின் கேள்விக்கும் உள்ளாகியது. இந்த நிலையில் சந்தையைக் குத்தகைக்கு எடுக்கவுள்ளவரின் பினாமியொருவர் சந்தை குத்தகைக்கு எடுத்த பின்னர் உங்களுடன் கதைக்கிறோம் என்று வியாபாரிகளை அச்சுறுத்தியுள்ளார்.

**வியாபாரிகள் உறுப்பினருக்குப் பதிலடி**

அதற்குப் பதிலாக சந்தை குத்தகைக்கு வழங்கப்பட்டால் சந்தையில் வியாபாரம் செய்வதை நிறுத்தி நாங்கள் வேறு சந்தைக்குச் செல்வோம் என்று வியாபாரிகள் பதிலடி வழங்கியிருந்தனர்.

**சிறப்பு அமர்வு**

இந்த நிலையில் சந்தையைக் குத்தகைக்கு விடுவதா என்பது பற்றிய சிறப்பு அமர்வு தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தவிசாளர் ஒவ்வொரு உறுப்பினரிடமும் தனித்தனியாக அபிப்பிராயம் கோரினார். ஒரு பகுதி குத்தகைக்கு விடவேண்டாமென்றும் மற்றொரு தரப்பினர் குத்தகைக்கு விடவேண்டுமென்றும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

சந்தையைக் குத்தகைக்கு விடுவது தொடர்பான பொதுவான முடிவு எடுக்கப்படாததால் வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்தத் தருணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆறு உறுப்பினர்களும் வாக்கெடுப்பில் கலந்து கொள்வதில்லையெனக் கூறி வெளிநடப்பு செய்தனர்.

ஆளும்கட்சியின் உறுப்பினர் ஒருவரும் மற்றொரு கட்சி உறுப்பினர் ஒருவரும் நடுநிலமை வகிக்கவுள்ளோம் என்று தெரிவித்தனர். அதனால் பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட சபையில் பத்து உறுப்பினர்கள் சந்தையை குத்தகைக்கு விடுவதில்லையென்று வாக்களித்து முடிவு செய்தனர்.

சந்தையைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக தினசரியொன்றில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. அதனால் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரிடம் ஆலோசனைகள் பெற்று கேள்வி அறிவித்தலை நிறுத்துவதென்றும் தெரிவித்து தவிசாளர் சபை நடவடிக்கைகளை நிறைவுக்கு கொண்டு வந்தார். (கு)

# சந்தைக் குத்தகைப் படிவம் தராததால் மன உழைச்சல் ஏற்பட்டுவிட்டதாம்

## உள்ளூராட்சி ஆணையாளருக்கு முறைப்பாடு

சாவகச்சேரி பொதுச் சந்தையைக் குத்தகை எடுக்கும் படிவத்தைச் சபையினர் தராததால் மன உழைச்சலுக்கும் பொருளாதார நட்டத்துக்கும் ஆளாகியுள்ளேன் என்றுகூறி ஒருவர் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்து தனக்கு நியாயம் கிடைக்கச் செய்யுமாறு கேட்டுள்ளார். இந்த விசித்திர சம்பவம் நேற்று நடைபெற்றது.

சாவகச்சேரி நகரசபையின் பொதுச் சந்தையைக் குத்தகைக்கு விடுவதில்லையென்று நேற்றைய சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் குறித்த நபர் அங்கு சென்று குத்தகைப் படிவம் கேட்டுள்ளார்.

சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு விடுவது என்று முன்னைய சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சபை நிர்வாகம் கடந்த 28 ஆம் திகதி கேள்வி அறிவித்தல் தினசரியொன்றில் விளம்பரம் பிரசுரித்திருந்தது.

கடந்த 29 ஆம் திகதி சந்தை வியாபாரிகள் வர்த்தகர்கள் சந்தையைக் குத்தகைக்கு விடவேண்டாமென்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வியாபாரிகளின் கோரிக்கையை முன்வைத்து சந்தையைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக நேற்றுமுன்தினம் சபையின் சிறப்பு அமர்வு நடைபெற்று வாக்கெடுப்பில் சந்தையைக் குத்தகைக்கு விடுவதில்லையென முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபை கலைந்த பின்னர் மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த ஒருவர் அவசரமாக வந்து சந்தை குத்தகைக்கு பெறுவது தொடர்பான படிவம் வழங்குமாறு கடிதம் சமர்ப்பித்துள்ளார். சபையின் செயலர் தவிசாளரின் அறிக்கைக்கு சமர்ப்பித்துள்ளார். சந்தையைக் குத்தகைக்கு விடுவதில்லையெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் சந்தை குத்தகைக்கு விடுவதற்கு படிவம் வழங்க வேண்டாமென்று தவிசாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் தனக்கு சந்தை குத்தகைக்குப் பெறுவதற்கான படிவம் வழங்கவில்லையென்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு குறித்த நபர் முறையிட்டுள்ளார். படிவத்திற்கான பணம் செலுத்தாத நிலையில் தனக்கு பொருளாதார நட்டம் ஏற்பட்டுள்ளதெனக் குறிப்பிட்டுள்ளமை குறித்து அதிகாரிகள் ஆச்சரியம் தெரிவித்தனர். (கு)

## சிறு பிரச்சினைக்குக்கூட முன்னணியினர் ஆணையாளரிடம் ஓட்டமெடுக்கின்றனர்

சாவகச்சேரி ஜூன் 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 உள்ளூராட்சி சபைகள் உள்ள போதிலும் சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர்கள் ஆறு பேர் சிறு பிரச்சினையென்றாலும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்கின்றனர் என்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் சாவகச்சேரி நகரசபையிலேயே அதிகளவு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று கருதமுடிகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

சபையின் பிரச்சினைகள் எதுவாயினும் தமிழ்த் தேசிய முன்னணியின் ஆறு உறுப்பினர்களும் உடனடியாக ஆணையாளரின் அலுவலகத்துக்கு வருவது குறித்தும் அங்குள்ளவர்கள் கவலை தெரிவித்தனர். சபை உறுப்பினர்கள் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டிய பிரச்சினைகளைக்கூட கடிதத்தில் எழுதி அந்த ஆறு உறுப்பினர்களும் ஆணையாளரின் அலுவலகத்துக்கு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (கு)

# ஆடைக் கட்டுப்பாட்டை உடனே இரத்துச் செய்க

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

பெண் அரச அலுவலர்கள் சேலை மற்றும் ஒசரி மாத்திரம் அணிந்து அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டும் என வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொது நிர்வாக மற்றும் இடர்முகாமைத்துவ அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொது நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலருக்கு இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக்குழு சில பரிந்துரைகளையும் சமர்ப்பித்துள்ளது.

பெண்கள் வெவ்வேறான ஆடைகளை அணிவதுடன். சிலர் தமது கலாசார ஆடைகள்ளயும் அணிகின்றனர். இவ்வாறானவர்களுக்கு சேலை மற்றும் ஒசரி மாத்திரம் அணிந்து செல்ல வேண்டும் என்று அறிவிப்பது மனித உரிமை மீறல் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது. அவ்வாறான செயற்பாடுகள் அரசமைப்புக்கு முரணானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச பெண் அலுவலர்கள் சேலை மற்றும் ஒசரி மாத்திரம் அணிந்து அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டும் என பொது நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு அண்மையில் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதேபோன்று அரச நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் ஊழியர்கள் காற்சட்டை மற்றும் மேற்சட்டை அல்லது தேசிய ஆடையை அணிந்து வர வேண்டும் என்றும் அந்தச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, அந்தச் சுற்றறிக்கையில் திருத்தங்களை மேற்கொண்டு அதனை மீண்டும் வெளியிடுவதற்கு தீர்மானித்துள்ளது என்று பொது நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மீள அறிவித்திருந்தது. (எ)

# மாணவர்களை ஏற்றி சென்ற பேருந்து விபத்தில் சிக்கியது

## *31 பேர் மருத்துவனையில்*

கொழும்பு, ஜூன் 8

தல்கொடபிட்டி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து விபத்துக்குள்ளானதில் 31 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்தும் ஆடை தொழிற்சாலை ஊழியர்களை ஏறிச் சென்ற பேருந்தும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் காயமடைந்தவர்களில் 26 பேர் பாடசாலை மாணவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மூன்று ஆடை ஊழியர்கள் மற்றும் பேருந்தின் சாரதி குருணாகல் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து சாரதியின் கவனயீனத்தால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கொகருல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

# மங்களவுக்கு எதிராக தொடரும் தாக்குதல்

## போலிக் கடிதத்தை வைத்து விளாசினார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஜூன் 8

பிக்குகளின் செயற்பாடுகளுக்கு எதிராக அமைச்சர் மங்கள சமரவீர தொடர்ச்சியாக கருத்துக்களை வெளியிட்டு வ்ரும் நிலையில், அவருக்கு எதிராக சேறு பூசும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அமைச்சர் மங்கள சமரவீரவின் பெயரில் வெளியான போலியான கடிதத்தை சபையில் முன்வைத்து மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று விளாசித்தள்ளினார்.

நாடாளுமன்றில் நேற்றுக் கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ச, கர்தினால் மல்கம் ரஞ்சித், கடந்த 3 ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட ரத்ன தேரரைப் பார்க்கச்சென்றமையை சுட்டிக்காட்டி நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஜூன் 3ஆம் திகதி வத்திக்கானுக்கு கடிதத்தை அனுப்பியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின்னர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் செயற்பாடுகள் அனைவராலும் வரவேற்கப்பட்டிருந்தன. அனைத்து இன மக்களாலும் அவர் போற்றப்பட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் நிதி அமைச்சர் அனுப்பியுள்ள கடிதத்தில், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் பின்னணியில் அமெரிக்கா இருப்பதாக கார்தினால் தெரிவித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார். எனக்கு தெரிந்த வரையில் அவர் எந்த நாட்டினதும் பெயரை குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை. இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக கார்தினல் அவர்கள் ஏற்றுக்கொண்டதும் தவறாகவே அமைச்சர் அந்தக் கடிதத்தில் காட்டியுள்ளார். அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் மதத்தலைவர்கள் தொடர்பில் வேறு நாடுகளுக்கு முறைப்பாடு செய்வதாக இருந்தால் நாட்டை எங்குகொண்டு செல்லப்போகின்றீர்கள். இதற்கு முன்னரும் அமைச்சரின் கீச்சகத் தகவலில், கர்தினால் இனவாதத்தை தூண்டுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. மதத்தலைவர்கள் தொடர்பில் பொய்க் குற்றச்சாட்டுக்களை தெரிவிப்பதை நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

இதேவேளை நிதியமைச்சர் அமைச்சர் மங்கள சமரவீர, தனது பெயரால் வெளியிடப்பட்டிருக்கும் இது போலிக் கடிதம் என்றும் தான் இவ்வாறன கருத்துக்களை தெரிவித்து எவ்வித கடிதங்களையும் வத்திக்கானுக்கு அனுப்பவில்லை என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடும் பதிவு செய்துள்ளார். (ஒ.5)

# இலங்கையை பாதுகாப்போம் அறிக்கை சபாநாயகரிடம்

கொழும்பு, ஜூன் 8

இலங்கை பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய கொள்கை உள்ளிட்ட அறிக்கையொன்று ‘இலங்கையைப் பாதுகாப்போம்’ அமைப்பால் நேற்று சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

18 விடயங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள இந்தஅறிக்கைஅதன்தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய தீவிரவாதம் மற்றும்பயங்கரவாதத்தை இலங்கையில் இருந்து முற்றாக ஒழிக்கும் நோக்குடன் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று அந்த இயக்கம் தெரிவித்துள்ளது. (எ)

# மின்சாரத் தாக்கத்தால் ஏற்படும் இறப்பு 50 சதவீதத்தால் குறைவு

கொழும்பு, ஜூன் 8

இலங்கையில் கடந்த 6 ஆண்டுகளில் மின்சாரம் தாக்கி ஏற்படும் இறப்புக்களின் எண்ணிக்கை 50 சதவீதம் குறைந்துள்ளது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் 186 பேர் மின்சாரம் தாக்கி இறந்துள்ளனர். கடந்த ஆண்டு மின்சாரம் இறந்தவர்களின் எண்ணிக்கை 89 ஆக குறைந்துள்ளது. மின்சாரத் தொழிற்துறையின் ஒழுங்குறுத்தல் நிறுவனமான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மூலம் மின்சார தொழிற்துறை பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்ட விரிவான ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளே மின்சாரத்தால் ஏற்படும் இறப்புக்கள் குறைவடைய காரணமாக அமைந்துள்ளது.

எனினும், பன்னாட்டுத் தரப்படுத்தலுக்கமைய, மின்சாரத்தால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கையை ஒரு மில்லியனாக குறைக்கப்படலாம் என கணிப்பிடப்படுகிறது. 2012 ஆம் ஆண்டில், ஒரு மில்லியன் மக்கள் தொகையில் 9 மின் தாக்கத்தால் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. 2018 ஆம் ஆண்டில் அவை 5 ஆக குறைக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டின் தரவரிசைப்படி, மின் தாக்கத்தால் இறப்புகளில் பெரும்பாலானோர் ஆண்களாவர். இது 83 சதவீதமாகும். அதிக மின் உயிரிழப்புக்கள் பதிவான மாகாணமாக தென் மாகாணம் விளங்குகிறது. 67 சதவீதம் தென்மாகாணத்தில் பதிவாகியுள்ளது. மின் உயிரிழப்புக்கள் குறைந்தளவு சப்ரகமுவ மாகாணம் பதிவாகியுள்ளது.

மின் உயிரிழப்புக்கள் அதிகளவு ஏற்படுவதற்கு விலங்கு வேட்டைக்காக வைக்கப்படும் பொறி காரணாமாக அமைந்துள்ளதுடன் விவசாய தேவைக்காக பயன்படுத்தப்படும் சட்டவிரோத அங்கீகரிக்கப்படாத மின்சார கம்பிகளின் பாவனையும் காரணமாக இருந்துள்ளது. இது தவிர, முறையற்ற மின்கட்டமைப்புகள் மற்றும் மின் வடங்களுக்கு அண்மையில் தேவையற்ற, கவனயீனமான செயல்பாடுகளும் உயிரிழப்புக்களுக்குக் காரணங்களாக இருந்துள்ளன.

கடந்த சில வருடங்களில், மின்சக்தி பாதுகாப்புக்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு புதிய சட்டங்கள், ஒழுங்குறுத்தல் கருவிகள் மற்றும் கொள்கை பரிந்துரைகள் என்பனவற்றை அறிமுகப்படுத்தியுள்ளன. ப்ளக்குகளுக்கான தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல், பிரதான மின்கட்டமைப்பு, மின் கட்டுமானத்துக்கான பாதுகாப்பு முறைமைகளை அறிமுகப்படுத்துதல், அவற்றுக்காக ஒழுங்குறுத்தல்களை அறிமுகம் செய்துவைத்தல், மின்சார பணியாளர்களுக்கு உரிமம் வழங்குதல் அதற்க்கான நடவடிக்கை எடுத்தல் என்பன இவற்றுள் முக்கியமானவையாகவும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-31)

# ஞானசாரர் வெளிநாடு பயணிக்க அனுமதி

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு வெளிநாடு செல்வதற்கு கொழும்பு மேலதிக நீதிவான்நீதிமன்றம்நேற்று அனுமதி அளித்தது.

2017ஆம் ஆண்டு வெலிகடை ராஜகிரிய பிரதேசத்தில் போதைப்பொருள் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரியொருரின் கடமைக்கு இடையூறு விளைவித்த சம்பவம் தொடர்பில் இவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதையடுத்து அவர் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது. (எ)

# பணம் கொடுத்தவரை கொலை செய்தார் என ஒருவர் மறியலில்

கொழும்பு, ஜூன் 8

பெண்ணொருவரைத் தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பண்டாரவளை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று நீதிவான் முன்னிலையில் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கொலைச்சந்தேகநபர்நீதிமன்றத்தில்பொலிஸாரால் முற்படுத்தப்பட்டநிலையில்நீதிவான்எதிர்வரும்17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பண்டாரவளை வடக்கு கெபில்லவெலையைச் சேர்ந்த 32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான ராலினி மல்லிகா என்பவரே கொலை செய்யப்பட்டார். இந்தப் பெண்ணிடமிருந்து 30 ஆயிரம் ரூபாவைக் கடனாகப் பெற்றவர் அந்தப் பணத்தை மீள வழங்காது தட்டிக் கழித்து வந்ததையடுத்து பெண்ணுக்கும் அந்த நபருக்குமிடையே வாய்த்தர்க்கம் முற்றவேஅந்தநபர்இப்பெண்ணைத் தாக்கியுள்ளார். தாக்கப்பட்ட பெண் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தாக்கப்பட்டதாலேயே இறப்புச் சம்பவித்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டதால் பெண்ணைத் தாக்கிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது நீதிவான் அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ)

# பிணை முறி மோசடி வழக்கு: தயாரானது 'குற்றப்பத்திரிகை

கொழும்பு, ஜூன் 8

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்ட 10 பேருக்கான குற்றப்பத்திரிகை தயார் நிலை பணிகள் நிறைவடைந்துள்ளன என்று சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கை விசாரணை செய்வதற்காக நிலையான மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமொன்றை நியமிக்க வேண்டும் என்று சட்டமா அதிபர் , பிரதம நீதியரசரிடம் கோரியுள்ளார் என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்தக் கோரிக்கை தற்போதைய நிலையில் எழுத்து மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி தெரிவித்துள்ளார். (எ)

# முஸ்லிம் மக்களை காக்கவே பதவியிலிருந்து விலகினோம்

## பைசல் காசிம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டில் ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பற்ற நிலைமையில் இருந்து முஸ்லிம்களை பாதுகாப்பதற்கு நாம் எமது அமைச்சுப் பதவிகளில் இருந்து ஒட்டுமொத்தமாக விலகுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. நாம் எடுத்த இந்த வரலாற்று ரீதியான தீர்மானம் நாட்டில் உள்ள ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்டதே தவிர அரசியல்வாதிகளாக எங்களை பாதுகாப்பதற்காக அல்ல.



இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து இந்த நாட்டு முஸ்லிம்கள் அனைவரும் பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்நோக்கி வருகின்றனர். குருநாகல் மற்றும் மினுவாங்கொட போன்ற இடங்களில் உள்ள முஸ்லிம்கள் இனவாதத் தாக்குதல்களால் உயிர்களையும்சொத்துக்களையும்இழந்தனர். அத்தோடு பிரச்சினை முடிவுக்கு வரவில்லை. அசாத் சாலி, ஹிஸ்புல்லா மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோரை பதவி நீக்கக் கோரி அத்துரலிய ரத்ன தேரர் கண்டியில் மேற்கொண்ட உண்ணாவிரதம் மிகமோசமான நிலைமையை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தவிருந்தது.

அதனால் நாங்கள் ஒன்றுகூடிப் பேசினோம். முதலில் மூவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு ஏனையவர்கள்மீதும் சுமத்தப்படலாம் என்பதை உணர்ந்த நாங்கள் அதற்கு முன்பே பதவி விலகி எங்கள் அனைவர் தொடர்பிலும் விசாரணை நடத்துவதற்கு வழிவிடுவதெனத் தீர்மானித்தோம்.

நாம் பதவி விலகியிருக்காவிட்டால் ஒருவர் மீது ஒருவராகக் குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்த வண்ணமே இருந்திருக்கும். அது முஸ்லிம்களுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கும்.

நாங்கள் பயங்கரவாதத்துக்கு ஆதரவு வழங்குபவர்கள் என்றால் இப்படி சுய விசாரணைக்கு இணங்கி இருக்க மாட்டோம். உடனடியாக எம் மீது அரசு விசாரணையை மேற்கொண்டு அறிக்கையை வெளியிட வேண்டும். அதன் ஊடாக முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் -என்றார். (எ)

# ஹிஸ்புல்லாவை பேரினவாதம் நடு ரோட்டில் தூக்கிவீசியுள்ளது

### இனியாவது அவர் உணர்ந்து நடக்கவேண்டும் என்று கூட்டமைப்பின் சிவமோகன் எம்.பி. கூறுகிறார்

மன்னார், ஜூன் 8

இனவாதிகளின் வலையில் வீழ்ந்த ஹிஸ்புல்லாவை பேரினவாதம் நடுரோட்டில் தூக்கி வீசியுள்ளது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் தமிழர்களுக்கு எதிரான கடும்போக்கு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்த ஹிஸ்புல்லா, எமது ஈழ விடுதலைப் போராட்டத்தை இல்லாமல் செய்வதில் அரசுடன் இணைந்து பணியாற்றியவர். பல நூறு ஏக்கர் தமிழர் நிலங்களை அபகரிப்புச் செய்துள்ளார் என்று மக்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள். சைவமக்களின் வழிபாட்டுத் தலமான காளி கோவிலை இடித்து குடியேற்றம் செய்த ஹிஸ்புல்லாவுக்கு காலம் சரியான தண்டனை வழங்கியுள்ளது.

முஸ்லிம் தீவிரவாத இளைஞர்களைக் கடந்த காலத்தில் ஆயுதங்களுடன் இறக்கி தமிழ் மக்களைக் கொலை செய்வதற்குக் காரணமாக இருந்தவர் ஹிஸ்புல்லா.

இவர் தொடர்ச்சியாக சிங்கள இனவாதிகளுக்குக் குடைபிடித்து தமிழர்களை அழித்தொழிக்கும் வேலையிலும் வடகிழக்கு இணைப்பின் மூலம் தமிழ்-முஸ்லிம் இனத்தவர்களின் ஒற்றுமையான இணைந்த வடக்கு -கிழக்கு தாயகத்தை உருக்குலைப்பதற்காக பேரினவாதத்தினால் இறக்கிவிடப்பட்ட ஹிஸ்புல்லா இன்று அந்த பேரினவாதிகளாளலேயே நடு வீதியில் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

இனியாவது உண்மையான இஸ்லாமிய உறவுகள் ஹிஸ்புல்லா போன்றவர்களின் இனவாத வலைகளுக்குள் வீழ்ந்துவிடாமல் உங்களை நீங்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். வடகிழக்கு இணைந்த தமிழ் பேசும் மாநிலத்தில் ஒற்றுமையாக வாழ முஸ்லிம்கள் ஆயத்தமாக வேண்டும். ஹிஸ்புல்லா போன்ற இனவாதிகள் பேரினவாதத்திடம் முஸ்லிம் மக்களை அடகு வைத்துத்தான் அரசியல் பிழைப்பு நடத்துகிறார்கள். கடந்த காலத்திலும் சரி இன்றைய காலகட்டத்திலும் சரி முஸ்லிம் மற்றும் தமிழர்களின் ஒற்றுமையை சீர் குலைப்பதற்காக பேரினவாதம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தது. அதில் ஒரு பகுதி செயற்பாடாக முஸ்லிம் இளைஞர்களை இராணுவப் புலனாய்வாளர்களாக இணைத்து விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து வந்தது. இன்றும் இந்தக் குண்டு வெடிப்பில் தற்கொலைதாரிகளாக மாறியவர்கள் எல்லாம் கடந்த காலத்தில் தமிழீம விடுதலைப்புலிகளுக்கு எதிராக புலனாய்வுத்துறையால் உள்ளீர்க்கப்பட்டவர்கள் என்று பல தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த அரசு அந்த உண்மையை மூடி மறைத்துள்ளது. அவர்களுக்கு எதிராக விசாரணை செய்யத் தயாராக இல்லை - என்றார்.

(த-213)

# முதலீட்டாளர்களை அதிகரிப்பது அபிவிருத்திச் சபையின் நோக்கம்

## பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

2 ஆயிரம் புதிய முதலீட்டாளர்களை அடுத்த வருடம் முதலீட்டுத் துறையில் இணைத்துக் கொள்வது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் நோக்கமாகும் என பிரதேச அபிவிருத்திப் பணிப்பாளர் அனோமா கரன்லியத்த தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

முதலீட்டாளர்களை அறிந்து கொள்வதற்கான கருத்தரங்குகள் பிரதேச மட்டங்களில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2017ஆம்ஆண்டில் இருந்து இதுவரையில் 7 இடங்களில் இவ்வாறான கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2020ஆம்ஆண்டளவில்பொருள் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் வருமானத்தை 22 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரிப்பது இதன் நோக்கமாகும்- என்றார். (எ)

# முஸ்லிம்கள் பதவி விலகல் எதிர்காலத்தில் சிக்கலாகும்

## ஆனந்த சங்கரி எச்சரிக்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 8

அரசை இடித்துரைக்கும் நோக்கில் ஒட்டுமொத்தமாகப் பதவி விலகிய முஸ்லிம் தலைமைகளின் செயற்பாடு சரி தவறுகளுக்கு அப்பால் பாராட்டத்தக்கது. ஆனால் இதன் விளைவு எதிர்காலத்தில் மிகப் பாரதூரமாக அமையும். இனியாவது சிந்தித்துச்செயற்படவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறுபான்மை இனங்கள்மீது ஆதிக்கம் செலுத்தும் ஒருசில மத தீவிரவாத கும்பலுக்கு இது ஒருபாடமாக அமைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முஸ்லிம் தலைமைகளின் துணிச்சலைக் கண்டு வெட்கித் தலை குனிய வேண்டும்.

1983ஆம் ஆண்டு இந்தநாட்டில் அன்றையஅரச தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனநாயகத்துக்கு விரோதமாக மேலும் ஆறு ஆண்டுகள் நாடாளுமன்றத்தை நீடித்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேரும் அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாட்டைக் கண்டித்து நான் உட்படப் பலர் பதவிகளைத் துறந்தோம்.

அதில் சம்பந்தனும் அடங்குவார். அந்த சம்பந்தனா இன்று இப்படி பதவிமோகத்திற்குஅடிமையாகிவிட்டார் என்றுஎண்ணும் போதுவேதன்னையாக இருக்கின்றது.

தற்போது நாட்டின் நிலமை மிகமோசமடைந்துவிட்டது. அரசதலைவரும் தலைமை அமைச்சரும் முட்டிமோதிக் கொண்டு ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அளவுக்கு அதிக சலுகைகளையும், தேவைக்கு அதிகமான பணத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் கொடுத்ததன் விளைவே இன்று நாடு இந்த நிலமைக்குப் போய்விட்டது.

இவ்வாறான கொடுப்பனவுகளும் சலுகைகளும் கிட்டத்தட்ட இலஞ்சத்துக்கு ஒப்பானதாகும்.

ஆட்சியாளர்கள் மக்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இருப்புகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மேடைகளில் பேசும்போது இனவாதம், மதவாதம் பேசும் அரசியல் தலைமைகள் தங்கள் மதம் ,இனம் சார்ந்த மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டதன் விளைவையே மக்கள் இன்று அனுபவிக்கின்றார்கள். தமிழ்த் தலைமைகள் என்ன செய்யப் போகின்றார்கள்?- என்றுள்ளது.

(த)

# சுதந்திர அரசதொழிற்சங்கம் மைத்திரியை சந்தித்து பேச்சு

கொழும்பு, ஜூன் 8

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இலங்கை சுதந்திர அரச தொழிற்சங்க சம்மேளன பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை நண்பகல் அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தொடருந்து, கல்வி, சுகாதாரம் மற்றும் தொழிற்துறை உள்ளிட்ட அரச துறைகளில் நிலவும் பிரச்சினைகள் அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தற்போது அரச சேவையில் உள்ள 2016 ஜனவரி மாதம் 01ஆம் திகதிக்குப் பின்னர் நியமனம் பெற்றவர்களுக்கு ஓய்வூதிய உரிமை கிடைக்கப்பெறாமை தொடர்பான பிரச்சினை, 180 நாள்களுக்கு மேலாக அரச சேவையில் ஈடுபட்டுள்ள அமைய, ஒப்பந்த, தற்காலிக பணியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு பொது வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பது தொடர்பிலும் அரச அலுவலர்களுக்கான இரண்டாம் மொழி பரீட்சைகள் தொடர்பில் பொதுவான நியதிகளை கடைப்பிடிப்பது முதற்கொண்ட கோரிக்கைகள் அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தன்னாலான அதிகபட்ச தலையீட்டை மேற்கொள்வதாக அரச தலைவர் தெரிவித்தார். ஒவ்வொரு தொழிற்சங்கங்களும் தாம் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் பற்றிய தமது கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எழுத்து மூலமாக விரைவில் தன்னிடம் தருமாறு பணிப்புரை விடுத்த அரச தலைவர் அந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அந்தந்த அமைச்சுக்களின் ஊடாக உரிய நடவடிக்கைகளை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்க செயலர் லசந்த அழகியவண்ண, உப செயலர் வீரகுமார திசாநாயக்க ஆகியோரும் சிறிலங்கா சுதந்திர அரச தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதான செயலர் றோய் டி மெல் உள்ளிட்ட சுமார் 40 தொழிற்சங்க பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ)

# ஈ.பி.டி.பியிலிருந்த டெனீசன் காங்கிரசுக்குப் பாய்ந்தார்

வவுனியா, ஜூன் 8



வவுனியா ஈ.பி.டி.பி கட்சியின் கொள்கை பரப்புச் செயலராக இருந்த வைத்திலிங்கம் டானியல் டெனீசன் அந்தக் கட்சியிலிருந்து விலகி ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியில் நேற்றுமுன்தினம் இணைந்து கொண்டார். அவர் அந்தக் கட்சியின் வவுனியா செட்டிகுளம் பிரதேசப் பொறுப்பாளராகக் கட்சியின் தலைவர் பிரபா கணேசனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

டெனீசன் தெரிவித்ததாவது: "நான் ஏற்கனவே வவுனியா மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் மக்களின் நலனுக்காகவும் மக்களின் வளர்ச்சிக்காகவும் செயற்பட்டு வந்தேன். சமீபத்தில் அந்தக் கட்சியிலிருந்து விலகிக் கொண்டேன்.

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சி வன்னி மண்ணில் கல்விக்காக, மக்களின் நலனுக்காக வாழ்வாதாரங்களுக்காக, தமிழர்களின் உரிமைக்காக ஆற்றும் ஆற்றலை கண்டு ஜனநாயக மக்கள் காங்கிரஸில் சேர்ந்து மக்கள் பணியாற்ற வேண்டும் என்ற உந்துதல் எனக்குள் இருந்தது. அதை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் இன்று இந்தக் கட்சியில் இணைந்து கொண்டேன்" - என்றார்.

அவர் கட்சியில் இணையும் நிகழ்வில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பிரபா கணேசன், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் பிரசாத், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் வன்னிக்கிளையின் தலைவர் அரோக்கியசாமி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

(த)

# இனரீதியாக பிரிந்து செயற்படுவது ஆரோக்கியமானதாக அமையாது

## தலைமை அமைச்சர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 8

முஸ்லிம் பிரதிநிதிகள் தொடர்பில் பௌத்தபீடங்களின் தேரர்கள் விடுத்துள்ள கோரிக்கையுடன் நாங்கள் இணைந்து கொள்கின்றோம். அவ்வாறு கோரிக்கை விடுத்தமைக்காக நன்றி தெரிவிக்கின்றோம். அத்துடன் மல்வத்து பீடத்தின் தேரர் நியங்கொட விஜித சிறியை சந்தித்து இது தொடர்பில் பேச்சு நடத்த எதிர்பார்க்கின்றேன். இன ரீதியில் பிரிந்து செயற்படுவது ஆரோக்கியமான செயற்பாடாக அமையாது.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஆளும் கட்சி பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன ரீதியில் நாங்கள் பிரிந்து செயற்படக்கூடாது. சுதந்திரத்தின் பின்னர் முஸ்லிம் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர். புலிகளின்போர்க் காலத்திலும் முஸ்லிம் அமைச்சர்கள் அங்கம் வகித்தனர்.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட பட்டினிப் போராட்டம் மற்றும் அதன் பின்னர் முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியமை என்பன ஆரோக்கியமான நிலமைகள் அல்ல. இது தொடர்பில் நான்குபௌத்தபீடங்களும் முன்வைத்த கோரிக்கையுடன் நான் முழுமையாக இணைந்து கொள்கின்றேன். இன ரீதியில் பிரிந்து செயற்படுவது ஆரோக்கியமான செயற்பாடாக அமையாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டின் அனைத்து இன மக்களும் இணைந்து செயற்பட்டனர். அவ்வாறான ஓர் ஒற்றுமை இதற்கு முன்னர் இருந்ததில்லை. அந்த ஒற்றுமையை வைத்து எதிர்கால பயணத்தை முன்னெடுக்க நாங்கள் திட்டங்களைத் தயாரித்தோம். எனினும் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட பட்டினிப் போராட்டம் அதனால் மேலெழும்பிய இனவாதம், முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியமை என்பன காரணமாக முஸ்லிம் மக்கள் தூர விலகிச் சென்றுள்ளனர். இது நாட்டுக்கு ஒரு சிறந்த நிலமை அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த வாரம் ஓர் இனவாதச் செயற்பாடு இடம்பெற்றது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பயங்கரவாத தாக்குதலின் பின்னர் சந்தேக நபர்களைக் கண்டு பிடிக்க விரைவாக நடவடிக்கை எடுத்திருந்தோம். சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட்டது. ஒரு சிலர் அதனை முறியடித்துச் செயற்பட்டனர். குளியாப்பிட்டி பிரதேசத்தில் ஓர் இனவாத செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

அதேபோன்று கடந்த வாரமும் ஓர் இனவாதச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. பிரதேச மட்டத்திலேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. காரணம் நாட்டில் அமைதி நிலவுவதையும் ஐ.எஸ். பயங்கர வாதம் கட்டுப்படுத்தப்படுவதையும் இனவாதிகள் விரும்பவில்லை.

பௌத்தபீடங்களின் தேரர்கள் விடுத்த கோரிக்கையுடன் நாங்கள் இணைந்து கொள்கின்றோம். அவ்வாறு இணைந்தமைக்காக நன்றி தெரிவிக்கின்றோம். இன ரீதியில் நாங்கள் பிரிந்து செயற்படக் கூடாது. சுதந்திரத்தின் பின்னர் முஸ்லிம் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர். போர்க் காலத்திலும் முஸ்லிம் அமைச்சர்கள் அங்கம் வகித்தனர். இது தொடர்பில் ஒரு பரந்துபட்ட கலந்துரையாடலை எதிர்பார்க்கின்றோம். மல்வத்து பீடத்தின் தேரர் நியாங்கொட விஜிதசிறியைச் சந்தித்து பேச்சு நடத்த எதிர்பார்க்கின்றேன். யாராவது இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுத்தால் அதற்கு நாம் முகம்கொடுக்கத் தயாராக வேண்டும் - என்றார். (எ)

# தமிழ்த் தேசிய அரசியலில் ஒற்றுமை இருக்கவில்லையே?

## முன்னாள் எம்.பி. அரியநேந்திரன் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஜூன் 8

எடுத்ததற்கெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது விரல் நீட்டும் உள்ளங்கள் தமிழ்த் தேசிய அரசியல் எப்போதாவது ஒற்றுமையாக பயணித்ததா என்பதை ஆராயவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

சமகாலத்தில் முஸ்லிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஒற்றுமையாகப் பதவி விலகினார்கள். இதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் கட்சிகளும் எதிர்வரும் காலத்தில் ஒற்றுமையுடன் செயற்படுமா என்று அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசில் அங்கம் வகித்த சகல முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எல்லோரும் கூண்டோடு பதவி விலகியது தொடர்பாக பலரும் முஸ்லிம் அரசியல் தலைவர்களின் ஒற்றுமையைப் பாராட்டியுள்ளனர்.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் நாடாளுமன்றப் பதவியை விட்டு விலகவில்லை, அமைச்சர் பதவிகளிலிருந்து மட்டுமே விலகியுள்ளனர்.

தமிழ்த் தேசிய அரசியலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய சகல முஸ்லிம் அரசியல் தலைவர்களும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மூலம் வெற்றிபெற்ற முஸ்லிம் அரசியல் வாதிகள் அத்தனை பேரும் இலங்கை அரசின் பக்கமும் அதன் பின் பேரினவாத கட்சிகளிலுமே ஒற்றுமையாக அமைச்சர் பதவிகளைப் பெற்று சலுகை அரசியலுக்காக சோரம் போன வரலாறுகளும் உண்டு.

2009ஆம் ஆண்டு தொடக்கம் இரா.சம்மந்தன் தலைமையில் இடம்பெறும் இராஜதந்திர அரசியல் எல்லாமே தமிழ்க் கட்சிகள், தமிழ் விடுதலை இயக்கங்கள் ஒற்றுமையாகச் செயற்பட்ட வரலாறு இல்லை. நோக்கம் ஒன்றாக இருந்தாலும் செயற்பாடுகள் வித்தியாசமாகவே முன்னெடுக்கப்பட்டதை நாம் பார்க்க வேண்டும். தற்போதுகூட விடுதலைப் புலிகளின் மௌனத்துக்குப் பின் புலம்பெயர் உறவுகள் புலம்பெயர் நாடுகளில் இருபதுக்கும் மேற்பட்ட அமைப்புக்கள் ஈழவிடுதலை அரசியல் செயல்பாடுகளை முன்னெடுக்கின்றனர். அவர்களும் ஒரு குடையில் ஒற்றுமையாக இயங்க முடியவில்லை. ஆனால் நோக்கம் அவர்களிடம் ஒன்றாக இருந்தாலும் செயற்பாடுகள் ஒன்றாக இல்லை. அதனால் அவர்களும் ஒற்றுமையாகச் செயற்பட முடியவில்லை.

தமிழர்களிடம் ஒற்றுமை என்பது அரசியல் ரீதியாக ஈழத்திலும் இலங்கையிலும் இருந்ததில்லை. ஏன் புலம்பெயர் தேசங்களிலும் ஈழத்தமிழர்கள் மத்தியில், ஈழவிடுதலை அகிம்சை போராட்ட காலமானாலும் சரி ஆயுத விடுதலை போராட்ட காலமானாலும் சரி தற்போதய இராஜதந்திர செயல்பாட்டிலும்சரி இருந்ததில்லை.

தற்போதைய இஸ்லாமிய அமைச்சர்கள் இலங்கையில் எடுத்த அரசியல் முடிவை வைத்து, அவர்களை பார்த்து தமிழர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கருத்துக்களைக் கூறுபவர்கள் கடந்த கால வரலாறுகளை மீட்டுப் பார்ப்பது அவசியம்.

பல அமைப்புக்கள் இயங்கினாலும் நோக்கம் ஒன்றாக இருக்கிறது செயல்பாடுகள் வித்தியாசமாக அமைகிறது. செயல்பாடுகள் வித்தியாசமாக உள்ளவரை தமிழர் ஒற்றுமையாக செயல்படுவது மிகக் கடினம்.

ஈழத்திலும் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒற்றுமைப் படுத்தி ஒருகுடையின் கீழ் யாராவது கொண்டுவர முடியுமா? எமது அரசியல் நோக்கம் அமைச்சு பதவி, சலுகை, மட்டும் என்றால் இஸ்லாமிய அரசியல் தலைவர்களை போல் நாமும் ஒற்றுமையாக முடிவெடுக்கலாம் அல்லவா?

தமிழர்கள் ஒற்றுமை பற்றி கருத்துக்களைக் கூறும்போது ஒவ்வொருவரும் தமது நெஞ்சில் கைவைத்து ஒற்றுமையாகக் குடும்பத்தில், ஊரில், பிரதேசத்தில், மாவட்டத்தில், மாகாணத்தில், தாயகத்தில் தேசியத்தில் இருக்கின்றோமா என்பதை சிந்தித்து மற்றவர்களுக்கு விரல் நீட்டுங்கள். அரசியலுக்கு அப்பால் உறவுகளில் ஒற்றுமை உள்ளதா? உணர்வுகளில் ஒற்றுமை உள்ளதா? கொள்கைகளில் ஒற்றுமை உள்ளதா? சிந்தியுங்கள் - என்றார். (த-46)

# நாடு முன்னோக்கி செல்வதற்கு தீயவற்றை அழிக்க வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 8

நாட்டை முன்நோக்கி கொண்டு செல்ல வேண்டுமென்றால் தீய செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியம்என்றுஅமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டைக் கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே ஆட்சி மாற்றத்தை மக்கள் ஏற்படுத்தினார்கள். ஆனால் மீண்டும் அவர்களது ஆதிக்கம் மேலோங்கி வருகின்றது.

இதேவேளை ஒரு பிரச்சினைக்கு நீதிமன்றத்தின் ஊடாக தீர்வை பெற முயற்சித்தால் பல வருடங்கள் செல்கின்றது. இதனை நீங்களே அறிவீர்கள். நாட்டு மக்களிடம் பிரச்சினைகளை ஏற்படுத்தும் விதமாக தகவலை பரப்பாமல் பொறுப்புடன் அனைத்து ஊடகங்களும் நடந்துகொள்ள வேண்டும். அவசியமற்ற தீய விடயங்களை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டியது அவசியமாகும்.

அதேபோன்று நாம் முன்னேறிச் செல்ல வேண்டுமென்றால் வலுவான சட்ட ரீதியான தீர்மானங்கள் சிலவற்றை முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

அண்மையில் மீதொட்ட முல்ல குப்பை மேடு சரிந்து பலர் உயிரிழந்தபோது அவ்விடயம் குறித்து பலரும் பேசி சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கூறினர். ஆனால் தற்போது அதனை எவரும் பொறுப்பேற்காமல் கவனிப்பாரன்றி கிடக்கிறது - என்றார். (எ)

# ரிசாத் ஒப்புக் கொண்டால் அனைவருமா பொறுப்பு?

## முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் அளுத்கமகே எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜூன் 8

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் பயங்கரவாதத்துக்கு துணைபோனதாக ஒப்புக் கொண்டார் எனில் அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகளும் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வார்களா? என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

தற்போதைய சூழ்நிலையில் ரிசாத் பதவி துறந்தமை மாத்திரமே நடைபெற்றுள்ளது. ஆனால் அரசு ஒருபோதும் மாறப்போவதில்லை. அரசை மாற்ற வேண்டிய தேவையும் எமக்கு இல்லை.

இதேவேளை முஸ்லிம் அமைச்சர்கள் ரிசாட்டுக்காக ஒன்றாக பதவி துறக்க முன்வந்துள்ளனர். அவ்வாறாயின்அவர்குற்றத்தை ஒப்புக்கொண்டால் அதற்கான பொறுப்பையும் அவர்கள் அனைவரும் ஏற்பார்களா?

இந்த நாட்டிலுள்ள 99 சதவீத முஸ்லிம் மக்கள், பயங்கரவாதத்துக்கு துணைபோக மாட்டார்கள். அவர்களுடன் சமூகத்தில் ஒன்றாக வாழ்வதனால் எமக்குத் தெரியும்.

அனைத்து அமைச்சர்களும் பதவி துறந்தமை சிறந்த விடயமல்ல. குறித்த செயற்பாட்டின் ஊடாக முஸ்லிம் மக்களை பிரிவினைவாதத்துக்குள் தள்ளிவிட முனைகின்றனர் - என்றார். (எ)

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய தலைவர் அவசியம்

கொழும்பு, ஜூன் 8

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதியதொரு தலைமைத்துவம் அவசியமாகியுள்ளது என்று அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் இரவு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது நாட்டுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் புதியதொருதலைமைத்துவம்தேவைப்படுகின்றது. புதிய சிந்தனைகள் மற்றும் கொள்கையுடைய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு மக்களுக்கு விரைவில் கிடைக்கும்.

திட்டமிட்ட அடிப்படையில் அரச தலைவர் தேர்தல் நடைபெறும். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மாற்றம் வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது. அதை ஏற்படுத்துவதற்கு கட்சிக்குள்ளும், வெளியிலும் அழுத்தங்களை பிரயோகிப்போம் - என்றார்.

அதேவேளை, சஜித் பிரேமதாசவை முன்னிலைப்படுத்தும் வகையில் அஜித் பி. பெரேராவால் அண்மைக்காலமாக வெளியிடப்பட்டுவரும் கருத்துக்கள் ஐ.தே.கவிலுள்ள ரணில் ஆதரவு குழுவை அதிருப்தியடைய செய்துள்ளது என சிறிகொத்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (எ)

# உயிர்த்த ஞாயிறு விசாரணை முடிவு

கொழும்பு, ஜூன் 8

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான விடயங்களை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட அரச தலைவர் ஆணைக்குழு தனது விசாரணைகளைப் பூர்த்தி செய்துள்ளது. இந்தக் குழுவினர் இறுதி அறிக்கையை தயாரித்து வருவதாக அரச தலைவர் செயலகம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க நேற்றுக் கேட்ட கேள்விக்கு பிரதம கொரடா அமைச்சர் கயந்த கருணாதிலக பதில் அளிக்கையில் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

சட்டமா அதிபரிடம் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எதிர்கால நடவடிக்கைக்கு அவரால் ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன. பொலிஸாரும் சம்பந்தப்பட்ட பிரிவினரும் இது தொடர்பான உண்மையான தகவல்களை நாட்டு மக்களுக்கு வழங்கி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ.5)

# மோடி 4 மணித்தியாலமே இலங்கையில் நிற்பார்

கொழும்பு, ஜூன் 8

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி ஆகக் கூடியது 4 மணித்தியாலங்களே இங்கு தங்கியிருப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாலைதீவில் இருந்து நாளை முற்பகல் சுமார் 11 மணியளவில் இந்திய தலைமை அமைச்சர் மோடி, கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வந்திறங்கவுள்ளார். அங்கிருந்து அவர், அதிவேக நெடுஞ்சாலை வழியாக, கொழும்பு வரவுள்ளார். அரச தலைவர் செயலகத்தில் இந்தியத் தலைமை அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

அதனையடுத்து, இரண்டு நாடுகளின் தலைவர்களுக்கும் இடையில் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

இருதரப்பு பேச்சுக்களை அடுத்து, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரையும், மோடி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்தப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு, 3 மணியளவில் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்குப் புறப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் நான்கு மணித்தியாலங்கள் வரையே அவர் இலங்கையில் தங்கியிருப்பார் என தகவல்கள் கூறுகின்றன. (ஒ.5)

## தெரிவுக்குழுவை...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திடீரென அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைகளை உடனடியாக நிறுத்துமாறு கடும் தொனியில் கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவை நிலுவையில் இருக்க, அது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு விசாரணை நடத்துவது உயர் நீதிமன்ற செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று சட்டமா அதிபர் எனக்கு அறிவித்திருந்தார். அதனை சபாநாயகருக்குத் தெரிவித்தேன். சபாநாயகர் அதனைச் சபைக்குத் தெரியப்படுத்தவில்லை என்று சபாநாயகர் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை அரச தலைவர் முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் பணி இடைநிறுத்தப்பட்ட அதிகாரிகள் சாட்சியமளித்துள்ளனர். அவர்களின் சாட்சியம் நாட்டு மக்களுக்கு எதற்கு? பணியில் உள்ள அதிகாரிகள் ஒருவரையும் தெரிவுக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்க அனுமதிக்க மாட்டேன். அதனால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நான்தான் பொறுப்பு.

தெரிவுக்குழு விசாரணையை உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லாவிடின் அமைச்சரவைக் கூட்டங்கள் இனி நடத்தப்படாது. மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தில் பலரைச் சிறைக்குள் தள்ளுவேன் என்று சீறிய அரச தலைவர் மைத்திரிபால, அமைச்சரவைக் கூட்டத்தின் இடைநடுவே வெளியேறியுள்ளார்.

தெரிவுக்குழு விசாரணையை ஒருபோதும் நிறுத்த முடியாது என்று தலைமை அமைச்சர், அமைச்சர்கள் அரச தலைவருக்கு நேரடியாகத் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணையில் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்த கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஆகியோர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்தனர். தெரிவுக்குழு விசாரணை ஊடகங்களில் வெளியாகியிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே அவசர அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடத்தப்பட்டது. தெரிவுக் குழு விசாரணையை நிறுத்துமாறு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர், மூத்த பொலிஸ் அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த அரச தலைவர், பணியில் உள்ள புலனாய்வு அதிகாரிகளை தெரிவுக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்க அனுமதிக்க மாட்டேன் என்று கூறியிருந்தார். (ஒ.5,22)

பதவி துறப்பு தொடர்பில்

# மகாநாயக்கர்களை தெளிவுபடுத்துவோம்

## ஹலீம் எம்.பி. அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

எமது பதவி விலகல்கள் தொடர்பாக மகாநாயக்க தேரர்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சந்தித்து தெளிவுபடுத்துவோம் என்று முன்னாள் அமைச்சர் எச்.எம்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் எமது மக்களுக்காகவே அமைச்சுப்பதவிகளை துறந்தோமே தவிர ரிசாத் பதியுதீனுக்காக பதவி துறக்கவில்லை. பயங்கரவாதத் தாக்குதலுக்கு பின்னர் சில ஊடகங்கள் மேற்கொண்ட பொய் பரப்புரை காரணமாக முஸ்லிம் மக்கள் மீது பல்வேறு நெருக்குவாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. முஸ்லிம் மக்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்க ஆரம்பித்தனர். அதனால் எமக்கெதிராக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபட்டுக்கொள்ளவே நாங்கள் இந்த தீர்மானத்தை எடுத்தோம்.

எம்மை மீண்டும் அமைச்சுப்பதவிகளை ஏற்க வேண்டுமென மகாநாயக்க தேரர்கள் எம்மிடம் கோரியுள்ளனர். நாம் மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை மதிக்கின்றோம். எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மகாநாயக்க தேரர்களை சந்தித்து எமது பதவி விலகலுக்கான காரணங்கள், எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவ்படுத்தவுள்ளோம், என்றார். (ஒ.5)

## மாணவன்..

விட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அண்ணனை இலக்கு வைத்துத் தாக்குவதற்கு வந்த கும்பல் 16 வயது மாணவனான தம்பியை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பித்துள்ளது. தலையில் படுகாயமடைந்த மாணவன் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் இடம்பெற்றது. முகத்தை மூடியவாறு வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் வீடு புகுந்த கும்பல், அடாவடியில் ஈடுபட்டதுடன், மாணவனை வெட்டிக்காயப்படுத்திவிட்டுத் தப்பித்துள்ளது. (ஒ.5,37)

## நவீன...

கொழும்பு, ஜூன் 8

அதிநவீன தகவல் தொடர்பாடல் உபகரணங்களுடன் சீனக் குடிமகன் ஒருவர் உள்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நீர்கொழும்பு ஏத்துக்கால் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய வீடொன்றை சோதனைக்குட்படுத்திய போதே மேற்படி அதிநவீன உபகரணங்களுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

வீட்டிலிருந்து 402 நவீன கையடக்க தொலைப்பேசிகள் (ஐபோன்), 17 ஆயிரத்து 400 சிம் அட்டைகள் மற்றும் 60 ரவுட்டர்கள் உட்பட பல்வேறு தகவல் தொடர்பாடல் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபரான சீன நாட்டவர் நுழைவிசைவு இல்லாமல் நாட்டில் தங்கியிருந்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் தொடர்பாடல் உபகரணங்களை பயன்படுத்தி பல சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5)

## இந்தியாவின்....

யாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும். வடக்கு - கிழக்கு இணைந்து இருப்பதே அவசியம். இலங்கை வரவுள்ள இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இடித்துரைக்க வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கட்டைப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பன்னாட்டுப் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது. சில முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்களின் தாக்குதல்களால் அப்பாவி மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் இந்திய தலைமை அமைச்சர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளார்.

அவர் அரசதலைவர், தலைமை அமைச்சர், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட பலரைச் சந்திக்கவுள்ளார். நாட்டில் நடைபெற்ற தாக்குதல்கள் தொடர்பில் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இந்தியாவில் பயிற்சி பெற்ற அமைப்பினர் சிலரும் இதில் தொடர்புபட்டுள்ளனர் என்று கூறப்பட்டு வருகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவங்களின் பின்னர் பன்னாட்டுப் பயங்கரவாத தீவிரவாதத்தை ஒழிக்க நட்பு நாடு என்ற ரீதியில் சகல உதவிகளையும் வழங்குவதாக இந்தியா உறுதியளித்துள்ளது. வடக்கு -கிழக்கு இணைக்கப்பட வேண்டும். அதன் முக்கியத்துவம் என்ன? என்பது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்திய தலைமை அமைச்சருக்கு எடுத்துரைக்க வேண்டும் - என்றார். (த-ரி1)

# ஸஹ்ரானின் சகாக்களின் சடலங்கள் தோண்டியெடுப்பு

கொழும்பு, ஜூன் 8

அம்பாறை, சாய்ந்தமருதில் ஏப்ரல் 26ஆம் திகதி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகள் நால்வரின், சடலங்கள் நேற்று தோண்டியெடுக்கப்பட்டன.

ஐ.எஸ். தீவிரவாதிகளான, தற்கொலைக் குண்டுதாரி ஸஹ்ரானின் குடும்பத்தினர் 16 பேர், சாய்ந்தமருதில் உள்ள வீட்டில் தங்கியிருந்த போது, அதனைப் படையினர் முற்றுகையிட்டனர். இதையடுத்து, அவர்கள், குண்டுகளை வெடிக்க வைத்து உயிரிழந்தனர். கொல்லப்பட்ட 16 பேரில், குழந்தைகள் தவிர ஏனையோரின் சடலங்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில், தனியாக புதைக்கப்பட்டன.

நடைபெற்று வரும் விசாரணைக்குத் தேவையான, பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக அம்பாறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், நான்கு பேரின் சடலங்கள் நேற்றுத் தோண்டியெடுக்கப்பட்டன. (ஒ.5)




## ஜிகாத்...

கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவில் இடம்பெற்ற தேர்தல்களில் தலைமை அமைச்சர் நரேந்திரமோடிக்கு கிடைத்துள்ள தீர்க்கமான மக்கள் ஆணை அரசின் கொள்கைகள் தொடரவேண்டும் என மக்கள் விரும்புவதை வெளிப்படுத்தியுள்ளது.

மோடி அரசின் இந்த கொள்கைகள் வலுப்படுத்தப்படுவதும் தொடர்வதும் இலங்கையின் நலன்களுடன் தொடர்புபட்டுள்ளது. இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் தலைமை அமைச்சர் மோடி இந்திய மக்களின் ஆதரவு மற்றும் நம்பிக்கையை தெரிவிக்கும் செய்தியுடன் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வார். பயங்கரவாதமும் தீவிரவாதமும் மனித குலத்துக்கான கூட்டு ஆபத்துக்கள். இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் இலங்கைக்கானவை மாத்திரமல்ல. உலகில் எந்தப் பகுதியில் இடம்பெறும் பயங்கரவாத தாக்குதலும் மனிதகுலத்தின் மனச்சாட்சிக்கு எதிரானது. இது நாங்கள் அனைவரும் ஒன்று என்ற உணர்வின் மீது தாக்குதலை மேற்கொள்கின்றது. இலங்கை வேண்டுகோள் விடுத்தால் இந்த விடயத்தில் தலைமை அமைச்சர் மோடி இலங்கைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவார் - என்றார். (ஒ.5,61)

## மூங்கிலாறு...

யில் பயணித்த இளைஞன் உயிரிழந்துள்ளத்தாகப் பொலிஸார் தெரிவித்தனர். தேராவில்லைச் சேர்ந்த 22 அகவையுடைய ரவீந்திரராசா பிரசாந் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

மூங்கிலாறிலிருந்து பரந்தன் நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

உந்துருளியில் பயணித்த இளைஞன் பேருந்தில் மோதுண்டு தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்ட போது அங்கு அவர் உயிரிழந்துள்ளார். புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள கைத்தொழில் பேட்டையில் பணியாற்றி வருகின்றமை குறிப்படத்தக்கது. (ஒ.5,ரி3)



சீனாவின் ஹுபேயான் மாகாணத்தின் யுய்யாங் நகரில் உள்ள ஷினுனிஹாய் தேசியப் பூங்காவில் சாகசத்தில் ஈடுபடும் இரண்டு ஆண்கள் இவர்கள். மலைகளை இணைத்துப்போடப்பட்ட கம்பியில் சைக்கிளை ஓட்டிச் செல்ல அதில் ஒருவர் தொங்கியவாறு செல்கிறார்.

மலாவியில் பதற்றம்

# தேர்தல் முடிவுகளுக்கு எதிராகப் போராட்டம்

## போராட்டத்துக்குள் சிக்கினார் அமெரிக்கத் தூதர்





லிலோங்வி,ஜூன் 8
மலாவியில் நடந்த அதிபர் தேர்தல் முடிவுகளை எதிர்த்து எதிர்க் கட்சி அலுவலகத்துக்கு முன்பு எதிர்க் கட்சி ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர். அந்தப் போராட்டம் பின்னர் வன்முறையாக மாறியது. எதிர்க்கட்சி அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்துப் பேச்சு நடத்திக் கொண்டிருந்த அமெரிக்கத் தூதர் விர்ஜினியா பால்மர் இந்தப் போராட்டத்துக்குள் சிக்கிக்கொண்டார். பின்னர் அங்கிருந்து அவர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார். மாலாவியின் தலைநகர் லிலோங்வியில் உள்ள கட்சி தலைமையகம் முன்பாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. வன்முறையாளர்கள் கற்களை வீசி தாக்கினர். இதனால், அவர்களைக் கலைப்பதற்காக அங்கு விரைந்த பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

**பின்னணி**
மலாவியில் கடந்த மே மாதம் 21ஆம் திகதி அதிபர் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் ஜனநாயக முன்னணிக் கட்சி வேட்பாளர் பீட்டர் முத்தாரிகா வெற்றி பெற்றார். மலாவி காங்கிரஸ் கட்சியின் தலைவர் லாசரஸ் சக்வேரா தோல்வியடைந்தார். இந்த தேர்தல் முடிவை ஏற்க மறுத்த லாசரஸ், இது தொடர்பாக நீதி மன்றில் வழக்குத் தொடர்ந்தார். தேர்தலில் முறைகேடுகள் செய்தே பீட்டர் முத்தாரிகா வெற்றி பெற்றார் என்று கூறி, காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## குடியேற வருமாறு கனடா அழைத்த செய்தி போலி!

ஒட்டோவா,ஜூன் 8
கனடாவின் தலைமை அமைச்சர்ஜஸ்டின்ட்ரூடோ 10லட்சம்குடியேறிகளைத் கனடாவில் நாட்டில் குடியேறச் செய்யுமாறு நாடுகள் சிலவற்றிடம் கேட்டு கொண்டதாக அண்மையில் செய்திகள் வெளியாகின. அந்தச் செய்தி போலியானது என்று பன்னாட்டு ஊடகம் ஒன்று சில ஆதரங்களுடனும், மேற்கோளுடனும்செய்திவெளியிட்டது. கனடா கோரும் 10இலட்சம் குடியேறிகளைநைஜீரியா, கென்யா, சிம்பாவே, ஷாம்பியா, கானா, பிலிப்பைன்ஸ் நாடுகளிலிருந்து கனடா குடியேறிகள் எதிர்பார்க்கப் படுவதாக முன்னர் வெளியாகிய செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் செய்திஉண்மைஇல்லை. கனடா அரசின் குடிவரவு அலுவலகமான 'கனடிய அகதிகள் மற்றும் குடிமக்களின் குடிவரவு அலுவலகம்' இத்தகைய திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்று தெரிவித்தது.
இந்தச்செய்திகள் அனைத்தும் தவறானவை. இந்த ஆண்டின் ஆரம்பததில் அறிவிக்கப்பட்ட கனடா குடிவரவு கொள்கையைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்டுள்ளன என்றும் அதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.



World Health Organization

## பாலியல் நோய்த் தொற்றுகளால் உலகில் 10 லட்சம் பேர் பாதிப்பு

### உலக சுகாதார நிறுவனம் தகவல்

ஜெனீவா,ஜூன் 8
உலகில் ஒவ்வொரு நாளும் 10 லட்சம் பேர் பாலியல் நோய்த் தொற்றுகளால் பாதிக்கப்பட்டுவருவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தது.
கோனோரியா, சிபிலிஸ், ச்லாமைதியா, ட்ரைகோமோனியாசிஸ் எனப் பாலுறவு மூலம் பரவும் இந்த நோய்த் தொற்றுகளுக்கு ஆளானவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கிறது உலக சுகாதார நிறுவனம். தற்போது அதிகம் பரவிவரும் ஒருவகை கோனோரியா நோயானது மருந்துகளுக்கு கட்டுப்படுவதில்லை என்றும் அது தெரிவிக்கிறது.
இந்த நோய்த் தொற்றுகளால், குழந்தை இறந்தே பிறப்பது, குழந்தையின்மை, நரம்பியல் நோய்கள், இதய நோய் போன்றவை ஏற்படுவதுடன், எச்.ஐ.வி. தொற்றுக்கான வாய்ப்பும் அதிகரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றுக்குச் சிகிச்சை பெறுவதும் ஆணுறை பயன்படுத்துவது போன்ற பாதுகாப்பு வழிகளை மேற்கொள்வதும் அவசியம் என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

தாய்வான் – சீனா விவகாரம்

# தாய்வானுக்கு ஆயுதம் வழங்கி தானும் தலையிடுகிறது அமெரிக்கா



பீஜிங், ஜூன் 8
தாய்வானுக்குப் போர் ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதற்குச் சீனாவின் அயலுறவு அமைச்சர் தனது கண்டனத்தை வெளியிட்டதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. சீனாவின் அமைச்சர் ஜெங் சுவாங், சீனாவின் தலைநகர் பீஜிங்கில் உள்ள ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் "அமெரிக்கா, தாய்வானுக்கு ஆயுதங்கள் விற்பதை உடனடியாக நிறுத்தவேண்டும், அவசியம் ஏற்பட்டால் நாங்கள் தாய்வானைப் பலவந்தமாக எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம்' எனக் கூறினார். இந்த விடயம் பற்றிக் கருத்துரைத்த தாய்வானின் பாதுகாப்புச் செயலர், எங்கள் நாட்டின் பாதுகாப்புக்காக 2 பில்லியன் டொலர்கள் செலவில், போர் வானூர்திகள், போர் டாங்கிகள் மற்றும் ஏவுகணைகள் போன்றவற்றை அமெரிக்காவிடம் இருந்து வாங்கவுள்ளோம் என்றார்.

**பின்னணி**
தாய்வானைச் சீனா தங்கள் நாட்டின் ஒரு பகுதியாகவே கருதுகிறது. ஆனால் அதை முற்றாக மறுக்கும் தாய்வான் தன்னைத் தனிநாடாக அறிவித்து வருகிறது. சீனா, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும், சீனாவின் பிராந்திய அத்துமீறலின் ஒரு பகுதியே தங்கள் நாடு மீது ஆதிக்கம் செலுத்த முற்படும் சீனாவின் போக்கு என்றும் தாய்வான் தெரிவிக்கிறது.
சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வாத்தகப் போர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில், தாய்வானுக்கு அமெரிக்கா பெருமளவு ஆயுதங்களை விற்கிறது.
இதனால் தாய்வான் சீனா பிரச்சினையைப் பயன்படுத்தி அமெரிக்கா சீனா மீதுள்ள தனது கோபத்தைத் தீர்ப்பதற்கு முற்படுகிறது என்றும் விமர்சனங்கள் உள்ளன.

## துபாயில் பஸ் விபத்து 17 பேர் பரிதாபச் சாவு

### ரம்ழான் கொண்டடி திரும்பியபோது சோகம்

அபுதாபி,ஜூன் 8
ஐக்கிய அரபு இராச்சியத்தின் நகர்களில் ஒன்றான துபாயில் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 17 பேர் சாவடைந்ததனர். ஓமன் நாட்டு தலைநகரம் மஸ்கட்டில் இருந்து துபாய் நோக்கி 30பயணிகளுடன் பயணித்த பேருந்து ஒன்றே துபாயில் இவ்வாறு விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் 5 பேர் காயம் அடைந்தனர்.
ஓமனில் ரம்ழான் கொண்டாட்டங்களில் பங்குகெடுத்துத் திரும்பியவர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகினர். இந்தச் சம்பவம் அங்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.





சிரியாவில் பரவலாக நடந்துவருகின்ற போர்களில் கொல்லப்பட்ட தங்கள் உறவுகளின் கல்லறைகளையும் அவை அமைந்த பகுதியில் போர் ஏற்படுத்திய பாதிப்புகளையும் பார்வையிடும் மக்கள்.

## புடின் – ஷி ஜின் பிங் சந்திப்பு

# சீனா- ரஷ்யா இடையே வர்த்தக ஒப்பந்தங்கள்

### அமெரிக்காவுக்கு எதிரான கூட்டு எனப் பேச்சு

மொஸ்கோ,ஜூன் 8

ரஷ்யாவுடனான தமது வர்த்தக உறவுகள் தொடர்பாகக் கலந்தாலோசிப்பதற்காக மூன்று நாள்கள் சுற்றுப் பயணமாக ரஷ்யா சென்றுள்ளார் சீன அதிபர் ஷி ஜின்பிங். ரஷ்யா சென்ற ஜின் பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தன்னுடைய நெருங்கிய நண்பர் என்று மகிழ்ச்சி வெளியிட்டார்.



சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே வர்த்தகப் போர் வலுப்பெற்றிருக்கும் சூழலில் ஷி ஜின்பிங் இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளமை சுட்டிக்காட்டப்படுகிறது.

அமெரிக்காவின் எதிர் நிலைகளில் இருக்கின்ற ரஷ்யாவும் சீனாவும் ஒன்றித்துள்ளன என்றும் கருத்துருவாக்கங்கள் எழுந்துள்ளன. அமெரிக்கா அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்றதிலிருந்து அமெரிக்காவுக்கு இந்த இரண்டு நாடுகளுக்குமான உறவு சுமூகமாக இல்லை.

மேற்குலகத்தால் புறக்கணிக்கப்படுகிறோம் என்ற உணர்வு ரஷ்யா - சீனா நாடுகளின் உறவைப் பொருளாதார ரீதியாகவும், ராணுவ ரீதியாகவும் இன்னும் நெருக்கமாக்குகிறது என்கிறார்கள் வல்லுநர்கள்.

அமெரிக்காவால் தடைக்குள்ளாகியிருக்கும்ஹுவாவி நிறுவனம் ரஷ்யாவின் எம்.டி.எஸ். நிறுவனத்துக்கு 5ஆம் தலைமுறை தொலைத் தொடர்புச் சேவையை மேம்படுத்தி வழங்கும் ஒப்பந்தம் ஒன்றும் இந்தச் சுற்றுப்பயணத்தில் கையெழுத்தாகியதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## கீச்சகத்தில் யோகா வெளியிடும் மோடி

புதுடெல்லி,ஜூன் 8

பன்னாட்டு யோகா தினம் எதிர்வரும் 21ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. இந்த யோகா தினத்தின் முன்னோட்டமாகக் கடந்த புதன்கிழமை இந்தியத் தலைமை அமைச்சர் மோடி வெளியிட்ட கீச்சகப் பதிவில், அவர் திரிகோணாசனம் என்கிற யோகாவின் ஆசனமுறைமை ஒன்றைச் செய்வது போன்ற கார்ட்டூன் காணொலியை வெளியிட்டார். பின்னர் நேற்று முன்தினமும் யோகாசனம் பற்றிப் பதிவிட்ட மோடி தடாசனம் செய்வதால் மற்ற ஆசனங்களைசெய்வதுசுலபமாக இருக்கும் என்றும், அந்த ஆசனத்தை எப்படிச் செய்வது என்பதை விளக்கும் கார்ட்டூன் காணொலியையும் வெளியிட்டார்.




# ரஷ்யாவில் பாலத்தைக் காணவில்லை

### குழப்பத்தில் பொலிஸார்!

மொஸ்கோ,ஜூன் 8

ரஷ்யாவின் மூர்மன்ஸ்க் பகுதியில் உம்பா என்கிற நதியைக் கடக்கும் விதமாக அமைக்கப்பட்டிருந்த 56 தொன்கள் எடை கொண்ட 75 அடி நீள பாலம் இருந்த இடத்தில் இருந்து திடீரெனக் காணாமல் போயுள்ளது. இந்தச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது. விசாரணைகள் முடுக்கி விடப்பட் டுள்ளன.

இந்தப் பாலத்தைத் திருடர்கள் திரு டிச் சென்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது. காணாமல் போன பாலத்தின் சுவடுகள் அங்கு இல்லை. பாலம் கீழே விழுந்து உடைந்திருந்தால் அதன் இடிபாடுகள் இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எவ்வித அடையாளமும் துளியளவும் இல்லை என்பதாலேயே அது திருடப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் இவ்வளவு பெரிய பாலத்தை எப்படி அவர்கள் கொண்டுசென்றிருக்கமுடியும்என்பது புரியாத புதிராக உள்ளதாகப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.





## இன்றைய நாள்

**மேடம்:** அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் நேரம் பணிபுரிவீர்கள். எதிர்பார்த்த அளவில் பணவரவு இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**இடபம்:** உங்கள் செயலில் மதிநுட்பத் திறன் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். உபரி பணவருமானம் கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** பணிகளுக்கு தகுந்த முன்னேற்பாடு அவசியமாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் சுமூக நிலை இருக்கும். அளவான பணவரவு உண்டு. இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

**கடகம்:** உங்கள் செயல்களில் திறமை பரிமளிக்கும். நண்பர்களின் புகழ்ச்சி வார்த்தையை பெரிதுபடுத்தாமல் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதியவழி உருவாகும். பணவரவு அதிகரிக்கும்.

**சிம்மம்:** எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. தொழில், வியாபா ரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**கன்னி:** குடும்பத்தினரிடம் அன்பு, பாசம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். பணவரவும், நன்மையும் திருப்திகரமாக கிடைக்கும். வீட்டு உபயோக பொருள் வாங்குவீர்கள்.

**துலாம்:** உங்கள் செயல்களில் நேர்த்தியும், திறமையும் மிகுந்திருக்கும். தொழில், வியாபாரம் சிறந்து மனதில் உற்சாகம் பெறுவீர்கள். நிலுவைப்பணம் வசூலாகும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** சொந்த நலனில் அக்கறை ஏற்படும். எதார்த்த பேச்சு சிலரிடம் அதிருப்தியை உருவாக்கலாம். தொழில், வியாபாரம் சீராக அதிகம் உழைப்பது நல்லது.

**தனுசு:** அவசரப்பணி ஏற்படலாம்; சூழ்நிலை உணர்ந்து செயல்பட வேண்டும். தொழில்; வியாபாரத்தில் வளர்ச்சிபெற கூடுதல் உழைப்பு பயன்தரும். சேமிப்பு பணம் செலவாகும்.

**மகரம்:** குடும்ப உறுப்பினர் அதிக பாசம் கொள்வர். தடைகளை தகர்த்தெறிய பணிபுரிவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். பணப்பரிவர்த்தனை முன்னேற்றமாகும்.

**கும்பம்:** அன்பானவர்களின் ஆலோசனை நல்வழி காட்டும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலை சீராகும். எதிர்பார்த்த அளவில் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** உங்கள் செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை வளர்க்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும்.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன்8
வடமாரட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஜூன் 8
ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று இடம் பெறும் காலிறுதியாட்டங்களில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

காலை 10 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மதியம் 2.30 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது காலிறுதியாட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் நான்காவது காலிறுதியாட்டத்தில் வலைப்பாடு மெசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஜூன் 8
ஞானம்ஸ் பெயின்ற், யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் விஜயரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான ரி -20 துடுப்பாட்டத் தொடர் புற்தரை பிட்சில் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதில் காலை 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிறாஸ் கோப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மதியம் 11.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஜூன் 8
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடர் இன்று காலை 8 மணிக்கு அரியாலை சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. மேற்படி போட்டியில் வடக்கு மாகாணத்தில் இருந்து 60 அணிகள் பங்கு பற்றுகின்றன. (23)




### பெண்களுக்கான ரென்னிஸ் போட்டியில்

# வைத்தீஸ்வரா கல்லூரி வசமானது கிண்ணம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ரென்னிஸ் போட்டியில் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி அணி வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பெண்களுக்கான ரென்னிஸ் போட்டி நேற்று முன்தினம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வைத்தீஸ்வரா கல்லூரி அணி மோதியது.

ஒற்றையர் ஆட்டத்தில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த தனிஜாவை எதிர்த்து வைத்தீஸ்வரா கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ஹர்சனா மோதினர். இதில் தனிஜா 6:4, 6:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். 2ஆவது ஒற்றையர் ஆட்டத்தில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த கனுஜாவை எதிர்த்து வைத்தீஸ்வரா கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த நிரோஜினி மோதினார். இதில் வைத்தீஸ்வரா கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த நிரோஜினி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 6:0, 6:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். இரு அணிகளும்

சம புள்ளிகளை பெற்றமையால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் இரட்டையர் ஆட்டத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த தனுஷா, ஜெதுஷா இணையை எதிர்த்து சுண்டுக்குழி மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த கீர்த்தி, தர்சி இணை மோதினர். இதில் வைத்தீஸ்வரா கல்லூரி இணை 7:5, 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (422)

## ஆசிகாவுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20வயதுப்பிரிவு பெண்களுக்கான பளு தூக்கு போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆசிகா தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்ததுடன் சிறந்த வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டார். கந்தர்மடம் சிவபிரகாச வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான பளுதுக்கு போட்டியில் 71கிலோ எடைப் பிரிவில் 170கிலோ எடைப் பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்தார். அத்துடன் சிறந்த வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டார். (23)





## கலைமகளுக்கு 3 வெள்ளி பதக்கங்கள்

டி
யாழ்ப்பாணம், ஜூன்8
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17வயதுப் பிரிவு,20வயதுப்பிரிவு பெண்களுக்கான பளு தூக்குப் போட்டியில் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் 3 வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றது.

கந்தர்மடம் சிவபிரகாச வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற 17வயதுப் பிரிவு பெண்களுக்கான பளுதூக்கு போட்டியில் யதுர்சனா 71 கிலோ எடைப் பிரிவில் 73 கிலோ எடைப் பளுவையும், 20வயதுப் பிரிவு பெண்களுக்கான பளு தூக்குப் போட்டியில் அருள்மதி 45 கிலோ எடைப் பிரிவில் 73 கிலோ எடை பளுவையும், 20வயதுப் பிரிவு பெண்களுக்கான பளு தூக்கு போட்டியில் அனித்தா 76 கிலோ எடைப் பிரிவில் 75 கிலோ எடைப் பளுவைத் தூக்கியும் வெள்ளிப் பதக்கங்களைக் கைப்பற்றினர். (23)

## இளவாலை கன்னியர்மடத்துக்கு 2 தங்கம், 3 வெள்ளி, வெண்கலம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17வயது ,20வயதுப்பிரிவு பெண்களுக்கான பளு தூக்கு போட்டியில் இளவாலை கன்னியர்மடம் 2 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளி பதக்கங்கள், ஓர் வெண்கலப்பதக்கம் உட்பட 6 பதக்கங்களைப் பெற்றது.

கந்தர்மடம் சிவபிரகாசவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான பளு தூக்குப் போட்டியில் டிலுசா 81 கிலோ எடைப் பிரிவில் 98 கிலோ எடைப் பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும்,17வயதுப் பிரிவு பெண்களுக்கான பளு தூக்குப் போட்டியில் மகிழினி 45 கிலோ எடைப் பிரிவில் 79 கிலோ எடைப் பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், பாரதி 59 கிலோ எடைப் பிரிவில் 63 கிலோ எடைப் பளுவையும், டினுசா 66 கிலோ எடை பிரிவில் 69 கிலோ எடைப் பளுவையும், மேரி ஜெனிஸ்ரலா 85 கிலோ எடைப் பிரிவில் 76 கிலோ எடைப் பளுவை தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும்,17வயதுப் பிரிவு பெண்களுக்கான பளு தூக்குப் போட்டியில் மதினி 64 கிலோ எடைப் பிரிவில் 62 கிலோ எடைப் பளுவைத்தூக்கி வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர். (23)




## மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு முதலாவது பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு முதலாவது பதக்கம் கிடைத்தது.



கந்தர்மடம் சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பளு தூக்குப் போட்டியில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் சார்பில் பங்கு பற்றிய சபினா 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான பளுதூக்குப் போட்டியில் 81 கிலோ எடைப் பிரிவில் 67 கிலோ எடைப் பளுவைதூக்கி வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (23)







## ஸ்டார்க் முதலிடம்

உலகக் கிண்ணத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிச்சல் ஸ்டார்க் 5 இலக்குகளைக் கைப்பற்றி இந்த உலகக் கிண்ணத்தில் ஒரே போட்டியில் 5 இலக்குகளைக் கைப்பற்றிய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதன்மூலம் அவர் ஒரு நாள் போட்டியில் 150 இலக்குகளைக் கைப்பற்றினார். மேலும் அதிவேகமாக 150 இலக்குகளை வீழ்த்தியவர்களில் முதலிடத்தை பிடித்தார்.

அவர் 77 போட்டிகளில் இந்த மைல் கல்லை எட்டியுள்ளார். இதற்கு முன்பு பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஸ்தாக் 78 போட்டிகளில் 150 இலக்குகளைக் கைப்பற்றியதே சாதனையாக இருந்தது. அதை மிச்சல் ஸ்டார்க் முறியடித்தார்.



## ஆட்டத்தை மாற்றிய நடுவர்களின் தீர்ப்பு

### பிரித்வைட் காட்டம்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் மேற்கிந்தியத்தீவுகள் - ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியா அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் மேற்கிந்திய வீரர்களுக்கு எதிராக நடுவர்கள் தவறு இழைத்தனர் என்றும் இதனால்தான் நாங்கள் தோற்றோம் என்றும் அந்த அணியின் சகலதுறை வீரர் பிரித்வைட் கடுமையாகச் சாடியுள்ளார்.

மேற்கிந்திய அணி துடுப்பெடுத்தாடிய போது நான்காவது பந்துப்பரிமாற்றத்தின் ஐந்தாவது பந்தில் மிச்சல் ஸ்டாக் எல்.பி.டபிள்யு முறையில் கிறிஸ்கெய்லை ஆட்டமிழக்கச் செய்தார். பின்னர் தொலைக்காட்சி ரீபிளேக்கள் மூலம் அந்த பந்துக்கு முதல் பந்து முறையற்ற பந்து வீச்சு என்பதும், நடுவர் கவானே அதனை கவனிக்க தவறிவிட்டார் என்பதும் தெரியவந்தது.

'பிறீஹிட்டாக' அறிவிக்கப்பட்டிருக்கவேண்டிய பந்தில் கெய்ல் நடுவரின் தவறினால் ஆட்டமிழந்தமை கடும் பரபரப்பை ஏற்படுத்தியது. கிறிஸ்கெய்ல் ஆட்டமிழப்பதற்கு முன்னரும் நடுவர்கள் அவருக்கு எதிராக இரண்டு தவறான தீர்ப்புகளை வழங்கியமையும் கெய்ல் அவற்றை மறு ஆய்வுக்கு உட்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

முதலில் கெய்ல் இலக்குக் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் என நடுவர் கவானே அறிவித்தார். அதனை கெய்ல் மறு ஆய்வுக்கு உட்படுத்தினார். அதன் பின்னர் நடுவர் வழங்கிய எல்.பி.டபிள்யு தீர்ப்பும் பிழையானது என்பது மறு ஆய்வின் மூலம் தெரியவந்தது.

பின்னர் இலங்கை நடுவர் ருச்சிர பல்லியகுரு மேற்கிந்திய அணியின் தலைவர் ஜேசன்ஹோல்டர் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார் என இரு தடவைகள் அறிவித்தார். ஆனால் மறுஆய்வின் போது அவை. தவறான முடிவுகள் என்பது தெரியவந்தது.

இவ்வாறான நடுவர்களின் தவறுகளுக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் பிரித்வைட் கண்டனத்தை தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நடுவர்களின் முடிவுகள் அணியினர் மத்தியில் கடும் விரக்தியையும் குழப்ப நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில வருடங்களாக மேற்கிந்திய அணியினருக்கு எதிராக பிழையான தீர்ப்புகளை நடுவர்கள் வழங்குவது அதிகரித்துள்ளது.

ஒவ்வொருமுறை எங்கள் கால்களில் பந்து படும்போதும் நடுவர்களின் விரல்கள் உயர்கின்றன எதிரணியின் கால்களில் பந்துபடும்போது விரல்கள் உயர்வதில்லை. இதன் காரணமாக நாங்கள் அடிக்கடி முடிவுகளை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றோம்.

இதனை தெரிவிப்பதற்காக எனக்கு அபராதம் விதிப்பார்களா? என்பது தெரியவில்லை ஆனால் நடுவர்களின் தீர்ப்புகள் கடும் ஏமாற்றத்தை அளித்துள்ளன. நாங்கள் பந்து வீசும்போது சில பந்துகளை அவர்கள் பிழையாக அகலப்பந்து என அறிவித்தனர். நடுவர்களின் தவறு எமது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை குழப்பியது இதனால் நாம் இந்தப் போட்டியில் தோல்வியடைந்தோம் - என்றார்.



| Team | | M | W | L | NRR | Pts |
|---|---|---|---|---|---|---|
| 1 | NZ | 2 | 2 | 0 | +2.279 | 4 |
| 2 | AUS | 2 | 2 | 0 | +1.059 | 4 |
| 3 | SL | 3 | 1 | 1 | -1.517 | 3 |
| 4 | PAK | 3 | 1 | 1 | -2.412 | 3 |

### புள்ளிப் பட்டியலில்

# 3ஆவது இடத்தில் இலங்கை அணி

நடப்பு உலகக் கிண்ணத்தின் 11ஆவது போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் நேற்று மோதவுள்ள நிலையில் பிரிஸ்ரோவில் பெய்த கடும் மழை காரணமாக போட்டி இடை நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து மழை பெய்த காரணத்தால் நாணயச் சுழற்சிகூட இடம் பெறாது போட்டி கைவிடப்பட்டது. இதனடிப்படையில் இரு அணிகளுக்கும் தலா ஒவ்வோர் புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டன.

இதனடிப்படையில் இலங்கை அணி புள்ளிப்பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. முதலாவது இடத்தை நியூசிலாந்து அணியும், இரண்டாவது இடத்தை ஆஸ்திரேலியாவும் பிடித்துள்ளன.

## ஆஸியுடனான போட்டியில் அதிக கவனம் தேவை – சச்சின்

நடப்பு உலகக் கிண்ணத்தில் இந்திய அணி தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது. அந்த அணி இரண்டாவது போட்டியில் ஆஸ்திரேலியா அணியுடன் மோதவுள்ளது. இந்தப் போட்டியில் இந்திய அணி மிகக் கவனமாகச் செயற்படவேண்டும் என்று அந்த அணியின் முன்னாள் வீரர் சச்சின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

தடைக் காலம் முடிவடைந்து சிமித், வோர்னர் ஆஸ்திரேலியா அணியில் இணைந்திருப்பது அந்த அணிக்கு மிகப்பெரும்பலம். நடைபெற்ற முடிந்த ஆஸ்திரேலிய அணியின் போட்டிகளிலும் இந்த இரண்டு வீரர்களும் அதிக ஓட்டங்களைக் குவித்திருந்ததைக் காணமுடிந்தது.

ஓவல் மைதானம் வேகப் பந்து வீச்சுக்கு சாதகமானது என்பதால் இந்திய அணி வீரர்கள் எச்சரிக்கையுடன் விளையாடவேண்டும் - என்றார்.

## பெண்களுக்கான உலகக் கிண்ண கால்பந்து தொடர் இன்று ஆரம்பம்

பெண்களுக்கான எட்டாவது 'பிபா' உலகக் கிண்ண கால்பந்து போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இன்று ஆரம்பமாகின்றது.

1991ஆம் ஆண்டிலிருந்து பெண்களுக்கான உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் எட்டாவது உலகக் கிண்ணத் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஆரம்பமாகின்றது. இதில் 24 நாடுகள் பங்கேற்கின்றன.

ஆசிய நாடுகளில் சீனா, ஜப்பான், கொரியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் மட்டுமே பங்கேற்கின்றன. இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் பிரான்ஸ் - தென்கொரியா அணிகள் மோதுகின்றன.

**Techno World**
**தொழில்நுட்பப் பிரிவு**

**A/L 2021 ஆரம்பம்**

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

08.06.2019
சனிக்கிழமை
காலை 8.30

077 017 5346
077 170 3549
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# கையுறை முத்திரை விவகாரம் டோனிக்கு பி.சி.சி.ஐ. ஆதரவு

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான போட்டியின் போது இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் டோனியின் கையுறையில் ராணுவ பலிதான் முத்திரை பதித்தது போல் காணப்படுகின்றது என்று பல்வேறு தரப்பினரால் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டது.

முதலில் இந்தக் காட்சியைப் பார்த்த டோனியின் ரசிகர்கள், அவருக்கு இருக்கும் நாட்டுப்பற்றைப் புகழ்ந்து, சமூக ஊடகங்களில் அவரைப் பாராட்டினர். இதன் பின்னர் இது சமூக ஊடகங்களில் பரவலாக பேசப்பட இந்த விடயம் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் கவனத்துக்குக் கொண்ட செல்லப்பட்டது.

உலகக் கிண்ணப் போட்டியில் ஒருநாட்டின் ராணுவ முத்திரையைப் பதித்து விளையாடுவதை பன்னாட்டு கிரிக்கெட் சபை விரும்பவில்லை. இதனால் பன்னாட்டு கிரிக்கெட் சபை டோனிக்கும், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கும் இதனைத் தெரிவித்தது. ஒரு நாட்டு இராணுவத்தினரின் முத்திரையை அணிந்து விளையாடுவது பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிகளுக்க முரணானது. இதுமுதல் முறையாக செய்த குற்றம் என்பதால், இதனை மீளச் செய்யாதீர்கள் என கேட்டுக்கொள்கின்றோம். இது இவ்வாறு இருக்க இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை டோனிக்கு ஆதரவாக பதிலளித்துள்ளது.

டோனி தனது கையுறையில் இருக்கும் முத்திரையை நீக்கத் தேவையில்லை. இதைத் தொடர்ந்து பயன்படுத்த பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் முறைப்படி அனுமதி கேட்டுள்ளோம். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறையின்படி, வீரர்கள் வர்த்தகரீதியான, மதம்,ராணுவம் தொடர்பான அடையாளங்களை அணியக்கூடாது என்பதே விதிமுறை. ஆனால், டோனி கையுறையில் இருக்கும் முத்திரை அவ்வாறு இல்லை.

அதேசமயம், இது துணை ராணுவப் படைக்கு உரிய அடையாளம் என்று தோனியின் கையுறையில் இருக்கும் முத்திரையை கூற முடியாது. தோனி எந்தவிதமான விதிமுறையையும் மீறவில்லை. டோனியின் கையுறையில் இருக்கும் முத்திரையில் இருக்கும் வார்த்தை மட்டுமே பலிதான் என்று இருக்கிறதே தவிர அது இராணுவத்தோடு தொடர்புடையது அல்ல என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

**பணியாளர் தேவை**

வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிக்கப் பெண் பணியாளர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
வயது - 35 - 40
**077 789 4229**

**வடஇந்திய பத்திரிநாத் கேதார்நாத் கங்கோத்திரி ஜமுனோத்திரி யாத்திரை**

நாள்கள் : 16 | ஆரம்பம் : 16.07.2019 | யாத்திரீகர் : 20

செல்லுமிடங்கள் சுருக்கமாக :
டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், ரிஷிகேஸ், சிவானந்த ஆச்சிரமம், தொங்குபாலம், ராமர்கோயில், லக்சுமணர் கோயில், ஹரித்துவார், கங்காபூசை, மானுசாதேவி, மந்திர் சண்டிதேவிமந்தி இவை இரண்டு ஆலயங்களும், தொங்கு ஊஞ்சல்(விஞ்சில்) பயணம், கங்கோத்தி, அம்மன் ஆலயம், ஜமுனோத்திரி, அம்மன் ஆலயம்,பத்திரிநாத் 108 வைஸ்ணவ ஆலயங்களில் முதன்மையான ஆலயம், மானா, சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம், கேதாநாத் திருக்கயிலாயமலைக்கு சமமான ஆலயம், வேறு இடங்களும் காணலாம், சென்னையில் ஒரு நாள் சொப்பிங்
NB கேதார் நாத் கெலிக்கொப்ரர் பயணம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை
4விமானரிக்கட், இந்தியாவில் சுற்றிப்பார்க்க A.C வாகன வசதி, மடப்பள்ளி ஆள்கள் மூலம் உடனுக்குடன் சமைத்த மூன்று வேளை உணவு, காப்பி, ரீ, மினரல்வாட்டர் (குடிநீர்) 2பேருக்கு கட்டில், மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை, இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் விபரத்தை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

வந்தவர்களைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.

விபரங்களுக்கு : கலாநிதி. T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
sriranganathan2601@gmail.com | sridevisriranganathan.thuraiappa
**077 768 0102/ 077 736 2154**

(IN 10331) (14.17)

Hearing Systems SIEMENS

செவிப்புலனுக்கான முழுமையான தீர்வு
ஜேர்மன் தொழிநுட்பத்தில் தயாரிக்கப்பட்ட
பல வகையான

**காது கேள் கருவிகள்**




**இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் காது கேட்க வைக்கும் கருவிகளை பொருத்தி பரீட்சித்தல்**

இன்றே உங்கள் அருகில் அமைந்துள்ள கிளினிக்கிற்கு செல்லுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 025 2234386 | கண்டி | 081 2204398 | மகரகம | 011 2838662 |
| அவிசாவளை | 036 2222191 | கேகாலை | 035 2221524 | மாத்தறை | 041 2235111 |
| பத்தரமுல்லை | 011 2879243 | களுத்துறை | 077 7235648 | மாலபே | 077 7511261 |
| மட்டக்களப்பு | 065 2229114 | குருநாகல் | 037 2231669 | கொழும்பு 03 | 077 7511260 |
| கொழும்பு 03 | 011 2564533 | கொகுவளை | 011 2852620 | பன்னிபிட்டி | 011 2839837 |
| கோர்டன் பிளேஸ் | 011 2680175 | கிரிபத்கொடை | 011 2991177 | வத்தளை | 011 2946318 |
| தெல்கந்த | 011 2815490 | கொட்டாவ | 011 2172394 | வெள்ளவத்தை | 011 2363248 |
| காலி | 091 2226596 | நுகேகொட | 011 2824816 | கொழும்பு 10 | 011 2690510 |
| கம்பகா | 033 2236762 | நுகேகொட நியூசொப் | 011 2822829 | | |
| யாழ்ப்பாணம் | 021 2219288 | | | | |

நாடு பூராகவும் கிளைகள்
யாழ்ப்பாணம் Hotline-021 2219288, 021 222 8109

wickramarachchi HEARING CARE
www.hearcare.lk

இவ்வங்கிகளின் அட்டைமூலம் தவணை முறையில் பணம் செலுத்தி காது கேள் கருவிகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

HNB | SEYLAN | NDB bank | Nations TrustBank | CargillsBank | PAN ASIA BANK The Understanding Bank

VISUALS

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 07.06.2019 | 2534 | நீலம் |

மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 08 19 45 55
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 5,446,930 /=
09.06.2019ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824, Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 983
சீட்டிழுப்பு திகதி 2019.06.06 வியாழக்கிழமை
P 37 42 43 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,823,808/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

**நியத்த ஜய**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 777 | சீட்டிழுப்பு திகதி 07.06.2019
வெற்றி இலக்கங்கள்: 38 52 53 62 E
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 26, 996, 096/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 632
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.06.07
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,998,270/-
வெற்றி இலக்கங்கள்: 12 18 40 51 S
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# OBITUARY



23.03.1928 — 05.06.2019

## Mrs. Lizzie Kanmani Arulampalam

Mrs. Lizzie Kanmani Arulampalam beloved wife of late Dr. K. Arulampalam, loving mother of David, Ranji, Charles (UK) and Dano (Australia), affectionate mother-in-law of Shantha, Ravi, Bernie (UK) and Thaya (Australia), adored grandmother of Neville and Julie, Neil, Vidiya (UK), Jeremy (UK), Timothy (Australia) and Naomi (Australia) doting great-grandmother of Jerusha and Alan, precious sister of Jothimalar (Canada), late Padmini (Canada), Margaret (Jesus Lives), John (Canada) and Anton entered into glory on 5th June 2019. Funeral service will be held at "Retnapathy", Karanavai East, Karaveddy on Sunday 9th June at 3.00p.m. Burial will follow at Methodist Mission cemetery Point Pedro.

"Retnapathy"
Karanavai East, Karaveddy.

Daniel Jebakumar
(Son)

T.P.0777110426

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.